உதயன்

www.onlineuthayan.com

28: பக்கங்கள் சுடர் 27 கதிர் 327 வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 02 வியாழக்கிழமை (18/10/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 20.00

விரைவான தீர்வையே எதிர்பார்க்கிறது ஐ.நா.

இலங்கையிடம் மீண்டும் வலியுறுத்தினார் பான் கீ-மூன்

கொழும்பு, ஒக்ரோபர் 18

இலங்கையில் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் முடிவுக்கு வந்த ஈள் நாட்டுப் போருக்கு அடிப்படைக் காரணமான பிரச்சினைக்கு, விரைவாக அரசியல்தீர்வு காணவேண்டும். இதுவே ஐ.நாவின் விருப்பம் – என்று ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ-மூன் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை ஜனாதிபதியின் மனித

பார்க்க பக்கம் 4

இலங்கையின் ஆயுதக் கப்பல் அரபு குடியரசில் தடுத்து வைப்பு

கொழும்பு, ஒக் 18

இலங்கை அரசுக்குச் சொந்தமான- மிதக்கும் ஆயுதக்களஞ்சியமாகச் செயற்படும் - கப்பல் ஒன்றை ஐக்கிய அரபுக் குடியரசு தடுத்து விசாரித்துள்ளது.

கடற்கொள்ளையர்களின் ஆபத்துமிக்க கடற்பகுதியில் வணிகக் கப்பல்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும், பாதுகாப்பு நிறுவனங்களுக்கு ஆயுதங்களை வாடகைக்குக் கொடுக்கும் மிதக்கும் ஆயுதக் களஞ்சியமே தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இலங்கைக் கொடியுடன் ஐக்கிய அரபுக் குடியரசுக் கடலில் தரித்து நின்ற சிந்துபாத் என்ற மிதக்கும் ஆயுதக்களஞ்சியமான கப்பலே, கடந்த முதலாம் திகதி அந்த நாட்டுக் கடலோரக் காவல்படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கப்பலை இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் 'அவன்ட் கிறேட் மறிறைம்' நிறுவனமே இயக்கி வருகிறது. இந்த நிறுவனம் இலங்கைக்குத் தெற்கிலும், செங்கடலிலும் மேலும் இரு மிதக்கும் ஆயுதக் களஞ்சியங்களைக் கொண்டுள்ளது.

இந்த மிதக்கும் ஆயுதக் களஞ்சியங்களில் உள்ள தன்னியக்கத் துப்பாக்கிகள், வெடிபொருள்கள், உடற்கவசங்கள், இலகு இயந்திரத் துப்பாக்கிகள், இரவுப்பார்வை கருவிகள் போன்றவற்றைப் பாதுகாப்பு நிறுவனங்கள் வாடகைக்குப் பெற முடியும் என்று 'அவன்ட் கிறேட்' நிறுவனத்தின் இணையத் தளத்தில் கூறப்பட்டுள்ளது.

பார்க்க பக்கம் 4

காய்ச்சலால் பீடிக்கப்பட்ட சிறுமி சாவு

யாழ்ப்பாணம், ஒக்.18

காய்ச்சலால் பீடிக்கப்பட்ட மூன்று வயதுச் சிறுமி நேற்றுப் புதன்கிழமை திடீரென உயிரிழந்தார்.

அன்னமார் கோயிலடி புத்தூரைச் சேர்ந்த லேதரன் கலைப்பிரியா (வயது-3) என்ற சிறுமியே கடந்த செவ்வாய்க்கிழமை காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது,

பார்க்க பக்கம் 4

"மக்கள் பிரதிநிதிகளைத் தாக்காதே" யாழ்.நகரில் நேற்று ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.18

நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் தாக்கப்பட்டமையைக் கண்டித்தும், தமிழர் தாயகப் பிரதேசங்களிலிருந்து இராணுவத்தினர் வெளியேற வேண்டுமெனக் கோரியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் யாழ். மத்திய பஸ் நிலையத்தின் முன்பாக நேற்று மதியம் மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

யாழ்.மத்திய பஸ் நிலையத்தின் முன்பாக மு.ப. 11 மணியளவில் ஒன்றுகூடிய

பார்க்க பக்கம் 4

2 2013ஆம் ஆண்டுக்கான உத்தேச நிதிஒதுக்கீட்டுச் சட்டவரைவு, அரச நிதி மீதான நாடாளுமன்ற அதிகாரங்களை காரைவார்த்துக் கொடுப்பதற்கு இட்டுச் செல்லும்.

8 இளைய ஆதீனமாக பொறுப்பில் இருப்பதற்கு சுவாமி நித்தியானந்தா தகுதியில்லாதவர் என்று தமிழக அரசு சென்னை உயர் நீதி மன்றத்தில் தெரிவித்தது.

9 நவீன ரக குண்டு மூலம் அல்குவைதா தீவிரவாதத் தலைவர் ஒசாமா பின் லேடனை கொலை செய்ய அமெரிக்கா திட்டமிட்டிருந்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அமைச்சர் டக்ளஸை திட்டித் தீர்த்த மக்கள்

யாழ்ப்பாணம், ஒக்.18

'திவிநெகும' சட்டவரைவுக்கு ஆதரவாக நேற்று யாழ்.நகரில் நடைபெற்ற பேரணிக்குத் தூர இடங்களில் இருந்து அழைத்து வரப்பட்ட மக்கள் அரசையும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவையும் திட்டித் தீர்த்தனர்.

'திவிநெகும'வுக்கு ஆதரவாகப் பேரணி நடத்துமாறு பொருளாதார அபிவிருத்தி

பார்க்க பக்கம் 4

தீவுப் பகுதி பிரதேச சபைகளும் தாக்குதலை கண்டிக்க வேண்டும்

யாழ்ப்பாணம், ஒக்.18

நல்லூர் பிரதேச சபைத் தலைவர் தாக்கப்பட்டமைக்கும் பிரதேச சபைக்குச் சொந்தமான காணியைப் படையினர் அடாத்தாகப் பிடித்துள்ளமைக்கும் கண்டனம் தெரிவிக்கும் தீர்மானங்கள் தீவுப் பகுதியின் பிரதேச சபை

பார்க்க பக்கம் 4

கே.பி. விடுதலை

கொழும்பு, ஒக.18

கே.பி. என அழைக்கப்படும் விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் முக்கிய ஆயுத முகவரான குமரன் பத்மநாதனுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து அரசு வழக்குத் தாக்கல் செய்யவில்லை, அவர் அரசால் தடுத்து வைக்கப்படவும் இல்லை என்று கூறி அரசு அவரை விடுவித்துள்ளது.

நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் லக்ஸ்

பார்க்க பக்கம் 4

ஏமாற்றிவிட்டது அரசு

புதுடில்லிக் கூட்டத்தில் சம்பந்தன்

புதுடில்லி,ஒக் 18

இந்திய அரசின் அழுத்தத்தின் பேரில் புதுடில்லிக்கு வரவும் இல்லை, இலங்கை அரசின் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கெடுக்குமாறு இந்தியா எமக்கு அழுத்தம் கொடுக்கவும் இல்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் கடந்த சனிக்கிழமை நடந்த கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை அரசு எம்முடன் பேசி சில இணக்கப்பாடுகளை எட்டிய பின்னர், தெரிவுக்குழுவுக்குப் போகலாம் என்று நாம் கூறினோம். ஆனால் அரசு அதற்கு உடன்படவில்லை.

தெரிவுக்குழுவின் மீது எமக்கு நம்பிக்கையில்லை. அதன்மூலம் எதுவும் கிடைக்கப் போவதில்லை. தமிழர்களுக்குச் சுயாட்சி வழங்குவது குறித்து இலங்கை அரசு அக்கறை கொள்ளவில்லை என்பதை எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

அரசு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதற்கு மறுக்கிறது. மாகாண அரசுகளிடம் உள்ள நிதி அதிகாரங்களை மீளப் பெற்று வருகிறது.

இலங்கை அரசினால் ஏமாற்றப்பட்டு விட்டதாக நாங்கள் உணர்கிறோம். அவர்கள் சொல்வது ஒன்று செய்வது இன்னொன்று. -என்றார்.

வெளிநாட்டு இராஜதந்திர பதவிகளில் திடீர் மாற்றம்

ஜெனிவா எதிரொலி; அரசு அதிரடி

புதுடில்லி,ஒக் 18

வெளிவிவகார இராஜதந்திர செயற்பாடுகளில் அவசர மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு இலங்கை அரசு முஸ்தீபு செய்துள்ளது என இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது. இதன் பிரகாரம் முக்கிய

பார்க்க பக்கம் 4

48 மணி நேர தடுப்புக் காவல்; எதிர்த்து உயர்நீதிமன்றில் மனு

கொழும்பு,ஒக் 18

பொலிஸாரினால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படும் ஒருவரைத் தடுத்து வைக்கும் கால எல்லையை (தி) 48 மணிநேரம் நடிப்பதை எதிர்த்து முன்னணி சோசலிஷ கட்சி, உயர் நீதிமன்றத்தில் நேற்று மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது.

ஜனநாயக தேசியக் கூட்ட

பார்க்க பக்கம் 4

பாகிஸ்தான் பிரதமரை சந்தித்தார் ஜனாதிபதி மஹிந்த

கொழும்பு, ஒக் 18

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுப் பாகிஸ்தானின் பிரதமர் ராஜா பர்வேஸ் அஸ்ரப்பை சந்தித்துக் கலந்துரையாடினார்.

31 நாடுகள் பங்கேற்கும் ஆசிய ஒத்துழைப்பு மாநாட்டில் கலந்து கொள்வதற்கான ஜனாதிபதி குவைத் சென்றுள்ள நிலையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இலங்கையுடன பொருளாதாரம், பாதுகாப்பு மற்றும் வர்த்தக தொடர்புகளைத் தொடர்ந்தும் பேணுவது

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதி ஒதுக்கீட்டுச் சட்டவரைவுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மனு

உத்தேச நிதி ஒதுக்கீட்டுச் சட்டவரைவு இந்த மாதம் 9ஆம் திகதி நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

கொழும்பு,ஒக் 18

2013ஆம் ஆண்டுக்கான உத்தேச நிதிஒதுக்கீட்டுச் சட்டவரைவு, அரசநிதி மீதான நாடாளுமன்ற அதிகாரங்களை தாரைவார்த்துக் கொடுப்பதற்கு இட்டுச் செல்லும் என்று உயர் நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்று இயக்குநர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துவினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உத்தேச நிதி ஒதுக்கீட்டுச் சட்டவரைவு இந்த மாதம் 9ஆம் திகதி நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

இந்த உத்தேச நிதி ஒதுக்கீட்டுச் சட்டவரைவு அரசமைப்புக்கு முரணானது என்றும் இது சட்டமாக்கப்படவேண்டுமானால், நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டு, மக்களின் கருத்துக் கணிப்புக்கு விடப்படவேண்டும் என உயர் நீதிமன்றம் அறிவிக்க வேண்டுமெனவும் கோரியே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

அரசமைப்பின் 148 ஆம் பிரிவின் பிரகாரம், பொது நிதியைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்கே இருக்கிறது. இந்நிலையில், உத்தேச நிதி ஒதுக்கீட்டு சட்டவரைவின் மூலம் நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் தாரைவார்க்கப்படுவதாகவும் அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த)

இலத்திரனியல் வாக்களிப்பு விரைவில் அறிமுகமாகும்

கொழும்பு,ஒக் 18

தேர்தல் முறைமைகளின் மாற்றங்களுடன் இலங்கையில் இலத்திரனியல் வாக்களிப்பு முறையை அறிமுகம் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

மொரட்டுவை பல்கலைக்கழகம் வாக்களிப்பு இயந்திரம் ஒன்றை தயாரித்துள்ளதாக தேர்தல் திருத்தம் பற்றிய நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவரான அமைச்சர் குணவர்த்தன தெரிவித்தார்.

தேர்தல் திணைக்கள அதிகாரிகள் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட இயந்திரம் ஒன்றை ஆராய்ந்ததாகவும் அவர் கூறினார்.

வினைத்திறன், நம்பகத்தன்மை என்பவற்றை அதிகரிக்கும் வகையில் இலத்திரனியல் வாக்களிப்பு அமைய வேண்டுமென அமைச்சர் குறிப்பிட்டார்.

இலத்திரனியல் வாக்களிப்பை அறிமுகம் செய்ய சட்டதிருத்தங்களும் தேவைப்படும் என அவர் கூறினார்.

ஆணையாளர் பயன்படுத்தப் பொருத்தமான இயந்திரத்தைச் சிபார்சு செய்ய வேண்டும். வாக்களிப்பு இயந்திரத்தை பயன்படுத்தும் முறை பற்றி வாக்காளர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார். (த)

18 வயதுக்கு உட்பட்டோருக்கு ஓய்வூதியம்

18 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கு 'ஆரஸ் ஸாவ' எனும் புதிய ஓய்வூதியத் திட்டமொன்றை இலங்கை சமூக பாதுகாப்புச் சபை ஆரம்பிக்கவுள்ளது.

இந்த ஓய்வூதியத் திட்டம் சர்வதேச பெண்கள், சிறுவர் தினமான கடந்த 11ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முதற்கட்டமாக ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சிறப்பு சித்தி எய்திய இரண்டு மாணவர்கள், இந்த ஓய்வூதியத் திட்டத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டனர்.

இந்த ஓய்வூதியத் திட்டம் தொடர்பிலான, மேலதிக விவரங்களை பெற்றோர் - 0112 369151, 0112 236 9141, 0112 369321 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும். (த)

பொன்சேகா மீதான தாக்குதல்: வழக்கின் தீர்ப்பு 23ஆம் திகதி

கொழும்பு,ஒக் 18

கொழும்பு இராணுவத் தலைமையகத்தில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடத்தி முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவைக் கொலை செய்வதற்காக உதவி செய்ததாகக் கூறப்படும் வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் 23ஆம் திகதி கேகாலை மேல் நீதிமன்றத்தில் வழங்கப்படவுள்ளது.

சண்முகலிங்கம் சூரியகுமார் என்ற தமிழ் இளைஞருக்கு எதிரான இந்த வழக்கில் சாட்சி குறுக்கு விசாரணை நிறைவடைந்ததை அடுத்தே கேகாலை மேல் நீதிமன்ற நீதிபதி மேனகா விஜேசுந்தர, வழக்கின் தீர்ப்பை 23ஆம் திகதி வழங்கத் தீர்மானித்தார்.

மஞ்சுளா என்ற தற்கொலைக் குண்டுதாரியை வவுனியாவிலிருந்து அழைத்து வந்து தங்குமிட வசதியளித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட சூரியகுமாருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

தன் மீது சுமத்தப்பட்டுள்ள அனைத்துக் குற்றச்சாட்டுக்களிலும் தான் நிரபராதி எனத் தனது சாட்சியின் போது தெரிவித்துள்ள சூரியகுமார், தன்னையும் தனது மனைவியையும் அச்சுறுத்திப் பல்வேறு ஆவணங்களில் கையொப்பம் பெறப்பட்டதாகவும் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார். (த)

பேர்டி பிரேமலாலுக்கு எதிராக இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு

கொழும்பு,ஒக் 18

வட மத்திய மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் பேர்டி பிரேமலால் திசாநாயக்காவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய மக்கள் விடுதலை முன்னணி தீர்மானித்துள்ளது.

அநுராதபுர மாவட்டத்தில் 67 நீர்ப்பாசனக் குளங்களை அபிவிருத்தி செய்வதற்காக 110 மில்லியன் ரூபா ஊழலில் ஈடுபட்டார் என்பது தொடர்பிலேயே மக்கள் விடுதலை முன்னணி வட மத்திய மாகாண முன்னாள் முதலமைச்சருக்கு எதிராக முறைப்பாடு செய்யவுள்ளது.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி விசாரணை பிரிவின் அறிக்கை கடந்த 2010 நவம்பர் 25ஆம் திகதி அரசிடம் கையளிக்கப்பட்டுள்ளது என மக்கள் விடுதலை முன்னணியின் வட மத்திய மாகாண சபை உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

எனினும், முன்னாள் முதலமைச்சர் பேர்டி பிரேமலால் திசாநாயக்காவுக்கு எதிராக இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

''இந்தத் திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் வேலை நடைபெறாமல் ஊழல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பில் முன்னாள் முதலமைச்சர் பேர்டி பிரேமலால் திசாநாயக்கா, அவரது செயலாளர் மற்றும் மாகாண அமைச்சின் உயர் அதிகாரிகளுக்கு எதிராகக் குற்றங்கள் இருக்கின்றன. எனவே நாங்கள் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிடம் செல்லவுள்ளோம்'' என மாகாண சபை உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, 2006ஆம் ஆண்டு மாவிலாறு நீர்ப் பிரச்சினை காரணமாகப் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான நட்டஈடு கொடுப்பனவில் இடம்பெற்ற ஊழல் தொடர்பிலும் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

தொடர்ச்சியாக மூன்று பதவிக் காலங்களுக்காக 1999 ஆம் ஆண்டிலிருந்து வட மத்திய மாகாண முன்னாள் முதலமைச்சராக பேர்டி பிரேமலால் திசாநாயக்கா செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த)

யாழ். நகரில் நேற்று ஓங்கி ஒலித்த எதிர்ப்புக் குரல்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்டாற்றில் விடப்பட்ட நிலையில் நட்டாங்கண்டல் கிராம மக்கள்

துணுக்காய், ஒக்.18

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நட்டாங்கண்டல் பிரதேசத்தில் மீள்குடியமர்ந்துள்ள 156 குடும்பங்கள் நிரந்தர வீடுகள் வழங்கப்படாது இன்னமும் தற்காலிக கொட்டகைகளிலேயே அவலங்களுடன் வசித்து வருவதாக கிராம அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

இந்தக் கிராமங்களில் மக்கள் மீள்குடியமர்ந்து 3 வருடங்கள் கழிந்த நிலையிலும் இன்னமும் நிரந்தர வீடுகள் வழங்கப்படவில்லை.

தற்போது மழைக்காலம் ஆரம்பித்துள்ளதால் இவர்கள் வசிக்கும் குடிசைகள் மழை நீர் ஒழுக்கு மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

நட்டாங்கண்டல் பகுதியில் 124 வீடுகளும், சிறாட்டிகுளத்தில் 17 வீடுகளும், பனங்காமத்தில் 15 வீடுகளுமாக மொத்தம் 156 வீடுகள் தற்காலிக வீடுகளாகக் காணப்படுகின்றன.

இனிவரும் மாதங்களில் கடும் மழை பெய்யும் வாய்ப்புகள் உள்ளதால் இந்த மக்களின் நிலை மேலும் மோசமடையக் கூடிய வாய்ப்புக்களும் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் மிகவும் வறிய நிலைக்குள் வாழ்ந்து வருவதால் செய்வதறியாத நிலையில் மேன்மேலும் துன்பத்தில் ஆழ்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உரிய அதிகாரிகள் இவர்களின் அவலநிலையை உணர்ந்து நிரந்தர வீடுகளை அமைப்பதற்கான உதவிகளை வழங்க வேண்டுமென இங்குள்ள சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-415)

திவிநெகுமவுக்கு ஆதரவாக வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

'திவி நெகும' திட்டத்தை வவுனியா மாவட்டத்திலும் நடைமுறைப்படுத்துமாறு கோரி நேற்று வவுனியா மாவட்ட செயலகத்துக்கு முன்னால் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று இடம்பெற்றது.

நாடாளவிய ரீதியில் 'திவிநெகும' திட்டத்துக்கு எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் வடமாகாணத்திலும் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பல்வேறு தரப்புக்களும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

இந்தப் பின்னணியில் வடமாகாணத்தில் 'திவிநெகும' திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரி, கவன வீர்ப்புப் போராட்டங்களை நடத்துமாறு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு சமூர்த்தி அதிகாரிகளுக்கு கண்டிப்பான உத்தரவு பிறப்பித்திருந்தது.

இதன் அடிப்படையில் நேற்று மு.ப. 10 மணியளவில் வன்னி சமூர்த்தி சங்கங்களின் சமூகம் என்ற அமைப்பின் ஏற்பாட்டில் வவுனியா சமூர்த்தி மகா சங்க முன்றலில் கூடிய நூற்றுக் கணக்கான சமூர்த்தி உத்தியோகத்தர்கள், பயனாளிகள் ஆகியோர் 'திவிநெகும' திட்டத்துக்கு ஆதரவான சுலோக அட்டைகளை தாங்கியவாறு மாவட்ட செயலகம் வரை ஊர்வலமாகச் சென்றனர்.

அதன்போது வடமாகாணத்தில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பொருளாதார விருத்தியை ஏற்படுத்தும் வகையில் 'திவிநெகும' திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அரசஅதிபரிடம் ஆர்ப்பாட்டக்காரர்கள் மனு ஒன்றைக் கையளித்தனர்.

இதேவேளை 'திவிநெகும' திட்டத்துக்கு ஆதரவாக யாழ்ப்பாணத்திலும் நேற்று சமூர்த்தி உத்தியோகத்தர்களும், பயனாளிகளும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியிருந்தனர். இதில் 2000 க்கு அதிகமானோர் கலந்து கொண்டனர். (ங-400)

வெள்ளை பிரம்பு தினம்

யாழ்ப்பாணம், ஒக்.18

இலங்கை தேசிய பார்வையற்றோர் சம்மேளனத்தின் வடமாகாண அலுவலகத்தால் சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம் இன்று கிளிநொச்சியில் கொண்டாடப்படவுள்ளது.

இதற்கான நிகழ்வுகள் காலை 9 மணியளவில் கரைச்சிப் பிரதேச சபை மண்டபத்தில் இ.கந்தராசா தலைமையில் ஆரம்பமாகும்.

பிரதம விருந்தினராக கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன், கரைச்சி பிரதேச சபைத் தலைவர் வை.குகராஜா ஆகியோர் கலந்து கொள்வர். (க)

இடர்களை எதிர்கொள்வதற்கு மக்களை விழிப்புணர்வு உள்ளவர்களாக்க வேண்டும்

கிளிநொச்சி அரச அதிபர் உரை

இடர்களை எதிர்கொள்ளக்கூடிய தயார் நிலையில் மக்களைவிழிப்புணர்வு உள்ளவர்களாக வைத்திருக்க வேண்டும். இவ்வாறு தெரிவித்தார், கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ் வரநாதன்.

கிளிநொச்சி அரச செயலகத்தின் இடர் முகாமைத்துவ பிரிவில் இடம்பெற்ற இடர்கால நெருக்கடியை எதிர்கொள்வதற்கான 100 நாள் செயற்திட்ட ஒன்று கூடலில் உரையாற்றும் போதே, அவர் இதனைத் தெரிவித்தார். ஐப்பசி மாதம் நிகழ்வுகள் நிறைந்த மாதமாக உள்ளது. சிறுவர் நாள், முதியோர் நாள் என நிகழ்வுகள் உள்ளன. இதே மாதம்

இடர் குறைப்பு நாளும் வருகிறது. நாம் நிகழ்வுகளை நினைவு கூருவதுடன் மட்டும் நின்று விடாது ஏதாவது ஒரு செயலை நடைமுறைப்படுத்த வேண்டும். 100 நாள் வேலைத்திட்டம் தனித்தனியாக மேற்கொள்ளப்பட்டாலும், இதில் அனைவரும் இணையக் கூடியதாக இருத்தல் வேண்டும். இடர் முகாமைக்குள் தனியார் மற்றும் அரச நிறுவனங்கள், திணைக்களங்கள் என்பன மேற்கொள்ளும் வேலைகளும் அடங்கும்.

நவம்பர் 15 இல் தேசிய மர நடுகை நிகழ்வுகள் கிளிநொச்சியில் சிறப்பாக இடம்பெறவுள்ளன. இனிவரும் மழை காலத்தில் ஏற்படக்கூடிய வெள்ள இடரை எதிர்கொள்ள நாம் அனைவரும் பாடுபடுவோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

சமாசம் மீதான குற்றச்சாட்டுக்களை மறுக்கிறார் பொதுமுகாமையாளர்

முல்லைத்தீவு, ஒக்.18

முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் மீதான குற்றச் சாட்டுக்களை அதன் பொது முகாமையாளர் மறுத்துள்ளார்.

முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் நிர்வாக செயற்பாடுகளும், வரவு செலவுகளும் சீரான வகையில் அமையவில்லையென இங்குள்ள மக்கள் மத்தியில் விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில் அவர் இவற்றை மறுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்:-

கடற்றொழிலை இங்கு அபிவிருத்தி செய்யும் நோக்குடன் பனிக் கட்டித் தொழிற்சாலை, கடல் உணவு கொள்வனவு மையம், கடற்றொழில் உபகரண விற்பனை மையம், எரிபொருள் விற்பனைக் கிளை, வாகன சேவை என்பன சமாசத்தால் உருவாக்கப்பட்டுள்ளன.

மேலும் சமாசத்தின் வங்கிக் கணக்கில் ஒரு கோடியே 10 இலட்சத்து 65 ஆயிரம் ரூபா நிலையான வைப்பில் இடப்பட்டுள்ளது.

சமாசம் தொடர்பில் தவறான செய்திகளைப் பரப்பி வருபவர்கள் நேரில் அலுவலகத்துக்கு வந்து கணக்குகளைப் பார்வையிடலாமெனவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் உதவிகளுக்கு இடையூறாக இருக்க வேண்டாமெனவும் அவர் கேட்டுக் கொண்டார். (க-500)

கிளிநொச்சியில் ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் உதவியுடன் உருவாக்கப்பட்டுள்ள இடர் கால உதவிப் படையணியினர் கிளிநொச்சி அரச அதிபர் மற்றும் செயலக உயரதிகாரிகளுடன் காணப்படுகின்றனர். (க-18)

க.பொ.த. [சா/த] மாணவருக்கு முல்லையில் கருத்தரங்கு

வவுனியா, ஒக்.18

முல்லைத்தீவு கல்வி வலயம் நடத்தும் க.பொ.த.(சாதராண தர) மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை முதல் மூன்று தினங்கள் இடம்பெறவுள்ளது.

அளம்பில் றோ.க.வித்தியாலயம், சிலாவத்தை தமிழ் வித்தியாலயம், முல்லைத்தீவு மகாவித்தியாலயம், வித்தியானந்தாக் கல்லூரி, கலைமகள் வித்தியாலயம், விசுவமடு மகா வித்தியாலயம், உடையார்கட்டு மகா வித்தியாலயம், வள்ளிபுனம் கனிஷ்ட உயர் வித்தியாலயம் மற்றும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி ஆகிய நிலையங்களில் இந்த வழிகாட்டல் கருத்தரங்குகள் ஒரேநேரத்தில் இடம்பெறவுள்ளன.

அந்தவகையில் விஞ்ஞான பாடச் செயலமர்வு நாளை வெள்ளிக்கிழமையும், நாளை மறுதினம் சனிக்கிழமை கணிதபாடச் செயலமர்வும், எதிர்வரும் 22 ஆம் திகதி தமிழ்ப் பாடச் செயலமர்வும் இடம்பெறவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ங-400)

வாடகைக்கு / குத்தகைக்கு

வத்தளையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மூன்று படுக்கையறையுடன் Attached bathroom மற்றும் Parking வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு உண்டு.
கொழும்பு கிராண்ட்பாஸில் சிறிய வீடு விற்பனைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு:
0777575385, 0714114997

துணுக்காயில் சிறப்பான முதியோர் தின நிகழ்வுகள்

துணுக்காய், ஒக்.18

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட திருநகர் கிராமத்தில் முதியோர் தினமும், அவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் சிறப்புடன் இடம்பெற்றுள்ளன.

திருநகர் பொது நோக்கு மண்டபத்தில் கடந்த 10 ஆம் திகதி பி.ப. 2 மணியளவில் திருநகர் கிராம அலுவலர் சி.சண்முகநாதன் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

நிகழ்வுக்கு முன்னதாக 51 முதியோர்களுக்கு திருநகர் அ.த.க.பாடசாலை வளாகத்தில் வைத்து பிரதேச செயலர் எஸ்.குணபாலனால் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன. பின்னர் மேளவாத்தியங்கள் முழங்க ஊர்வலமாக பொது நோக்கு மண்டபத்துக்கு அவர்கள் அழைத்து வரப்பட்டனர்.

பொதுச் சுடரை துணுக்காய் பிரதேச செயலர் ஏற்றி வைத்தார். துணுக்காய் சமூக சேவைகள் நலன் பேணல் உத்தியோகத்தர் தி. கணேசராஜா, முதியோர் நலன் பேணல் உத்தியோகத்தர் தி.ரவீந்திரன், திருநகர் அ.த.க.பாடசாலை அதிபர் இ.நிக்சன், மல்லாவி இராணுவ அதிகாரி, திருநகர் கமக்கார அமைப்பு தலைவர் க.குமாரசாமி, கோயில் தலைவர் சு.மனோகரராசா, மாதர் சங்க தலைவி அ.திலகவதி, கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் சே.தவசிங்கம், முதியோர் சங்கத் தலைவர் மு.பேரம்பலம் ஆகியோர் ஏற்றி வைத்தனர். கருத்துரையை திருநகர் அ.த.க. பாடசாலை அதிபர் இ.நிக்சன் நிகழ்த்தினார். சிறப்புரையை பிரதேச செயலர் ஆற்றினார். இந்த நிகழ்வில் முதியோர்களின் இசை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

மேலும் திருநகர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் முதியவர்களுக்கு பரிசுப் பொருள்களும் வழங்கி வைக்கப்பட்டன. அன்றைய தினம் பிற்பகல் 4.45 மணியளவில் தேறாங்கண்டல் கிராமத்தில் 47 முதியோர்கள் தேறாங்கண்டல் பொது நோக்கு மண்டபத்தில் வைத்துக் கௌரவிக்கப்பட்டனர். (க-415)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

அமைச்சு யாழ்.சமுர்த்தி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்தது. இதன்படி நேற்று நடத்தப்பட்ட பேரணிக்குத் தூர இடங்களில் இருந்து மக்கள் பஸ்களில் அழைத்து வரப் பட்டிருந்தனர். உதவிப் பொருள்கள் வழங்கப் படும் எனவும் சமுர்த்திக் கொடுப்பனவு அதிகரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டே தாம் அழைத்து வரப்பட்ட தாகவும் பேரணி நடைபெறுவது தமக்குத் தெரியாது எனவும் பேரணியில் கலந்துகொண்ட மக்கள் தெரிவித்தனர். பஸ்ஸில் ஏற்றிவரப்பட்ட தமக்கு வேறு வசதிகள், உதவிகள் எதுவுமே வழங்கப் படவில்லை எனவும் சமுர்த்தி அதிகாரிகளும் அமைச்சர் டக்ளஸும் தங்களை ஏமாற்றிவிட்ட தாகவும் அவர்கள் விசனத்துடன் தெரிவித்தனர். இதில் கலந்துகொள்ள வேண்டும் என்ற வற்புறுத்தலினாலேயே தாம் இங்கு வந்ததாக பேரணியில் பங்கு கொண்ட வயோதிபர் ஒருவர் தெரிவித்தார். (த-4-14)

பாகிஸ்தான்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தொடர்பில் இருதரப்பிலும் கருத்துக்கள் பரிமாற்றப்பட்டுள்ளன. அத்துடன் பாகிஸ்தானின் உறவை பெரிதும் மதிப்பதாகவும், பாகிஸ்தானிய தனியார் துறையினர் இலங்கையில் முதலீடு செய்வதை வரவேற்பதாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். எனினும், இந்திய அரச தரப்பில் அவர் இதுவரை யாரையும் சந்திக்கவில்லை.(த)

காய்ச்சலால்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கடந்த செவ்வாய்க்கிழமை இந்தச் சிறுமி காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில் அச்சுவேலி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார்.

எனினும் காய்ச்சல் குணமாகாததால் நேற்றுமுன்தினம் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார். தொடர்ந்தும் சிறுமியின் உடல் நிலை மோசமாக இருந்ததை உணர்ந்த அவளது பெற்றோர் மீண்டும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அவரை நேற்று அனுமதித்துள்ளனர்.

எனினும் சிறுமி நேற்றுப் பிற்பகல் அங்கு உயிரிழந்துள்ளார். சிறுமிக்கு என்ன காய்ச்சல் ஏற்பட்டது என்று இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

சிறுமியின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (த-16-78)

கே.பி...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மன் ஹீதுகல்ல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குமரன் பத்மநாதன் வடபகுதியில் மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். அவர் அந்த நடவடிக்கைகளை முன்னெடுக்க அரசு அவசியமான அனுமதியை அவருக்கு வழங்கியுள்ளது என்றும் அவர் கூறினார்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வனின் வீட்டைத் தமது இருப்பிடமாக்கிக் கொண்டுள்ளார் என வெளிவந்த செய்தி குறித்துக் கேள்வியெழுப்பிய பத்திரிகையாளர் ஒருவருக்கு பதிலளிக்கும் விதத்திலேயே ஹீதுகல்ல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் தீவிர உறுப்பினர்கள் சிலருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் குறித்துச் சட்ட நடவடிக்கைக்காக வழக்குத் தாக்கல் செய்யப் பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அவசியமேற்படின் கே.பியை அரசு, அரச தரப்புச் சாட்சியாகப் பயன்படுத்துமென கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் அரசு தெரிவித்திருந்தது.

ஒரு சந்தேகநபரை அரசு தரப்புச் சாட்சியாகப் பயன்படுத்த சட்ட விதிகளில் இடமுள்ளது என ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாதுகாப்பு அமைச்சால் தடுத்து வைக்கப் பட்டிருந்த கே.பி. விடுதலைப் புலிகளது வெளிநாட்டுத் தொடர்புகளைத் துண்டிப்பதற்கு அரசுக்கு உதவக்கூடும் என்பதால் அவர் சட்ட நடவடிக்கைகளுக்கு முன்னிலைப் படுத்தப்படவில்லை எனவும் தெரிவித்தார். (த)

48 மணி...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ணியின் நாடாளுமன்ற உறுப்பினரும் சோசலிஷ முன்னணிக் கட்சியின் உறுப்பினருமான அஜித் குமார, இந்த மனுவைத் தாக்கல் செய்தார்.

இந்த சட்டவரைவின் மூலமாகப் பொலிஸாருக்குக் கூடுதல் அதிகாரம் வழங்கப்படுவதாகவும் இது பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்பதனால், அந்த சட்ட வரைவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றக் கூடாது என்றும் அந்த மனுவில் சுட்டிக் காட்டியுள்ளார்.

குற்றவியல் தண்டனைக்கோவை சட்டத்தின் பிரகாரம் சந்தேகநபரொருவரை நீதிவான் முன்னிலையில் முன்னிலைப் படுத்தாமல் 24 மணிநேரம் பொலிஸாரினால் தடுத்து வைத்திருக்க முடியும்.

எனினும் குற்றவியல் முறைகள் (சிறப்பு ஏற்பாடுகள்) எனும் சட்டவரைவின் மூலம் சந்தேகநபரை 48 மணிநேரம் தடுத்து வைத்திருக்க அங்கீகாரம் அளிக்கப்படுகிறது.

இது அதிகார துஷ்பிரயோகத்துக்கு வழிவகுக்கும் என்பதுடன், சந்தேகநபரின் உரிமையை மீறுவதாக அமையும் என்றும் அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த சட்டவரைவு, 24ஆம் திகதி நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

வெளிநாட்டு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இராஜதந்திரப் பதவிகளில் விரைவில் பாரிய மாற்றங்கள் நிகழவுள்ளன.

ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட மேற்குலக நாடுகளில் சேவையில் ஈடுபட்டுள்ள இலங்கை இராஜதந்திரிகளின் செயற்பாடுகள் தொடர்பில் பலகோணங்களில் எழுந்துள்ள விமர்சனங்களே இந்தத் திடீர் மாற்றத்துக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

இதற்கிணங்க ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் பூகோளக் காலக்கிரம மீளாய்வுக் கூட்டத் தொடர் முடிவடைந்த பின்னர் இராஜதந்திர சேவையில் மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கு அரசு தீர்மானித்துள்ளதென நம்பகரமான வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

குறிப்பாக, மேற்குலக நாடுகளில் இராஜதந்திர செயற்பாடுகளில் ஈடுபடும் இலங்கையின் உயர்மட்ட அதிகாரிகள் தமது நாடு குறித்தான பிரசாரங்களை முன்னெடுப்பதில் அசமந்தப் போக்கைக் கடைப்பிடிக்கின்றனர் என அரச உயர்மட்டத்துக்குப் பல்வேறு துறைகளிலிருந்தும் விமர்சனங்கள் முன்வைக்கப் படுகின்றன.

குறித்த இராஜதந்திரிகளின் மதிநுட்பமற்ற செயற்பாடுகளே ஜெனீவா தீர்மானம் போன்ற அரசுக்கெதிரான நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும் வகையில் அமைந்துள்ளன எனவும் எனத் தெரியவருகிறது.

அதேவேளை, இலங்கை அரசின் நல்லிணக்கச் செயற்பாடுகள், அபிவிருத்தி நடவடிக்கைகள் உள்ளிட்ட முக்கிய பணிகளை சர்வதேசத்திடம் கொண்டுசெல்லும் விடயத்தில் இலங்கை இராஜதந்திரிகள் அவசர நடவடிக்கைகளை முன்னெடுப்பதில்லை என அரச உயர்மட்டத்துக்கு தகவல் வழங்கப் பட்டுள்ளது எனவும் கூறப்படுகின்றது.

இதனையடுத்து தமது ஆலோசகர்களை அழைத்து மந்திராலோசனை நடத்தியுள்ள அரச தலைமை, வெளிவிவகார இராஜதந்திர சேவையில் மறுசீரமைப்பை மேற்கொள்வதற்குத் தீர்மானித்துள்ளது.

இதன் பிரகாரம் மேற்குலக நாடுகளில் பணிபுரியும் முக்கிய இராஜதந்திரிகள், தூதரக அதிகாரிகள் ஆகியோரின் பதவிகளில் பாரிய மாற்றங்கள் நிகழ்வுள்ளன என பெயர் குறிப்பிட விரும்பாத அரச அதிகாரியொருவர் நேற்று தெரிவித்தார்.

(த)

மக்கள்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

அரசியல் தலைவர்களும், பொது மக்களும் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

'வெளியேறு வெளியேறு இராணுவமே வெளியேறு எங்கள் நிலம், எமது கடல் எமக்கு வேண்டும்', 'கண்டிக்கிறோம் கண்டிக்கிறோம் தமிழ்த் தலைவர்கள் தாக்கப்படுவதை', 'ஜனநாயகத்தை மிதிக்காதே', 'விடுதலை செய் விடுதலை செய் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்', 'எங்கே எங்கே காணாமற் போன உறவுகள் எங்கே' என்ற கோஷங்களை தொடர்ச்சியாக எழுப்பிய வண்ணம் சுமார் ஒரு மணி நேரம் வீதிப் போக்குவரத்துக்கு இடையூறில்லாமல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றிய உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், உபதலைவர்கள், உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சி.சிறீதரன் ஆகியோரும் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டனர். மேலும் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரனும் இதில் கலந்து கொண்டார்.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் அமைதியாக நடைபெற்றுக்கொண்டிருந்த போதும் கலகமடக்கும் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

கவனவீர்ப்புப் போராட்டத்தின் முடிவில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன்,

தமிழர்கள் தங்களை தாங்களே சிறிய தொகுதியான பிரதேச சபையைக் கூட ஒழுங்காக இயங்கவிடாது இராணுவப் புலனாய்வாளர்கள் குழப்புகின்றனர். தமிழர்களின் மரபுவழி தாயக - தேசிய - சுயநிர்ணய உரிமையைச் சர்வதேசத்துக்கு பறைசாற்றும் போராட்டமாகவே இதனை மேற்கொண்டுள்ளோம்.

காணாமல்போன எமது 20 ஆயிரம் உறவுகளுக்கும் இதுவரையில் என்ன நடந்ததென்பது தெரியாது. சிங்களவர்களும் அவர்கள் போடும் எலும்புத் துண்டுகளுக்காகவும் அலைபவர்கள் மட்டுமே இங்கு ஆட்சி நடத்தலாம் என்பதை வசந்தகுமார் மீதான தாக்குதல் எடுத்துக்காட்டுகின்றது - என்றார்.

தொடர்ந்து வலி. தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் அ.ஜெபநேசன் தெரிவிக்கையில்,

அரசின் இராணுவத்தின் அராஜக, அடாத்தான காணிப் பறிப்புக்கு எதிராக, ஜனநாயக ரீதியில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முயன்ற பிரதேச சபைத் தலைவர் மீதே புலனாய்வாளர்கள் தாக்குதல் நடத்தினர்.

நாம் தனியே சர்வதேசத்துக்கு எடுத்துக் காட்டுவதற்காக பேச்சளவில் மட்டும் இல்லாது செயல்வடிவில் போராட வேண்டும். நாம் எமது சுயநிர்ணய உரிமையைப் பெறுவதன் மூலமே சுதந்திரமாக வாழலாம் - என்றார்.

அதனைத் தொடர்ந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன் உரையாற்றுகையில்,

தமிழ் மக்களின் பாதுகாப்பு அரணாக விளங்கிய தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என்ற போர்வையில் அழித்தொழித்துவிட்டு, தமிழர் தாயகத்தை அரசு இராணுவமயப்படுத்தி வருகின்றது. இதற்கு ஒத்துழைக்க மறுக்கும் தலைவர்கள் மீதும் இராணுவப் புலனாய்வாளர்களை ஏவி தாக்குதலை மேற்கொள்கின்றனர் - என்றார்.

இறுதியா உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்,

மக்களைப் பயன்படுத்தி தாம் நினைப்பதை அடைவதற்காகவே இராணுவப் புலனாய்வாளர்கள் இவ்வாறான தாக்குதல்களை மேற்கொள்கின்றனர். இது காலம் காலமாக நடந்து வருகின்றது.

எமது போராட்டங்களுக்கு மக்களின் ஆதரவு அதிகரித்துச் செல்கின்றது. இந்தப் போராட்டங்கள் என்றோ ஒருநாள் வெடித்தே தீரும்.

எமது போராட்டத்தை குழப்பும் வகையில் 'திவிநெகும' சட்டத்தை ஆதரிப்பதாக தெரிவித்து மக்களை கட்டாயப்படுத்தி போராட்டத்தில் ஈடுபடுத்தியுள்ளனர்.

'திவிநெகும' சட்டத்தின் மூலம் பிரதேச சபைகளின் அபிவிருத்தித் திட்டத்துக்கு வருகின்ற நிதிகளை அரசு கையாடப்போகின்றது. ஜனாதிபதி அடித்தளம் வரை அதிகாரத்தை பரவலாக்கம் செய்வதாகச் சொல்லி ஒருவரிடத்திலேயே எல்லா அதிகாரங்களையும் வாரி இறைத்திருக்கின்றார். இதற்கு தமிழ் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இணக்க அரசியல் பேசிக்கொண்டு ஊதுகுழலாக செயற்படுகின்றார்.

இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தக் கூடாது என்பதற்காக நாங்கள் போராட வேண்டும் - என்றார்.

(த-5-17-86)

விரைவான...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

உரிமை விவகாரங்களுக்கான சிறப்புத்தூதுவரான அமைச்சர் மஹிந்த சமரசிங்க, நேற்றுமுன்தினம் ஐ.நா பொதுச்செயலர் பான் கீ-மூனை நியூயோர்க்கில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இதன்போதே, இலங்கை அரசு விரைவாக அரசியல்தீர்வு ஒன்றைக் காண வேண்டும் என்று பான் கீ-மூன் வலியுறுத்தியுள்ளார்.

முழுமையான பொறுப்புக்கூறலுக்கான சட்டக்கடமைகளை நிறைவேற்றத் தேவையான, நம்பகமான எல்லா கூடுதல் நடவடிக்கைகளையும் எடுக்குமாறும், இலங்கையர் அனைவருக்கும் நீதியையும், சமத்துவத்தையும், பொறுப்புக்கூறலையும், நல்லிணக்கத்தையும் உறுதிப்படுத்த சுதந்திரமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் பான் கீ-மூன் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் மஹிந்த சமரசிங்கவுடன், ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பாலித ஹொகன்னவும், ஐ.நா. பொதுச்செயலருடன் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளையின் நியூயோர்க் பிரதிநிதி ஐவன் சிமோனோவுக்கும் பங்கேற்றனர். (ப)

இலங்கையின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ஐக்கிய அரபு குடியரசு, சவூதி அரேபியா, யேமன் போன்ற நாடுகளில் பாதுகாப்பு நிறுவனங்கள் இந்த ஆயுதங்களைப் பயன்படுத்தத் தடைவிதிக்கப்பட்டுள்ள நிலையில், ஏனைய நிறுவனங்களின் ஆயுதங்கள், வெடிபொருள்களை இந்தக் கப்பலில் நாளொன்றுக்கு 25 டொலர் வாடகைக் கட்டணம் செலுத்திப் பாதுகாக்கவும் முடியும்.

சிந்துபாத் கப்பலில் உள்ள ஆயுதங்களின் எண்ணிக்கையை வெளியிட 'அவன்ட் கிறேட்' நிறுவனத்தின் தலைவர் மேஜர் நிசங்க சேனாதிபதி மறுத்து விட்டபோதும், அந்த ஆயுதங்கள் இலங்கை அரசுக்குச் சொந்தமானவை என்பதை உறுதிப்படுத்தியுள்ளார்.

சிந்துபாத் கப்பலில் இருந்த எவரும் கைது செய்யப்படவில்லை. கப்பலில் உள்ளவர்களிடம் விசாரணை மட்டும் நடத்தப்பட்டுள்ளது. தடுப்புக் கைதிகள் போல அவர்கள் நடத்தப்படவில்லை.கப்பல் சோதனையிடப்பட்ட போது, இலங்கை அரசுடன் இணைந்த கூட்டு முயற்சி என்ற நம்பகத்தன்மையை நிரூபித்து விட்டோம். 5 - 7 நாள்களுக்குப் பின்னர் கப்பல் விடுவிக்கப்பட்டு விட்டது- என்றார் அவர்.

இந்தக் கப்பல் தொடர்பாக விசாரிக்கப்பட்டதை ஐக்கிய அரசு குடியரசு அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்த விவகாரம் கப்பல் கைப்பற்றப்பட்ட புஜாய்ரா பகுதியின் சட்ட நடவடிக்கைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக ஒரு தகவல் கூறுகிறது.

இதற்கிடையே, மிதக்கும் ஆயுதக் களஞ்சியங்களில் உள்ள ஆயுதங்கள் தவறான கைகளுக்குப் போய்விடக் கூடாது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அனைத்துலகப் பாதுகாப்பு நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள மேஜர் சேனாதிபதி, நாம் மிகவும் உயர்ந்த பாதுகாப்பை அளித்துள்ளோம்.

எந்தநேரத்திலும், இலங்கையின் ரக்ன ஆரக்சக லங்கா நிறுவனத்தின் கடல் பாதுகாப்பு அதிகாரிகள் மிதக்கும் ஆயுதக்களஞ்சியங்களில் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர் என்று கூறியுள்ளார்.

ரக்ன ஆரக்ச சேனா பாதுகாப்பு நிறுவனம், இலங்கைப் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவால், உருவாக்கப்பட்டு நடத்தப்படுவதாகும். இது இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்படுகின்ற போதும், கோத்தபாய ராஜபக்ஷவே அதனை நிர்வகித்து வருகிறார்.

அத்துடன், தரையில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு இலங்கை இராணுவத்தினரையும், கடல் பாதுகாப்பில் இலங்கைக் கடற்படை கொமாண்டோக்களையும் ஈடுபடுத்தி பெருமளவு வருமானத்தை ஈட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், மிதக்கும் ஆயுதக் களஞ்சியங்களையும் இலங்கைப் பாதுகாப்புச் செயலர் கோத்தாபயவே நடத்தி வருவதாகவும் நம்பப்படுகிறது.

(த)

தீவுப்பகுதி...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

களிலும் நிறைவேற்ற வேண்டும் எனவும் இவற்றுக்கு கவனவீர்ப்புப் போராட்டங்களையும் நடத்த வேண்டும் எனவும் தீவுப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நல்லூர் பிரதேச சபைத் தலைவர் தாக்கப்பட்டமை தனியொருவர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலாகக் கருத முடியாது. தமிழ் மக்களுக்கு எதிரான ஒரு நடவடிக்கையே இது. இதில் தமிழ்க் கட்சிகளுக்கிடையில் அரசியல் வேறுபாடுகள் என்ற நிலைக்கு அப்பால் தமிழ் மக்கள் பிரதிநிதிகள் அச்சுறுத்தப்படுதல், தமிழ் மக்களின் நிலங்கள் பறித்தெடுக்கப்படுதல் ஆகியவற்றுக்கு எதிராகக் குரல் கொடுக்க ஒன்றுபட வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

கல்வி நலன்நாடிய கருத்து கவனத்தில் கொள்ளப்படுமா?

போர் முடிவுற்று மூன்று ஆண்டுகள் முடிவடிந்துவிட்டன. அதே போன்று நாட்டிலுள்ள பெரும்பாலான வீதிகள் அபிவிருத்தி செய்யப் பட்டுள்ளன. மேலும் புதிய துறைமுகங்களை நிர்மாணிப்பதற்கு இலங் கையில் உகந்த இட வசதி இல்லை.

போர் முடிவுற்ற மூன்று வருடங்களில் நாட்டில் பலவகையான அபி விருத்திப் பணிகள் செய்து முடிக்கப்பட்டு விட்டன. ஆகையால், ஜனா திபதி இனியும் பாதுகாப்பு அமைச்சையும் பெருந்தெருக்கள், துறை முகங்கள் அமைச்சையும் கைவிடவேண்டும். ஜனாதிபதி அவைகுறித்துத் தனது பொன்னான நேரத்தை வீணாக்கவேண்டாம்.

நாட்டின், அதன் எதிர்காலத்தை மேம்படுத்துவதில் மிக முக்கிய பங்கு வகிக்கும் கல்வித்துறையை நிர்வகிக்கும் கல்வி, உயர்கல்வி அமைச் சைப் பொறுப்பேற்க வேண்டும். அதனால் முதல் கூறிய இரண்டு அமைச்சுப் பதவிகளையும் துறந்து, வேறு ஒருவரிடம் கையளித்துவிட்டு, கல்வி, உயர்கல்வி அமைச்சுப் பதவியைக் கையேற்குமாறு ஜனாதிபதி யிடம் கேட்டுள்ளேன்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஊவா மாகாண சபையின் முதல மைச்சரும், ஜனாதிபதியின் பெறாமகனுமான பிரசித்திபெற்ற வழக்கறிஞர் சசீந்திர ராஜபக்ஷ. நாற்பத்தைந்து வயதான இவர் சபாநாய கர் சமல் ராஜபக்ஷவின் மகனாவார். வெலிமடவில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் வைத்து அவர் இத்தகவலை வெளியிட்டார்.

இப்போது தமது கைவசமுள்ள பாதுகாப்பு அமைச்சையும், துறை முகங்கள் அபிவிருத்தி அமைச்சையும், பெருந்தெருக்கள் அமைச்சையும் மற்றவர்களிடம் கையளித்தால், கல்வித்துறை சார்ந்த விடயங்களில் ஜனாதிபதியால் அதிக நேரத்தைச் செலவிடமுடியும் என்றும் ஊவா மாகாண முதலமைச்சர் வெலிமட கூட்டத்தில் அழுத்திக் கூறியுள்ளார்.

கல்வி சம்பந்தமான ஜனாதிபதியின் எந்த முடிவையும் திட்டத்தை யும் நாம் ஆதரிப்போம். அதேவேளை தறவான முடிவுகள், திட்டங்களை எதிர்ப்போம்.

எங்களுக்கிடையில் எத்தகைய உறவுகள், தொடர்புகள் இருப்பினும், தவறான கொள்கைகள் அல்லது முடிவுகளுக்கு எதிராகச் செயற்படு வதை அவை தடுக்க மாட்டா- என்றும் ஊவா மாகாண முதல்வர் விளம் பியுள்ளார்.

கல்வித்துறை சார்ந்த முடிவுகளை மேற்கொள்ளும்போது, அதில் சம்பந்தப்பட்டவர்கள், அதிகாரமுள்ளவர்கள் ஒன்றுக்கு இரண்டு முறைகள் அவற்றின் சாதக பாதகங்களை ஆராய்ந்தால் மட்டும் போதாது. ஆகக் குறைந்தது ஆறு தடவைகளாவது இரண்டு பக்கங்களையும் ஆராய்ந்து முடிவுகளை மேற்கொள்ள வேண்டும். ஏனெனில், இப்போது உயர் மட்டத்தினரால், அரச தரப்பினரால் கல்வி சம்பந்தமாக மேற் கொள்ளப்படும் முடிவுகள் உரிய அளவில் நடைமுறைக்கு வருவதற்குள், பத்து அல்லது பதினைந்து ஆண்டுகள் அகன்று நகர்ந்து விடுகின்றன- என்ற காத்திரமான கருத்தையும் ஊவாமாகாண முதல்வர் சசீந்திர ராஜபக்ஷ முன்வைத்துள்ளார்.

பெருந்தெருக்கள், துறைமுகங்கள் மற்றும் அபிவிருத்தித் திட்டங் களை நிதிவளமும், உகந்த மனித வளங்களும் இருப்பின் எப்போதும், எவ்வேளையும் செய்து முடித்துவிடலாம். அவற்றில் தவறுகளோ, இசகு பிசகுகளோ உண்டாகினாலும், பின்னர் ஏதோ மாற்றுவழிகளைக் கண்டறிந்து சரிசெய்து கொள்ளலாம்.

ஆனால் கல்வித்துறையில், அது சார்ந்த திட்டங்களில் தவறுகள் உண்டாகிவிட்டால், உண்டாக்கப்பட்டு விட்டால், அவை ஒரு தலை முறையல்ல இரண்டு மூன்று தலைமுறை மாணவர்களின் கல்விக்கும் அவர் தம் வாழ்க்கை முன்னேற்றத்துக்கும் பாறாங்கல் போன்று தடை போட்டுவிடும்.

ஒரு நாட்டின் கல்வி வளர்ச்சியிலேயே அந்த நாட்டு மக்களின் சகல வகையான முன்னேற்றங்களும் தங்கியுள்ளன. அவை தடைப்படுமானால் பொருளாதார வளர்ச்சி, புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி ஏனைய நாடுகளுக்கு நிகராக முன்னேறுதல், அவற்றினூடு மக்களின் வாழ்க்கைத் திறன்களையும், வாழ்வாதார அடிப்படைகளையும் பெருக்கி உயர்த்துதல் ஆகிய பலதரப்பட்ட முன்னேற்றங்களும் கூக்குரலாகிவிடும்.

ஆகையால் ஊவாமாகாண முதல்வரின் கருத்தை அரசியல்வாதி ஒருவரின் மேலோட்டமான கருத்து என்று ஒதுக்கிவிடமுடியாது. கல்வித்துறை பாழ்பட்டால், அல்லது சறுக்குண்டால் இன, மொழி, பிர தேச வேறுபாடின்றி நாட்டின் ஒவ்வொரு மாணவனின், எதிர்காலப் பிரசையினதும் வாழ்க்கை பாழ்பட்டுப் போவதற்கான வாய்ப்பு தானாக வந்துசேரும்.

ஒரு சமூகத்தின் கண் போன்றது கல்வி. அது தொடர்பில் அக்கறையும் அவதானமும் இல்லாமல் அசட்டையாகவும் பழிவாங்கும் இயல்புட னும் நோக்குடனும் அரசும், அதன் அலகுகளும், அதிகாரிகளும் செயற் பட முனையும் போதெல்லாம் வேண்டாத பிணக்குகளும் அவை வழி பிறக்கும் பின்னடைவுகளும் மலியும்.

கடந்த சுமார் மூன்று மாதங்களுக்கும் மேலாக, (99 நாள்களாக) நாட்டின் அதியுயர் கல்விப் பீடங்களான பல்கலைக்கழகங்கள் மூடிக்கிடந்ததால் மாணவர்களின் உயர்கல்விப் போதனை முடங்கிப் போனதும் ஓர் உதாரணம். பல்கலைக்கழக ஆசிரியர்கள் தமது முதன் மையான கோரிக்கைகளை முன்வைத்து பணிப்புறக்கணிப்பில் ஈடுபட் டதும், மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டதும் உயர்கல்வி அமைச்ச கத்தின் குளறுபடிகளாலும் வீம்புத் தனங்களாலுமே என்பதனை மக்கள் இப்போது புரிந்துகொண்டுள்ளனர்.

இலவசக் கல்வி மற்றும் அரச பல்கலைக்கழகத் திட்டத்தைப் பாது காக்குமாறு கோரிப் பல்கலைக்கழக ஆசிரியர்களாலும் பல்கலைக்கழக மாணவர்களாலும் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் உயர்கல்வித் துறையின் பின்னடைவுகளையும் அதிலுள்ள ஓட்டை ஒடிசல்களையும் புட்டுக்காட்டின.

அரச தரப்பின் வீம்புத்தனமான போக்கும், தாம் சொல்வதனையே பல்கலை. ஆசிரியர்கள் கேட்டுப் பணிந்து செயற்பட வேண்டும் என்ற போக்கும், பெரும் எண்ணிக்கையான உயர்கல்வி மாணவர்களின் மூன்றுமாதக் கல்வியை அறுத்துச் சிதைத்தது.

அமைச்சர்கள் முதற்கொண்டு அதிகாரிகள் வரை மாணவர்களின் கல்வி இழப்பையும் அதனால் அவர்களுக்கு உண்டாகக் கூடிய பாதிப்பு களையும் மனதில் கொள்ளாமல் பல்கலைக்கழக ஆசிரியர்களின் கோரிக்கையில், தவறு காண்பதிலும் விதண்டாவாதம் பேசுவதிலும் காலத்தை வாங்கினர்.

அதனைத் தட்டிக்கேட்பதற்குப் பதிலாக, அரச உயர் மட்டங்கள் கண்டும் காணாதது போன்று செயற்பட்டதும் மறுவடிவில் வந்து பல்கலை மாணவர்களையே பெரிதும் பாதிப்புற வைத்துள்ளது. பல்கலைக்கழ கங்களை அரசியல் மயப்படுத்தும் திட்டம் என்ற மாணவர்களின் குற்றச்சாட்டும் கவனத்தில் கொள்ளத் தக்கதாகும்.

இத்தகைய ஒரு சூழமைவில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் குடும்ப உறுப்பினர் சசீந்திர ராஜபக்ஷ வெளிப்படுத்தியுள்ள கருத்து, கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை ஓரங்கட்டும் வகையிலான, அரசமைப்புச் சட்டத்துக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை இல்லாது ஒழிக்கவேண்டும் என்ற ஜனாதிபதியின் சகோதரர் பாதுகாப்புச் செய லாளர் கோத்தபாயவின் கருத்துக்கும், சசீந்திர ராஜபக்ஷவின் நாட்டு நலன் - கல்வி நலன்- நாடிய கருத்துக்கும் இடையில் பெரும் இடைவெளி உண்டு. அது மலைக்கும் மடுவுக்கும் நிகரானது என்றும் கொள்ளலாம்.

தரம் 5 இல் 70 புள்ளிகளுக்கு மேல் பெறும் மாணவர் சித்திபெற்றவரே

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

தென்மராட்சி,ஒக்.18

ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி இரு பாடங் களிலும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றால் அந்த மாணவர்கள் சித்தி பெற்றுள்ளனர் எனக் கருத முடியும்.

பரீட்சையில் சித்திபெறும் வறு மைக் கோட்டின் கீழ் உள்ள மாண வர்களுக்கு நிதி வழங்கும் திட்டம் உள்ளது. அந்த நிதி கொடுப்பதற்கு குறிப்பிட்ட அளவு மாணவர்களே தெரிவு செய்யப்படுவர்.

அந்த குறிப்பிட்டளவு மாணவர் களைத் தெரிவு செய்யும் அளவு முறையே வெட்டுப்புள்ளியாகும். வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றால் மட்டுமல்ல பரீட்சையில் 70 இற்கு மேல் புள்ளிகள் பெற்ற அனைத்து மாண வர்களும் சித்திபெற்றவர்களேயாவர்.

இவ்வாறு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்ட தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேம காந்தன் உரையாற்றினார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது குடும்பத்தின் வருமான நிலை, படிவத்தில் பதிவு செய்யப் பட வேண்டும்.

குடும்பத்தின் வருமான நிலை யைக் கருத்தில் கொண்டு புலமைப் பரிசில் நிதி வழங்குவதற்கான மாண வர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

நிதி பெறுவதற்கு ஒதுக்கப் படும் எண்ணிக்கையின் அடிப் படையில் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர். அந்த அளவின் இறுதி நிலையை அடையும் மாணவர் பெறும் புள்ளிகளே வெட் டுப் புள்ளியாக அறிவிக்கப்படும்.

குடும்ப வருமான உச்ச நிலைக்கு மேல் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் புள்ளிகள் பெற்றாலும் அவர்களுக்கு புலமைப் பரிசில் நிதி அரசால் வழங்கப்படுவதில்லை.

அவ்வாறான மாணவர்கள் இன் றைய நிகழ்வுகளில் கிடைக்கும் பரி சில்களை மட்டும்தான் பெறமுடியும்.

தனது பிள்ளை ஐந்தாம் தரப் புல மைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற வேண்டும் என ஒவ்வொரு பெற்றோரும் ஆரம்பம் முதல் பெரு முயற்சி எடுக்கின்றனர்.

ஆரம்பப் பிரிவு கல்வி நிறை வடைந்து, இடைநிலை கல்வியை தொடரும் போது பெற்றோர் அக்கறை கொள்வதில்லை.

மாணவர்களின் பெற்றோர் ஆரம்பப் பிரிவில் காட்டும் அக்க றையை இடைநிலைப் பிரிவிலும் காட்டினால் அந்த மாணவர் இடை நிலை, உயர்நிலை பிரிவுகளில் சித்திபெறுவதுடன் அதற்கு மேற் பட்ட கல்வி நிலையிலும் சாதனைகள் படைக்க வாய்ப்புக்கள் ஏற்படும்.

மாணவர்கள் பெறும் சாதனைகள் அந்தப் பாடசாலைக்கு பெருமை சேர்ப்பதுடன், இவ்வாறான விழாக் களையும் காணமுடியும்.-என்றார்.

(ம-9)

கலவன் பாடசாலைகளை மாத்திரமே எதிர்காலத்தில் நிறுவத் தீர்மானம்

கல்வி அமைச்சர் தகவல்

கொழும்பு,ஒக்.18

எதிர்காலத்தில் கலவன் பாடசா லைகளை மாத்திரமே நிறுவுவதற்கு கல்வியமைச்சு கொள்கையளவில் தீர்மானம் மேற்கொண்டுள்ளது.

அதற்கமைய புதிதாக ஆண்கள் பாடசாலை, மகளிர் பாடசாலை என்றோ சிங்கள, தமிழ், முஸ்லிம் பாடசாலை என்றோ பிரித்து வெவ் வேறாக அடையாளப்படுத்தப்பட மாட்டாது என்று கல்வியமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள் ளார்.

ஏற்கனவே ஆண்கள் மற்றும் மகளிர் பாடசாலைகள் என்றவாறும் சிங்கள, தமிழ், முஸ்லிம் பாடசாலைகள் என்றவாறும் நிர்வகித்துச் செல்லப் படும் பாடசாலைகளுக்கு இந்தத் தீர்மானம் செல்லுபடியாகமாட்டாது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சவால்களுக்கு முகம்கொடுக்கக் கூடிய மாணவர்கள் கலவன் பாட சாலைகளிலேயே உருவாகின்றனர் என்பது உலகில் ஏற்றுக்கொள்ளப்பட் டதொரு கருத்து நிலைப்பாடாகியுள்ளது.

அந்த எண்ணக்கருவுக்கு அமைய இலங்கையிலும் இந்த மாற்றத்தை ஏற்படுத்த தீர்மானிக்கப்பட்டுள் ளது.-என்று மேலும் தெரிவிக் கப்பட்டது.

(ம-22)

வாராந்த சொற்பொழிவு

வடமராட்சி,ஒக்.18

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிர மத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ''தேவி பாகவதம்'' என்னும் தலைப்பில் தொடர் சொற்பொழிவு நடைபெறும்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் சிரேஷ்ட விரிவு ரையாளர் அ.குமாரவேல் இந்தச் சொற்பொழிவை நிகழ்த்துவார்.

(ம-8)

யாழ்.மாவட்டத்தில் 230 திட்டங்கள் 'என்றிப்'பின் கீழ் தயார் நிலையில்

யாழ்ப்பாணம்,ஒக்.18

யாழ்.மாவட்டத்தில் வடக்கின் துரித மீட்சித் திட்டமான என்றிப்பின் 230 உட்கட்டுமானத் திட்டங்கள் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் அரச அதிபரினால் தயார் நிலையில் வைக்கப்பட் டுள்ளன.

2012 இல் அபிவிருத்திக்கு இந்தத் திட்டங்கள் உள்வாங் கப்படுமா இல்லையா? என்று அரசியல் தலைவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

எதிர்வரும் முதலாம் திகதி மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் இரண்டாவது கூட்டம் நடத்து வதற்கான அனுமதியை இணைத் தலைவர்கள் ஏனைய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் பெற்றுள்ளனர்.

அத்துடன் நவம்பர் முதலாம் திகதி நடத்துவதற்கான துரித ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அரச அதிபருக்கு பணித்துள்ள துடன், நடந்து முடிந்த ஒருங்கி ணைப்பு குழுக் கூட்டக் குறிப் பையும் உடன் சகல திணைக்கள தலைவர்களுக்கும் அனுப்பி வைக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

இதேவேளை, 2012 இல் யாழ். மாவட்ட அரச திணைக்க ளங்களால் உட்கட்டுமான அபி விருத்திக்காக முன்வைக்கப்பட்ட ''என்றிப்'' திட்டங்கள் 2012 ஆம் ஆண்டுக்கான இரண்டாவது அபி விருத்திக் கூட்டத்தில் ஏற்றுக்கொள் ளப்படுமா? இல்லையா? எனவும் தொடர்ந்தும் கேள்வி எழுப்புகின்றனர்.

கடந்த காலத்தில் அதாவது 2010 இல் இருந்து 2011 நவம்பர் வரை வடக்கின் துரித மீட்சித் திட்டப் பணிப்பாளர் எந்திரி ச.சு. சிவகுமார் காலத்தில் 606 உப கருத்திட்டங்களுக்கு 7000 மில் லியன் ரூபா வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

2012 இல் 'என்றிப்' திட்டத் துக்கு யாழ்.மாவட்டத்துக்கு ஒதுக் கப்பட்ட 500 மில்லியன் ரூபா பயன்படுத்தப்படுமா எனவும் கேள்வி எழுப்பப்படுகிறது. (ம-41)

வடக்கில் கண்ணி வெடிகள் அகற்ற போதிய நிதி ஒதுக்கீடு கிடைப்பதில்லை

சுவிஸ் கண்ணி வெடி அகற்றும் அமைப்பின் இலங்கைக்கான திட்டப் பணிப்பாளர்

கொழும்பு,ஒக்.18

வடக்கில் நிலக்கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் தொடர்பாக போதிய அளவிலான நிதி ஒதுக்கீடுகள் கிடைப் பதில்லை என்று சுவிஸ் கண்ணிவெடி அகற்றும் அமைப் பின் இலங்கைக்கான திட்டப் பணிப்பாளர் ஹார்முடி தோமஸ் தெரிவித்துள்ளார்.

கண்ணிவெடியகற்றும் குறித்த எவ்.எஸ்.டி. நிறு வனம் கண்ணிவெடிகளை அகற்றும் செயற்பாட்டில் [illegible] ஆண்டுகளாக [illegible] செய்துள்ளது.

இந்த நிதியாண்டு அண்மையில் முள்ளியவளை மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற வேளையிலேயே ஹார்முடி தோமஸ் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது:-

நிலக்கண்ணிவெடிகளை அகற்றும் அமைப்புக்கள் தொடர் பாகக் கிடைக்கும் நிதி ஒதுக்கீடுகள் போதுமானதாக இல்லை. இதன் காரணமாக வடமாகாணத்தில் புதைத்து வைக்கப்பட்டிருக்கும் கண்ணி வெடிகளை அகற்றுவது தொடர்பாக மேலும் ஏழு ஆண்டுகள் தேவைப்படும்.

தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் மீளக்குடிய மர்ந்துள்ள மக்கள் வாழும் அனைத்துக் கிராமங்களிலும் நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளன எனவும் விளை நிலங்களில் இன்னமும் நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்பட்டு முடிக்கப்படவில்லை என்றும் தெரி வித்தார்.

(ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா நகரக் கடைகளின் ஊழியருக்கு ஞாயிறு விடுமுறை

கட்டாயம் வழங்கக் கோருகிறார் தொழில்ஆணையாளர்

வவுனியா, ஒக்.18

வவுனியா நகரப் பகுதியில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் வாரத்தில் ஞாயிறு விடுமுறை தினத்தில் தொழிலாளர்களுக்கு விடுமுறை வழங்கவேண்டும் என்று வடமாகாண பிரதி தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வவுனியா நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் தொழில் சட்டத்தைக் கடைப்பிடிக்காது ஞாயிறு விடுமுறை நாளிலும் வியாபாரத்தை மேற்கொண்டு வந்தனர்.

> நகரப் பகுதியில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் ஞாயிறு விடுமுறை நாளில் மூடப்பட்டு அங்கு பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அன்றைய தினம் விடுமுறை வழங்க வேண்டும்.

இது தொடர்பாக வவுனியா அரச அதிபர் தலைமையில் கடந்த திங்கட்கிழமை கூட்டம் ஒன்று இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் 300 இற்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் மற்றும் வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

நகரப் பகுதியில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் ஞாயிறு விடுமுறை நாளில் மூடப்பட்டு அங்கு பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அன்றைய தினம் விடுமுறை வழங்க வேண்டும் என்று இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இந்தத் தீர்மானத்தை மீறி வர்த்தக நிலையங்களை ஞாயிறு விடுமுறை தினத்தில் திறந்து வியாபாரம் மேற்கொண்டால் சம்பந்தப்பட்ட வர்த்தக நிலையங்கள் மீது தொழிற் சட்டத்தின் கீழ் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.- என்றார். (த-17)

துணுக்காய் கிராமங்களில் யானைகளால் தொல்லை

அக்கராயன், ஒக்.18

துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவில் யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள அம்பலப் பெருமாள்குளம், அமதிபுரம், ஆரோக்கியபுரம், தென்னியங்குளம், கோட்டை கட்டியகுளம், உயிலங்குளம், பழைய முறிகண்டி, புத்துவெட்டுவான் ஆகிய கிராமங்களில் இரவு வேளைகளில் யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.

இரவுவேளைகளில் யானைகளை விரட்டும் பொருட்டு இங்குள்ள மக்கள் நெருப்பை எரித்தும் ஒலி எழுப்பியும் வருகின்றனர்.

இரவு வேளைகளில் மக்கள் விழித்திருப்பதையும் அவதானிக்க முடிகின்றது. குடிதண்ணீர் கிடைக்காததால் யானைகள் ஊர்மனைகளுக்குள் வருகின்றன என்று கிராமவாசிகள் தெரிவிக்கின்றனர். (க-18)

வெள்ள ஆபத்தை எதிர்கொள்ளும் பரந்தன் சிவபுரம் கிராமம்

அக்கராயன், ஒக்.18

பரந்தன், சிவபுரம் கிராமம் வெள்ள ஆபத்தை ஆண்டுதோறும் எதிர்கொண்டு வருவதாக இங்கு வசிக்கும் மக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கிளிநொச்சி அரச செயலகத்தின் இடர்முகாமைத்துவ பிரிவில் இடம்பெற்ற கூட்டத்தில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

மழை காலங்களில் இந்தக் கிராமம் வெள்ள அபாயத்தை எதிர்கொள்வதாகவும் 100 நாள் வேலைத் திட்டம் கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும்போது சிவபுரம் கிராமம் முதன்மைப்படுத்தப்பட வேண்டும் எனவும் இந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதேபோன்று கண்டாவளையிலுள்ள குஞ்சுக்குளம் கிராமமும் வெள்ள ஆபத்தை எதிர்கொண்டுள்ளது.

இரணைமடுக்குளம் நிரம்பி வழியும்போது இந்தக் கிராமங்கள் வெள்ள அபாயங்களை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

பஸ்சேவை இடம்பெறாமையால் அல்லல்படும் கிராம மக்கள்

அக்கராயனிலிருந்து துணுக்காய் செல்லும் பஸ் சேவை கடந்த இரு வாரங்களுக்கு மேலாக இடம் பெறாமையால் துணுக்காயைச் சேர்ந்த பல கிராமங்களிலுள்ள மக்கள் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

காலையில் அக்கராயனிலிருந்து பயணிக்கும் தனியார் பஸ் அம்பலப்பெருமாள்குளம், கோட்டை கட்டியகுளம், தென்னியங்குளம், உயிலங்குளம், ஆலங்குளம் வழியாக துணுக்காயைச் சென்றடைகின்றது. தற்போது இரு வாரங்களாக இந்த பஸ்சேவை இடம்பெறாமையால் கிராம மருத்துவமனை பிரதேச செயலகம் உட்பட வேறு இடங்களிலும் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் போக்குவரத்து இடர்களை எதிர்கொண்டுள்ளனர்.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 20 கிராமங்களில் ஒன்றில் கூட அரச பஸ் சேவை இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க-18)

மழை பெய்ததால் நீங்கியது வறட்சி



துணுக்காய், ஒக்.18

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய், பாண்டியன்குளம் பிரதேசங்களில் இடை இடையே மழை பெய்து வருவதால் இங்கு நிலவிய வறட்சி ஓரளவு தணிந்து காணப்படுகின்றது.

இந்தப் பிரதேசங்களில் மழை பெய்து வருவதால் விவசாயிகளும் தங்கள் வயல் வேலைகளை ஆரம்பித்துள்ளனர். இங்கு கடும் வறட்சி நிலவியதால் விவசாயிகள் மிகவும் கவலையடைந்த நிலையில் காணப்பட்டனர். இம்முறை மழை பொய்த்தால் இந்தப் பிரதேசத்தில் கடும் பஞ்சம் நிலவுமென்றும் மக்கள் கவலையுடன் கூறிக் கொண்டனர்.

ஆனால் கடந்த 12 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணியளவில் ஆரம்பித்த மழையால் காய்ந்திருந்த தென்னை, கமுகு, மா, வாழை ஆகிய பயிர்கள் தலை நிமிர்ந்து காணப்படுகின்றன. தொடர்ந்து மூன்று நாள்கள் மழை பெய்ததால் தற்காலிக குடிசைகளில் வாழும் மக்கள் இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர். ஆனால் விவசாயிகள் மகிழ்ச்சியுடன் தமது வேலைகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-415)

சுற்றுச் சூழலையும் கவனிப்பார்களா...?

மல்லாவி நகரப் பகுதியிலுள்ள ரயர்க் கடைகளில் காணப்படும் பாவனைக்குதவாத ரயர்கள் தீயிட்டு கொளுத்தப்படுவதால் சுற்றுச் சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் கரும்புகை காணப்படுகின்றது. (க-415)

வவுனிக்குளம் சங்கத்தினால் வாணி விழாவுக்கான பொதிகள்

துணுக்காய், ஒக்.18

வவுனிக்குளம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் வாணி விழாவை முன்னிட்டு பொதிகள் வழங்கப்பட்டன.

இந்தப் பொதிகள் வழங்கும் நிகழ்வு நேற்றைய தினம் பிற்பகல் வேளையில் சங்கத்தின் தலைவர் க.குணசிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர்கள் 105 பேருக்கு நவராத்திரி விழாவுக்குரிய பொருள்கள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டன.

இதில் 80 சங்க அங்கத்தவர்களும், 25 பணியாளர்களும் அடங்கியிருந்தனர்.

இந்தப் பொதிகள் வழங்கும் நிகழ்வில் வவுனிக்குளம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் க.யோகதாசன், கூட்டுறவுத் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அங்கத்தவர்கள், பணியாளர்கள் என பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-415)

முகமாலையில் நடமாடும் மரம், இரும்புத் திருடர்கள்

கிளிநொச்சி, ஒக்.18

கிளிநொச்சி முகமாலையிலுள்ள ஆபத்தான வெடிபொருள்கள் காணப்படும் பகுதிகளிலுள்ள பொதுமக்களின் காணிகளில் மரங்கள் மற்றும் இரும்புகள் ஆகியவற்றைக் களவாடிவரும் நபர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என்று பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

மீளக்குடியமர்த்தப்பட்ட கிளிநொச்சி முகமாலைப் பகுதியின் குறிப்பிட்ட சில பகுதிகள் இன்னமும் மீளக்குடியமர்வு செய்யப்படாமல் வெடிபொருள் ஆபத்தான பகுதிகளாக காணப்படுகின்றன.

இந்த நிலையில் பொதுமக்களின் காணிகளிலுள்ள பனைமரங்கள், மற்றும் இரும்புப் பொருள்கள் பகல் வேளைகளில் சிலரால் களவாடப்பட்டு வருகின்றன.

இதேவேளை குறித்த பகுதிகளிலுள்ள ஆலயங்கள் மற்றும் பொது இடங்களில் உள்ள இரும்பு உலோகப் பொருள்களும் களவாடப்பட்டு வருகின்றன.

தகவல் ஒன்றின் பிரகாரம் இவ்வாறு சட்டவிரோதமான முறையில் மரங்களை

> பொதுமக்களின் காணிகளிலுள்ள பனைமரங்கள், இரும்புகள் களவாடப்பட்டு வருகின்றன.

அறுத்துக் கொண்டிருந்த இருவரை அவர்களது ஓட்டோவையும் கடந்த 11 ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் பொலிஸார் கைது செய்த போதிலும், பின்னர் குறித்த நபர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அதேபோன்று கடந்த திங்கட்கிழமை இரவு அங்குள்ள இந்து ஆலயம் ஒன்றில் இருந்த இரும்புத் தூண்கள் மற்றும் அப்பகுதியில் காணப்பட்ட இரும்புப் பொருள்களைக் கொள்ளையிட்ட ஒரு குழுவினரைக் கையும் மெய்யுமாகப் பிடித்து பொலிஸாரிடம் மக்கள் கையளித்த போதிலும் அவர்கள் மீதும் பொலிஸார் எந்த வித நடவடிக்கைகளும் எடுக்கவில்லையெனவும் பாதிக்கப்பட்ட இப் பகுதி மக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-6)

திருவையாறு ம.வியில் கல்வி தொடர்பான கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஒக்.18

கிளிநொச்சி திருவையாறு மகா வித்தியாலயத்தில் கல்வி அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி திருவையாறு மகா வித்தியாலயத்தின் கல்வி அபிவிருத்தி மற்றும் பாடசாலையின் தேவைப்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த 15 ஆம் திகதி பிற்பகல் 5 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் மற்றும் கல்வித்திணைக்கள அதிகாரிகள் பழைய மாணவர் சங்க நிர்வாகத்தினர், பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாகத்தினர் பலர் கலந்துகொண்டு பாடசாலையின் எதிர்கால வளர்ச்சி மற்றும் மாணவர்களின் கல்வி அபிவிருத்தி ஆகிய விடயங்கள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

மழையால் இடர்களை எதிர்கொள்ளும் மாணவர்கள்

அக்கராயன், ஒக்.18

பூநகரி மகாவித்தியாலய மாணவர்கள் தற்போது பெய்துவரும் மழை காரணமாக இடர்களை எதிர்கொண்டு வருவதாக பூநகரி கோட்டக் கல்வி அலுவலர் சு.தர்மரட்ணம் தெரிவித்துள்ளார்.

530 மாணவர்களுக்கான கல்வி பயிலும் இந்தப் பாடசாலையில் யுனிசெப் நிறுவனத்தால் கட்டட வேலைகள் இடம்பெற்று வருகின்றன. ஆனால் ஓலைக் கொட்டகைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் மழையால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

போக்குவரத்து நெருக்கடியை பூநகரி மாணவர்கள் நாளாந்தம் எதிர்கொண்டு வருகின்றனர். தற்போது மழை பெய்யத் தொடங்கியிருப்பதால் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு ஓரளவு குறைந்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ.கிழங்குச் செய்கையில் யாழ்.விவசாயிகள் ஆர்வம்

அச்சுவேலி,ஒக்.18

யாழ்.மாவட்ட விவசாயிகள் இந்த வருடம் உருளைக்கிழங்கு செய்கையில் பெரும் ஆர்வம் கொண்டுள்ளனர்.

இந்த வருடம் 35 ஹெக்ரேயர் பரப்பளவு நிலத்தில் உருளைக்கிழங்கு செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. கடந்த வருடம் 24 ஹெக்ரெயரில் உருளைக்கிழங்கு செய்கை மேற்கொள்ளப்பட்டது.

கடந்த வருடம் பயன்படுத்தப்பட்ட விதை உருளைக் கிழங்கு இனங்களான ''கல்வைற்'' ''ஹெலைட் சோடா'' ஆகிய இனங்களே இந்த வருடமும் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

விதை உருளைக் கிழங்கு தேவையான விவசாயிகள் மற்றும் தேவையான அளவு என்பன விவசாய சம்மேளனங்கள் ஊடாக பதிவு செய்யப்படுகின்றன.

இந்த வருடத்துக்கான உருளைக் கிழங்கு செய்கைக்கு தேவையான விதை இனங்கள் மற்றும் உதவிகள் தொடர்பான கலந்துரையாடல்கள் விவசாய சம்மேளனரீதியாக கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த வகையில் கலந்துரையாடல்கள் பெருமளவில் உருளைக் கிழங்குச் செய்கை மேற்கொள்ளப்படும் புன்னாலைக்கட்டுவன், அச்சுவேலி, குட்டியபுலம், ஈவினை, சிறுப்பிட்டி, அச்செழு, உரும்பிராய், ஊரெழு, தொல்புரம் உள்ளிட்ட பகுதிகளில் நடைபெற்றன.

உருளைக் கிழங்கு செய்கை தொடர்பான கலந்துரையாடல்களில் விவசாயத் திணைக்கள உயர் அதிகாரிகள் மற்றும் விதை உருளைக் கிழங்கை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்து உள்ளூர் விவசாயிகளுக்கு விநியோகிக்கும் நிறுவனத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த வருடம் விதை உருளைக் கிழங்கு 50 கிலோ கொண்ட பொதி ஒன்றின் விலை 11 ஆயிரம் ரூபாவாக இருக்கும் என்று கூறப்பட்டது. கடந்த வருடம் 50 கிலோ கொண்ட பொதியின் விலை 8 ஆயிரம் ரூபாவாக இருந்தது.

ஒரு பொதியில் அறுநூறு கிழங்குக்கு குறையாத எண்ணிக்கையில் விதை உருளைக் கிழங்குகள் இருக்கும் என்று கூறப்பட்டது.

கடந்த காலங்களில் மூன்று தர அளவு கொண்டனவாக 28-35, 35-45, 45-55 சென்றிமீற்றர் கொண்டதாக பொதி செய்யப்பட்டிருந்த விதை உருளைக் கிழங்கு கடந்த வருடத்தில் இருந்து தற்போது 28- 55 சென்றிமீற்றர் கொண்ட ஒரேதர அளவு கொண்டனவாக பொதி செய்யப்பட்டு வருகின்றன.

50 கிலோ கொண்ட விதை உருளைக்கிழங்கை பயன்படுத்தி குறைந்தது 12 அந்தர் உருளைக் கிழங்கை அறுவடை செய்யலாம். ஆனால் கடந்தவருடம் சில விவசாயிகள் 18 அந்தர் உருளைக் கிழங்கையும் அறுவடை செய்துள்ளனர் என்றும் கூறப்பட்டது.

காலநிலை முரண்பாடு நோய்த்தாக்கம் இல்லாத நிலையில் உருளைக் கிழங்கு செய்கை மூலம் விவசாயிகள் கணிசமான வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

சராசரிக்கு குறையாத விளைச்சல் கிடைக்கும் இடத்து யாழ். மாவட்டத்தில் ஒரு கிலோ உருளைக் கிழங்கின் உற்பத்திச் செலவு 45 ரூபா வரையில் இருக்கலாம் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் உருளைக்கிழங்கு தனிப்பட்ட சுவை கொண்டதாக இருப்பதால் தம்புள்ள மத்திய சந்தையில் அதற்குத் தனிப்பட்ட வரவேற்பு கிடைக்கின்றது.

இந்தவகையில் யாழ். மாவட்ட உருளைக் கிழங்கை இலங்கையில் ஏனைய பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் உருளைக் கிழங்கை அல்லது வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கை விட கூடுதலான விலைக்கு விற்பனை செய்யக்கூடிய வாய்ப்பு உள்ளது'' என்று யாழ். மாவட்ட விவசாயத்திணைக்கள பாடவிதான அபிவிருத்தி அதிகாரி இராமலிங்கம் சௌந்தரராசன் தெரிவித்தார். (ம-11)

நவக்கை பாலத்தைத் திருத்த மதகுக் குழாய்கள் வழங்கல்

யாழ்ப்பாணம்,ஒக்.18

நவக்கைப் பாலத்தைத் தற்காலிகமாக மீள் புனரமைக்க வீதி அபிவிருத்தி அதிகார சபை இரு பழைய மதகுக் குழாய்களை வழங்கியுள்ளது.

வேலணைப் பிரதேச சபைக் குட்பட்ட நவக்கைப் பாலம் புனரமைப்புக்காக திட்டம் முன் வைக்கப்பட்ட நிலையில் அத் திட்டம் இடை நடுவில் கைவிடப்பட்டது. இதனால் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை விவசாயிகளுக்கும் அப் பகுதி மக்களுக்கும் ஏற்பட்டது.

இதனை அடுத்து தற்காலிகமாக நவக்கைப் பாலத்தை மீளப் புனரமைக்க நடவடிக்கை எடுக்க பிரதேச சபைத் தலைவர் வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் தொடர்பு கொண்டதற்கு இணங்க இரு பழைய மதகுக் குழாய்கள் வழங்கப்பட்டுள்ளன. (ம-50)

சட்டவிரோதமாகக் கடலட்டை பிடித்த 6 பேருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஒக்.18

சட்டவிரோதமாகக் கடலட்டை பிடித்த 6 பேருக்கு 18 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. கடற்படையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட குறித்த சந்தேகநபர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் 6 பேருக்கும் 18 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராசா முன்னிலையில் கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வழக்கின் சந்தேகநபர்களான 6 பேரும் புங்குடுதீவு மேற்கு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களைக் கடற்படையினர் கைது செய்து யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் பாரப்படுத்தினர்.

பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது இந்த அபராதம் விதிக்கப்பட்டது. (ம-13)

அபிவிருத்திக்கு நிதி

யாழ்ப்பாணம், ஒக்.18

நெடுந்தீவு மத்தி சீக்கிரியாம் பள்ளம் அ.த.றோ.க. பாடசாலைக்கு காணி கொள்வனவுக்கென நெடுந்தீவு பாடசாலைகளின் கனடா பழைய மாணவர் மன்றம் 45 ஆயிரம் ரூபாநிதி உதவி செய்யவுள்ளது. அதேசமயம் மத்தி றோ.க. மகா வித்தியாலயம், மேற்கு சைவப் பிரகாச வித்தியாசாலை ஆகிய வற்றுக்குத் தலா ஒரு நீரிறைக்கும் இயந்திரத்தையும் பழைய மாணவர் மன்றம் வழங்கவுள்ளது. அடுத்த வாரம் இவை பாட சாலை அதிபர்களிடம் கையளிக்கப்படவுள்ளன என்று கூறப்பட்டது. (ம-7)

எழுவைதீவு பிரதான வீதி சேதம்

எழுவைதீவு பிரதான வீதி நீண்ட காலமாக புனரமைப்புப் பணிகள் இடம்பெறாத நிலையில் மிகவும் மோசமாகச் சேதமடைந்து காணப்படுகிறது.

எழுவைதீவு மகாவித்தியாலயத்துக்குச் சமீபமாக இந்த வீதியின் பெரும் பகுதி கற்கள் சிதறிக் காணப்படுகிறது.

பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் இதனால் சிரமப்படுகின்றனர். தற்போது பெய்து வரும் மழை காரணமாக வெள்ளம் தேங்கியுள்ளது என்று எழுவைதீவு மக்கள் தெரிவித்தனர். பிரதான வீதியைத் திருத்தியமைக்க வீதி அபிவிருத்தித் திணைக்களம் துரித நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-7)

வேலணைப் பிரதேச நூலகத்தில் உள்ளூராட்சி வார கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஒக்.18

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வேலணை பிரதேச சபையின் நூலகத்தில் நூலகக் கண்காட்சி இடம் பெற்று வருகின்றது.

திங்கட்கிழமை ஆரம்பமான கண்காட்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா கண்காட்சி மண்டபத்தைத் திறந்து வைத்தார்.

வேலணைப் பிரதேச சபைக்கு உட்பட்ட வகையில் வேலணை, புங்குடுதீவு, மண்டைதீவு, அல்லைப்பிட்டி, நயினாதீவு ஆகிய பிரிவுகளில் உள்ள நூலகங்களை இணைத்து இக்கண்காட்சி இடம்பெறுகிறது.

இதன்போது வேலணைப் பிரதேச சபைக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்கள், முதியவர்கள், சிறுவர்கள் எனப் பலரும் கண்காட்சியைப் பார்வையிட்டு வருகின்றனர் என்று நூலகர் செல்வி எஸ்.வித்யா, சனசமூக அபிவிருத்தி அதிகாரி திருமதி பா.பாலசுப் பிரமணியம் ஆகியோர் தெரிவித்தனர்.

இதேவேளை, முப்பரிமாணம் தொடர்பான விவரண விளக்கமும் நூலகர் செல்வி எஸ்.வித்யாவால் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-50)

ஊர்காவற்றுறை அக்கா தங்கை குளம் யூ.என்.எச்.சி.ஆர் நிதி உதவியுடன் புனரமைப்புச் செய்யும் பணி இடம்பெற்று வருகிறது. சமுர்த்தி பயனாளிகள் சிரமதானப் பணியில் ஈடுபடுகின்றனர். இரண்டு மில்லியன் நிதியில் இத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. (ம-7)

வடமராட்சி, கெருடாவில் ஊடாக ஊரிக்காட்டுக்குச் செல்லும் வீதி, போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. இந்த வீதியை பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் விவசாயிகள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் பயன்படுத்தி வருகின்றனர். இந்த நிலையில் குறித்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-253)

ஆரம்பப் பிரிவு மாணவரிடையே வினாடிவினா போட்டி

வடமராட்சி வலயத்திலுள்ள ஆரம்பப் பிரிவு படசாலை மாணவர்களிடையே வினாடி வினாப் போட்டிகளை நடத்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆரம்பப்பிரிவைச் சேர்ந்த தரம் 4,5 மாணவர்களிடையே முதலில் கோட்ட மட்டத்தில் நடத்தப்படும்.

கோட்ட மட்டத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் இப்போட்டி பருத்தித்துறைக் கோட்டத்தில் வட இந்து ஆரம்பப் பாடசாலையிலும், கரவெட்டிக் கோட்டத்தில் நெல்லியடி மெ.மி.த.க பாடசாலையிலும் , மருதங்கேணி கோட்டத்தில் தாளையடி றோ.க.த.க பாடசாலையிலும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த-8)

உப உணவுப் பயிர்ச் செய்கையாளர் 3 ஆயிரம் பேருக்கு இம்முறை கடன்

இலங்கை வங்கியின் பருத்தித்துறை கிளை நடவடிக்கை

வடமராட்சி,ஒக்.18

பருத்தித்துறை மருதங்கேணிப் பிரதேச செயலர் பிரிவுகளில் வெங்காயம், மிளகாய் போன்ற உணவுப் பயிர்ச் செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகளுக்கு கடன் வழங்கலை பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளை அதிகரித்துள்ளது.

இதுவரை காலமும் குறிப்பிட்டளவு எண்ணிக்கையானோருக்கே கடன் வழங்கப்பட்டு வந்த நிலையில் இதனை தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளது.

இரு பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த 3 ஆயிரம் விவசாயிகளுக்குத் தலா இரண்டு லட்சம் ரூபா வீதம் இவ்விவசாயக் கடன்கள் வழங்கப்படவுள்ளது.

இவற்றில் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 2 ஆயிரம் பேருக்கும் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த ஆயிரம் பேருக்கும் கடன்களை வழங்க பருத்தித்துறை கிளை ஏற்பாடு செய்துள்ளது.

பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளையால் கடந்த வருடம் 2 ஆயிரம் விவசாயிகளுக்கே விவசாயக் கடன் வழங்கப்பட்டது. இவ்வருடம் கடன் பெறும் விவசாயிகளின் எண்ணிக்கை ஆயிரத்தால் உயர்த்தப்பட்டது.

கடந்த காலங்களில் விவசாயக் கடன்களைப் பெற்று உரிய காலத்தில் ஒழுங்கு அடிப்படையில் கடன்களை மீளச் செலுத்திய விவசாயிகளுக்கு இந்த வருடம் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. சில விவசாயிகள் இந்த முறைதான் புதிதாகக் கடன் பெறுகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய ஆதீனமாக இருப்பதற்கு நித்தியானந்தா தகுதியற்றவர்

நீதிமன்றில் தமிழக அரசு தெரிவிப்பு

இளைய ஆதீனமாக பொறுப்பில் இருப்பதற்கு சுவாமி நித்தியானந்தா தகுதியில்லாதவர் என்று தமிழக அரசு சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்தது.

கடந்த 6 மாதங்களாக சுவாமி நித்தியானந்தா விவகாரத்தில் தமிழக அரசு நடவடிக்கைகள் எடுக்காத காரணத்தால் அதிகமான வழக்குகள் உயர் நீதிமன் றத்தில் தொடரப்பட்டுள் ளதாக நீதிபதி பானுமதி சுப்பையா நேற்றுமுன்தினம்தெரிவித்தார்.

இதுதொடர்பாக தமிழக அரச சட்டத்தரணி நவநீத கிருஷ்ணன் கூறியதாவது:-

ஆதீனம் இறந்த பின்னரே வாரிசாக இளைய ஆதீனத்தை நியமிக்க முடியும் என்றும் ஆதீன பக்தரே இந்த பொறுப்புக்குத் தகுதியானவர்.

சமுதாயத்தில் பாலியல் குற்றச்சாட்டு உட்பட பல வழக்குகள் நித்தியானந்தா மீது தொடரப்பட்டிருக்கிற போது அவர் இந்தப் பொறுப்புக்குத் தகுதியில்லாதவர்.

மதுரை ஆதீனம் அருணகிரி நாதர் மற்றும் நித்தியானந்தா உருவாக்கிய அறக்கட்டளை சட்டவிரோத மானது. அறக்கட்டளை மூலம் மதுரை ஆதீனத்தின் சொத்துக்களை அபகரிக்க அவர்கள் முயற்சிக்கின்றனர் - என்றார்.

ஆந்திர மாநிலம் ஹைதராபாத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நினைவுத் தபால் தலையை பிரதமர் மன்மோகன் சிங் வெளியிட்டு வைத்தார். அருகில் ஆந்திர முதல்வர் கிரண்குமார் ரெட்டி நிற்கின்றார்.

பாகிஸ்தான் கடற்படையால் இந்திய மீனவர்கள் 13 பேர் கைது

குஜராத் மாநிலம், போர்பந்தர் பகுதியைச் சேர்ந்த 13 இந்திய மீனவர்களை பாகிஸ்தான் கடற்படையினர் கைது செய்தனர். சர்வதேச கடல் எல்லையான ஷாக்குவாவ் தீவுப் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த 13 இந்திய மீனவர்களைக் கைது செய்ததோடு அவர்கள் சென்ற 12 படகுகளையும் சிறைப்பிடித்தனர். அதனையடுத்து படகுகளைக் கராச்சிக்குக் கொண்டு சென்றனர் என்று விடுவிக்கப்பட்ட ஏனைய மீனவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை கடந்த 12 ஆம் திகதி, இந்திய கடல் எல்லையில் மீன்பிடித்துக் கொண்டிருந்த 24 மீனவர்களை பாகிஸ்தான் கடற்படை கைது செய்து கராச்சிக்கு அழைத்துச் சென்றது குறிப்பிடத்தக்கது. (வ)

ஏவுகணைத் தாக்குதலை எதிர்கொள்ளும் திறனுடையது கூடங்குளம் அணு உலை

மத்திய அரசு தெரிவிப்பு

இந்தியாவிலேயே முதல் முறையாக, ஜெனரேஷன் 3 ப்ளஸ் என்ற நவீன தொழில் நுட்பம் கூடங்குளம் அணு உலையில் தான் பயன்படுத்தப்பட்டுள்ளது.

டில்லி, ஒக்.18

கூடங்குளம் அணு உலைக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு விசாரணை உச்சநீதிமன்றத்தில் நடை பெற்று வரும் நிலையில், ஏவுகணை மற்றும் விமானத் தாக்குதல்களையும் எதிர்கொள்ளக் கூடிய அளவுக்கு அந்த அணு உலை நவீன தொழில் நுட்பத்துடன் பாதுகாப்பாக அமைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

அணு உலைக்கு எதிரான வழக்கு விசாரணையில், கடந்த வாரம் மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி பிரசாந்த் பூஷண் வாதிட்டார்.

இதேவேளை பாதுகாப்பு, சுற்றுச்சூழல் உட்பட பல்வேறு அம்சங்கள் தொடர்பாக மத்திய அரசு பதிலளிக்க வேண்டும் என்று கடந்த வாரம் உச்சநீதி மன்றம் உத்தரவிட்டிருந்தது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மத்திய அரசின் சார்பில் சட்டமா அதிபர் வஹன்வதி வாதிட்டார். இதன்போது அவர் தனது வாதத்தில் தெரிவித்ததாவது:-

இந்தியாவிலேயே முதல் முறையாக, 'ஜெனரேஷன் 3 ப்ளஸ்' என்ற நவீன தொழில் நுட்பம் கூடங்குளம் அணு உலையில்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது.

விமானங்கள், ஏவுகணைகள் போன்றவை தாக்கினாலும் கூட அந்த அணு உலைக்குப் பாதிப்பு ஏற்படாது. விபத்து ஏற்பட்டாலும் கூட அணு உலை தானாகவே இயக்கத்தை நிறுத்தி விடும்.

அதேநேரத்தில் குளிரூட்டும் இயந்திரங்கள் இயங்க ஆரம்பித்துவிடும். பற்றரி மற்றும் ஜெனரேட்டர்களுடன் 24 மணி நேரமும் கூடுதல் மின் வசதிக்கும் இங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது-என்றார்.

இதன்போது நீதிபதிகள் குறுக்கிட்டு, கூடுதலாகப் பரிந்துரைக்கப்பட்ட 17 பாதுகாப்பு அம்சங்களை நிறைவேற்றவில்லை என்பது தற்போது முக்கிய குற்றச் சாட்டாக இருக்கிறதே என்று கேள்வி எழுப்பினர்.

அவை, புகுஷிமா அணு உலை விபத்துக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வைத் தொடர்ந்து பரிந்துரைக்கப்பட்ட கூடுதல் பாதுகாப்பு அம்சங்கள்தான். அவை 6 மாதத்தில் இருந்து பல்வேறு காலவரைய றைகளாக நிறைவேற்றப் பட்டு வருகின்றன - என்றார் வஹன்வதி. (வ)

அணுசக்தி துறையில் இந்தியாவுடன் இணைந்து செயற்பட ஆஸி.விருப்பம்

மத்திய வர்த்தகத் துறை அமைச்சர்

அணுசக்தி துறையில் இந்தியாவுடன் இணைந்து செயற்பட ஆஸ்திரேலியா விருப்பம் தெரிவித்ததாக மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் ஆனந்த் சர்மா தெரிவித்தார்.

மூன்று நாள் பயணமாக இந்தியாவுக்குச் சென்ற ஆஸ்திரேலியப் பிரதமர் ஜூலியா ரிச்சர்ட், நேற்று முன்தினம் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்துப் பேசியுள்ளார். இருநாட்டு பிரதமர்களும், இரு நாடுகளின் அணு சக்தி திட்டங்கள் குறித்துப் பேசியுள்ளனர்.

இந்தியாவின் அணு சக்திக்குத் தேவையான யுரேனியம் எரிபொருளை ஆஸ்திரேலியா வழங்க விரும்புகிறது என்று ஜூலியா தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இருநாட்டுப் பிரதமர்களின் சந்திப்புக்குப் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த ஆனந்த் சர்மா,

அணுசக்தி துறையில் ஆஸ்திரேலியா இந்தியாவுடன் இணைந்து செயற்பட விருப்பம் தெரிவித்தது. முதல் கட்டமாக ஆஸ்திரேலியா, இந்தியாவுக்கு 16 ஆயிரம் மெகாவாற் மின் உறபத்தித் திட்டத்துக்கு யுரேனியம் வழங்க முடிவு எடுத்துள்ளது-என்றார். (வ)

96 வயதில் தந்தையாகி தனது சாதனையை முறியடித்த தாத்தா



ஹரியானா மாநிலத்தில் 96 வயதான முதியவர் தந்தையாகி தனது சாதனையை மீண்டும் முறியடித்துள்ளார்.

ராம்ஜித் ராகவ் என்ற பெயரை உடைய இவர், இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தனது 94 ஆவது வயதிலும் குழந்தை ஒன்றுக்குத் தந்தையாகினார்.

இந்தநிலையில் 96 ஆவது வயதில் குழந்தை ஒன்றிற்கு தந்தையாகியதன் மூலம் அவர் தனது சாதனையை மீண்டும் முறியடித்துள்ளார்.

தொடர்ந்து இரண்டு தடவை வயது முதிர்ந்த காலத்தில் தந்தையான சாதனையை தம் வசப்படுத்தியிருந்தார் ராம்ஜித் ராகவ்.

நபியை அவதூறாகப் பேசிய இந்து முன்னணியினர் கைது

சென்னை, ஒக்.18

இஸ்லாமியர்களையும், நபிகள் நாயகத்தையும் பொதுக்கூட்டத்தில் அவதூறாகப் பேசியதாக வந்த முறைப்பாட்டை அடுத்து இந்து முன்னணிப் பிரமுகர்கள் இருவரைப் பொலிஸார் கைது செய்தனர்.

சென்னையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இந்து முன்னணி சார்பில் வீதி முனைப் பிரசாரப் பொதுக் கூட்டம் நடத்தப்பட்டது. அந்தப் பொதுக்கூட்டத்தில் நபிகள் நாயகத்தையும், இஸ்லாமிய மக்களையும்தரக்குறைவாகப் பேசியதாக, முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து குறிப்பிட்ட இந்து முன்னணி பிரமுகர்களைக் கைது செய்யக்கோரி கடந்த திங்கட்கிழமை காலை முதல் இரவு [illegible] பொலிஸ் நிலையம் முன்பு அனைத்து இஸ்லாமிய மக்களின் கூட்டமைப்பு சார்பில் முற்றுகைப் போராட்டம் நடத்தப்பட்டது.

இதையடுத்து அவர்களை சமாதானப்படுத்திய பொலிஸார் தரக்குறைவாகப் பேசிய 2 இந்து முன்னணி பிரமுகர்கள் மீது வழக்குப்பதிவு செய்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 4 மணி முதல் புளியந்தோப்பு காவல் நிலையத்தின் முன்புஅனைத்து இஸ்லாமிய அமைப்புகள் சார்பில் மீண் டும் முற்றுகைப் போராட்டம் நடத்தப்பட்டது. இதனால் பதற்றம் உருவானது. பொலிஸார் அதிகமாகக் குவிக்கப்பட்டனர்.

இதையடுத்து வழக்குப் பதிவு செய்யப்பட்ட இந்து முன்னணிப் பிரமுகர்கள் முருகேசன், சுந்தர்ராமன் ஆகியோர் [illegible] தரப்பட்ட பொலிஸ் தரப்பில் போராட்டம் நடத்தியவர்களிடம் தெரிவிக்கப்பட்டது. (வ)

புலிகள் சரணாலயத்தில் விதிக்கப்பட்டிருந்த சுற்றுலாவுக்கான இடைக்காலத் தடை நீக்கம்

உச்சநீதிமன்றம் அறிவிப்பு

புலிகள் சரணாலயத்தில் கடந்த மூன்று மாத காலமாக சுற்றுலாவுக்காக விதிக்கப்பட்டிருந்த இடைக்காலத் தடையை உச்ச நீதிமன்றம் நீக்கியுள்ளது.

மேற்படி தடை குறித்த வழக்கு விசாரணை நேற்று முன்தினம் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் முன்பாக விசாரணைக்கு வந்தது.

இதன்போது சுற்றுலா தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் நெறி முறைகளைப் பின்பற்றியே புலிகள் சரணாலயத்தில் அமைய வேண்டும் என்று சில நிபந்தனைகளுடன் தடையை விலக்கிக் கொண் டது.

புலிகள் சரணாலயத்தில் வணிக ரீதியில் அனுமதிக்கப்படும் சுற்றுலாவால் புலிகளின் பாதுகாப்பு கேள்விக்குறியாகிறது என்று குற்றம் சாட்டி இவ்வாறான சுற்றுலாவுக்குத் தடைவிதிக்கக் கோரி வன ஆர்வலர் ஒருவர் மனு தாக்கல் செய்திருந்தார்.

இதனையடுத்து உச்ச நீதிமன்றம் மத்திய அரசு தாக்கல் செய்திருந்த, சுற்றுலா வழிகாட்டு நெறி முறைகளின் அடிப்படையில், கடந்த ஜூலை மாதம் புலிகள் சரணாலயத்தில் சுற்றுலாவுக்கு இடைக்காலத் தடை விதித்திருந்து.

இதனை யடுத்து மத்திய அரசு தடையை விலக்கக் கோரி மறு ஆய்வு மனுவைச் சமர்ப்பித்திருந்தது. நாடு முழுவதும் உள்ள 41 புலிகள் காப்பகங்களுக்கு, புதிய வழிகாட்டு முறைகளை அறிக்கை மூலம் வெளியிட்டது.

இதனையடுத்து புலிகள் சரணாலயத்தில் சுற்றுலாவுக்கான தடையை நீக்குவதாக உச்ச நீதிமன்றம் அறிவித்தது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொத்து விவரத்தைச் சமர்ப்பிக்காமையால் பாக். எம்.பி.க்கள் 154 பேர் பணிநீக்கம்

பாகிஸ்தானில் தமது சொத்துக் கணக்கைச் சமர்ப்பிக்காத நாடாளுமன்ற உறுப்பினர்கள் 154 பேரை தற்காலிக இடை நீக்கம் செய்ய, அந்தநாட்டு தேர்தல் ஆணையம் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதில் பாகிஸ்தான் உள் துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக், முன்னாள் பிரதமர் யூசுப் ரஸீல் கிலானியின் இரண்டு மகன்களும் அடங்குவர்.

இவர்கள் தங்களது சொத்து மற்றும் கடன்கள் குறித்த விவரங்களை ஆண்டு தோறும் தேர்தல் ஆணை யத்திடம் சமர்ப்பிக்க வேண் டும். ஆனால் குறிப்பிட்ட காலத்துக்குள் சொத்து விவரங்களைத் தாக்கல் செய்யாததால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதாகத் தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தற்காலிக இடைநீக்கம் செய்யப்பட்ட 154 பேரில் நாடாளுமன்ற மேல் சபை, கீழ் சபை, செனட் மற்றும் பஞ்சாப், கைபர்-பக்துன்குவா, சிந்து மற்றும் பலுசிஸ் தான் ஆகிய மாகாணங்களைச் சேர்ந்த உறுப்பினர்களும் அடங்குவர்.

இதுகுறித்து தேர்தல் ஆணையம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:-

தேர்தல் ஆணையம் விதித்த காலக்கெடுவுக்குள் 154 மக்கள் பிரதிநிதிகள் தங்களது பெயரிலும், மனைவி மற்றும் குழந்தை கள் பெயரிலும் உள்ள சொத்து மற்றும் கடன் பற்றிய விவரங்களை தாக்கல் செய்யவில்லை.

இதனால் அவர்கள் தற்காலிக இடைநீக்கம் செய்யப் பட்டுள்ளனர். மேற் கண்ட விவரங்களைத் தாக்கல் செய்யும் வரை அவர்கள் மக்கள் பிரதிநிதிகளாகச் செயற்படுவதில் இருந்து தடை விதிக்கப்படுகிறது- என்றுள்ளது. (வ)

பிரிட்டனுக்கான இந்திய உயரதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள டொக்டர் ஜெய்மினி பகவதி, அதற்கான உறுதிக் கடிதத்தை இரண்டாம் எலிசபெத்திடம் வழங்கினார்.

2 ஆவது அணுகுண்டுச் சோதனை நடத்தத் தயாராகிறது சீனா

சீனா 48 ஆண்டுகளுக்குப் பின்னர் தனது இரண்டாவது அணு குண்டுச் சோதனையை நடத்தவுள்ளது.

தனது முதலாவது அணு குண்டுச் சோதனையை 1964 ஆம் ஆண்டு 16 ஆம் திகதி, ஜிங்ஜியான் உய்கூர் மாகாணத்தின் மாலான் பகுதியில் வெற்றிகரமாக நடத்தியது.

அதன்பின்னர் 1996 ஆம் ஆண்டு அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத் தின்படி அணு சோதனை நடத்துவதை நிறுத்தி வைத்தது.

இந்தநிலையில் சீனா தனது இரண்டாவது அணு சோதனையை மீண்டும் அதே இடத்தில் நடத்தவுள்ளது.

தற்போது சீனாவில் அணு குண்டு சோதனை நடத்தப் பட்ட அந்த இடம் சுற்றுலாத் தளமாக உள்ளது. அணு சோதனைக்காக சீன அரசு 944 மில்லியன் டொலர்கள் முதலீடு செய்துள்ளது.

மீண்டும் ஒரு அணு குண்டுச் சோதனையை நடத்த சீன விஞ்ஞானிகள் இரவு பகலாக முயற்சி செய்து அதற்கான பணிகளில் தீவிரமாகக் களமிறங்கியுள்ளனர். (வ)

நவீனரக குண்டு மூலம் ஒசாமாவை கொல்ல அமெ. திட்டமிட்டிருந்ததாம்

வொஷிங்டன், ஒக்.18

நவீன ரக குண்டு மூலம் அல்குவைதா தீவிர வாதத் தலைவர் ஒசாமா பின் லேடனை கொலை செய்ய அமெரிக்கா திட்டமிட்டிருந்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ஒசாமா பின்லேடனை அமெரிக்க அதிரடிப் படையினர் கடந்தாண்டு சுட்டுக் கொன்றனர். இந்தக் கொலைக்கு முன்பாக நடைபெற்ற இரகசிய ஆலோசனைகள், அமெரிக்கா உருவாக்கிய யுக்திகள் குறித்து அவ்வப்போது புதிய தகவல்கள் வந்து கொண்டு தான் இருக்கின்றன.

இந்தநிலையில் நவீன ரக குண்டு தயாரித்து ஒசாமாவைக் கொலை செய்யத் திட்டமிட்டது குறித்து மார்க் போவ்டன் என்பவர் தனது தி பினிஷ் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் தனது நூலில் குறிப்பிட்டுள்ளதாவது:-

ஒசாமாவைக் கொலை செய்வதற்கு முன்பாக பல்வேறு நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டன.

அதில் நவீனரக குண்டு மூலம் கொலை செய்வது குறித்து ஆலோசனை தெரிவிக்கப்பட்டது. குறித்த குண்டு நவீன ரக சிறிய ஏவுகணையைப் போன்று செயற்படும்.

இதனை உளவு விமானத்தின் மூலம் ஏவினால், குறிப்பிட்ட நபரை மட்டுமே தாக்கும். அருகில் இருக்கும் ஏனைய நபர்களுக்கோ, பொருளுக்கோ சேதம் ஏற்படாது.

எனவே ஒசாமா தனியாக வரும்போது அவரை இலக்கு வைத்து தாக்கி விடலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

ஆனால், இந்த ஏவுகணை குறி தவறி ஏனைய நபரைத் தாக்கினால் என்ன செய்வது? ஒசாமா கொல்லப்பட்டு விட்டார் என்பதை எவ்வாறு உறுதி செய்வது? போன்ற கேள்விகள் எழுந்தன.

இதனையடுத்து குறித்த திட்டம் கைவிடப்பட்டு, அதிரடிப் படையை அனுப்பிக் கொலை செய்வதே இறுதியானது என்பது முடிவு செய்யப்பட்டது-என்றுள்ளது.(வ)

ஹொலிவூட் நடிகர் அர்னால்டு காலமானார் வலைத்தளங்களின் வதந்தியால் பரபரப்பு

பிரபல ஹொலிவுட் நடிகர் அர்னால்டு ஸ்வாஸ்னிகர், உயிரிழந்ததாக வதந்திகள் சமூக வலைத்தளங்களில் வேகமாக வெளியாகி வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுவிற்ஸர்லாந்தில் பனிச் சறுக்கு விளையாட்டில் ஈடுபட்டிருந்த போது விபத்தில் சிக்கி உயிரிழந்ததாக வதந்தி பரவியுள்ளது.

சறுக்கு விளையாட்டில் ஈடுபட்டிருந்தபோது, கட்டுபாட்டை இழந்து மரத் தில் மோதி அர்னால்டு உயிரிழந்ததாகவும் கூறப்படுகிறது. டுவிட்டர் போன்ற சமூக வலைத்தளங்களிலேயே இந்தச் செய்திகள் வெளியாகியுள்ளன.

அர்னால்டு பிரபல நடிகர் மட்டுமல்லாது அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தின் ஆளுநராகவும் 2003 - 2011 வரை பதவி வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

அமெரிக்காவின் சிட்டி வங்கிக் குழுமத் தலைவர் பதவி விலகல்

அமெரிக்காவின் மிகப் பெரிய வங்கியான சிட்டி குழுமத்தின் தலைமைச் செயல் அதிகாரி பொறுப்பில் இருந்து விக்ரம் பண்டிட் (வயது 55) விலகியுள்ளார்.

இந்தியரான அவர் மகாராஷ்டிரா மாநிலம், நாகபுரியில் பிறந்தவர். 2007 ஆம் ஆண்டு டிசெம்பர் முதல் குறித்த பதவியில் இருந்து வந்தார். மிகப் பெரிய பொருளாதார நெருக்கடியில் இருந்து வங்கியை மீட்டு வந்தார்.

இந்தநிலையில் கடந்த திங்கட்கிழமை வெளியான சிட்டி குழுமத்தின் காலாண்டு நிதி நிலை அறிக்கையில் நிகர இலாபம் 88 சதவீதமாகச் சரிவடைந்தது.

இதையடுத்து அடுத்த நாளிலேயே விக்ரம் பதவி விலகியுள்ளார். வங்கியின் இயக்குநர் குழுவில் இருந்து அவர் வெளி யேறிவிட்டார். இதையடுத்து புதிய தலைமைச் செயல் அதிகாரியாக மிச்செல் கார்பட் தெரிவு செய்யப்பட்டார்.

அமெ.பிரதிநிதிகளின் பாதுகாப்பு நாம் பொறுப் பேற்கின்றோம்

ஹிலாரி கிளின்டன் உறுதியளித்தார்



சர்வதேச ரீதியில் உள்ள அமெரிக்காவின் பிரதிநிதிகளது பாதுகாப்பை அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஹிலாரி கிளின்டன் உறுதிப் படுத்தியுள்ளார்.

லிபியாவில் உள்ள அமெரிக்காவின் தூதரகம் கடந்த மாதம் தாக்கப்பட்டமை தொடர்பில் கருத்து வெளியிடும்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க பிரதிநிதிகளின் பாதுகாப்பு விடயங்களை நாம் பொறுப்பேற்றுக் கொள்கின்றோம்.

லிபியத் தூதரகம் தாக்கப்பட்ட விடயம், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் தேர்தல் பிரசாரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அமைந்திருப்பதாக விமர்சனங்கள் முன் வைக்கப்பட் டுள்ளன.

இந்த நிலையிலேயே ஹிலாரி கிளின்டன் இதனைத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாதுகாப்பு அதிகாரிகளின் பல்வேறு தீர்மானங்கள் தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதிக்கோ அல்லது துணை ஜனாதிபதிக்கோ அறிவிக்கப்படுவதில்லை. இந்த விடயங்களுக்கு நாமே பொறுப்பாக இருக்கின்றோம்.

இந்தநிலையில் லிபியாவில் உள்ள தூதரகம் தாக்கப்பட்டமை தொடர்பிலும் அமெரிக்க ஜனாதிபதி நிர்வாகத் துக்கு உடனடியாக தெளிவேற்படுத்தப் பட்டிருக்கவில்லை- என்றார். (வ)

சர்ச்சைக்குரிய தீவுகளை நோக்கி பயணிக்கும் சீன கப்பல்கள்

ஜப்பானில் பரபரப்பு

சர்ச்சைக்குரிய சென்காகு தீவுகளை நோக்கி சீன போர்க் கப்பல்கள் முன்னேறி வருவதையடுத்து ஜப்பானில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

கிழக்கு சீன கடல் பகுதியில் அமைந்துள்ள தீவுகள் தங்களுக்கே சொந்தம் என்று சீனா மற்றும் ஜப்பான் நாடுகள் கூறி வருகின்றன.

இந்தநிலையில், சென்காகு தீவுகளை விலைக்கு வாங்கி விட்டதாக ஜப்பான் திடீரென அறிவித்தது. ஜப்பானின் இந்த அறிவிப்புக்கு சீனாவில் கடும் எதிர்ப்பு ஏற்பட்டது.

இதைத்தொடர்ந்து இரு நாட்டு போர்க்கப்பல்களும் சென்காகு தீவுகள் அருகே பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளன.



இந்தநிலையில் சீனாவின் 7 போர்க்கப்பல்கள் சென்காகு தீவுகளை நோக்கி முன்னேறி வருவதால் ஜப்பானில் திடீர் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

மேற்படி கப்பல்கள் அனைத்தும் பசுபிக் கடலில் போர்ப்பயிற்சியை முடித்[illegible] சீனா திரும்பி வந்து கொண்டிருக்கின்றன.

எனினும் தற்போதைய சூழ்நிலையில், இந்தக் கப்பல்கள் ஜப்பானை கவலை கொள்ளச் செய்துள்ளது. இதையடுத்து சென்காகு தீவுப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

ஜப்பானின் ஒகினவா மாகாணத்திலிருந்து 49 கி.மீ தொலைவில் தற்போது குறித்த கப்பல்கள் உள்ளன. போர்க்கப்பல்கள், ஏவுகணை அழிக்கும் கப்பல் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்களை மீட்கும் கப்பல்கள் ஆகியவை இதில் அடங்குகின்றன.

தற்போது சீன கப்பல்கள் சென்று கொண்டிருக்கும் பாதை பசுபிக் கடலில் இருந்து சீனாவுக்கு செல்லும் வழக்க[illegible] தற்போதைய சூழலில் ஒருவிதபதட்டத்தையே சீன கப்பல்கள் ஏற்படுத்தியுள்ளன.(வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியகல்வுக் கட்டுப்பாடுகளை விரைவில் நீக்குகிறது கியூபா

கியூபா பிரஜைகள் நாட்டை விட்டு வெளியே செல்ல வேண்டுமானால் அரச அதிகாரிகளிடம் இருந்து அனுமதிப் பத்திரம் பெற வேண்டும் என்று இதுவரை செயற்பாட்டில் உள்ள குடிய கல்வுக் கட்டுப்பாடுகளை நீக்கவுள்ளதாக அந்த நாட்டின் அரசு அறிவித்துள்ளது.

'வெளியேற்ற உரிமம்' என்றும் 'வெள்ளை அட்டை' என்றும் அழைக்கப்பட்டு வந்த குறித்த அனுமதிப் பத்திர முறையை ஒழிப்போம் என்று கியூபா ஜனாதிபதி ரவுல் காஸ்ட்ரோ கடந்த வருடம் வாக்குறுதி வழங்கிய தன் பின்னர் மேற்படி சீர் திருத்தம் மக்களால் பரவலாக பெரிதும் வரவேற்கப்பட்டும் இருந்தது.

கடந்த வருடம் இந்த சீர்திருத்தத்துக்கு வாக்குறுதி வழங்கப்பட்டது என்றாலும், மீண்டும் மீண்டும் முடிவு ஒத்திப்போடப்பட்டு, சீர்திருத்தம் தாமதப்பட்டு வந்திருந்தது. வெளியேற்ற உரிமம் பெற வேண்டும் என்ற நடைமுறை அடுத்த வருடம் ஜனவரி 14 ஆம் திகதி அடியோடு நீக்கப் படுகின்றது. வெளி நாட்டிலிருந்து ஒருவர் அழைப்பதாக கடிதம் காண்பித்துத் தான் வெளியேற முடியும் என்றிருந்து வரும் நிபந்தனையும் ரத்துச் செய்யப்படுகின்றது என்று நாட்டின் குடியகல்வு சட்டங்களில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

உரிமம், அழைப்புக் கடிதம் போன்றவை பெற வேண்டும் என்றிருந்த நடைமுறைக்கான செலவு அதிகரித்திருப்பதாகவும், தாமதங்களை ஏற்படுத்துவதாகவும், வெளிப்படைத்தன்மை அற்றதாகவும் இருந்து வந்தது. கியூபாவின் மக்கள் இனிமேல் நாட்டை விட்டு வெளியில் செல்ல அவர்களுக்குத் தேவையானது எல்லாமே செல்லுபடியாகக் கூடிய புதுப்பிக்கப்பட்ட கடவுச்சீட்டும், செல்லும் நாட்டுக்கான நுழைவு அனுமதியும் மட்டும்தான் என்று கியூபாவின் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. (வ)

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பே வாக்களித்தார் மிச்செல் ஒபாமா

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் முன்கூட்டியே வாக்குப் பதிவு செய்யும் நடைமுறையின்கீழ் ஒபாமாவின் மனைவி மிச்செல் ஒபாமா வாக்களித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்குப்பதிவு அடுத்தமாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது. ஆனால் அமெரிக்காவில் வாக்குப்பதிவு தினத்துக்கு முன்பே வாக்குகளைப் பதிவு செய்ய முடியும். இந்தநடைமுறையின் படி, ஒபாமாவின் மனைவி மிச்செல், ஒபாமாவுக்கு வாக்களித்தார்.

மிச்செல்லைத் தொடர்ந்து ஒபாமாவும் எதிர்வரும் 25 ஆம் திகதி, இல்லினாய்ஸ் மாகாணத்தில் உள்ள வாக்குச்சாவடியில் வாக்களிக்கப் போவதாக தன் டுவிட்டர் தளத்தில் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு அவர் வாக்களிக்கும் நிலையில் தேர்தல் தினத்தில் வாக்களிக்காத முதல் ஜனாதிபதி வேட்பாளராக ஒபாமா இருப்பார் என்பது குறிப்பிடத்தக்கது.

மிச்செல் வாக்களித்ததை பிரதானப்படுத்திச் செய்தி வெளியிட்டுள்ள அமெரிக்க ஊடகங்கள், முன்கூட்டியே வாக்களித்தவர்களிடம் எடுத்த கருத்துக்கணிப்பில் ஒபாமா முன்னிலையில் இருப்பதாகத் தெரிவித்துள்ளன.

இதேவேளை ஒபாமாவின் முன்னி லையை விரைவிலேயே பொய்யாக்குவோம் என்று மிட் ரோம்னியின் ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர். (வ)

ரோமானியர்களுக்கு பிரான்சில் வேலை வாய்ப்புகள் அதிகரிப்பு

பிரான்சுக்குச் செல்லும் ரோமா இன மக்களுக்கு அதிகளவில் வேலை வாய்ப்புகளை வழங்க பிரான்ஸ் அரசு முடிவு செய்துள்ளது.

ரோமா இனத்தைச் சேர்ந்த மக்கள் தொழில் தேடி பிரான்ஸுக்குச் செல்கின்றனர். அவர்கள் வாழ்வதற்கான அடிப்படைத் தேவைகளைச் செய்து வந்த அரசு, தற்போது புதிய வேலைவாய்ப்புகளையும் உருவாக்கி வருகின்றது.

இதுவரையிலும் 150 வேலைவாய்ப்புகளை அளித்து வந்த அரசு, தற்போது அந்த எண்ணிக்கையை 291ஆக அதிகரித்துள்ளது. பல்கேரியா, ரூமேனியா நாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணையாததால் அங்கிருந்து ஏனைய நாடுகளுக்குச் செல்வோருக்கு வழங்கப்படும் வேலை வாய்ப்பில் சில கட்டுப் பாடுகள் உண்டு. இருப்பினும் பிரான்ஸ் அரசு தமது நாட்டு மக்களுக்கு கார் பழுது நீக்குதல், தோட்ட வேலை, சமையல் வேலை என பல வகையான வேலைகளை வழங்க முன் வந்துள்ளது.

இதேவேளை வேலைவாய்ப்புகளை வழங்குவதன்மூலமாக ரோமா இனத்த வரை பிரெஞ்சு சமூகத்துக்குள் ஒன்றிணைக்க விரும்புகிறோம் என்று பிரான்ஸ் உள்துறை அமைச்சர் மேனுவல் வால்ஸ் தெரிவித்தார். (வ)

இஸ்ரேல் நாடாளுமன்றம் கலைப்பு; அடுத்தவருடம் ஜனவரியில் தேர்தல்

இஸ்ரேல் நாடாளுமன்றம் கடந்த திங்கட்கிழமை இரவு கலைக்கப்பட்டது. இதற்கான தேர்தல் அடுத்த வருடம் ஜனவரி 22 ஆம் திகதி நடை பெறவுள்ளது.

முன்னதாக நடைபெற்ற வாக்கெடுப்பில் 120 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் 100 உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தைக் கலைக்க ஆதரவு தெரிவித்தனர். இதையடுத்து, நாடாளுமன்றத்துக்கு 2013 ஆம் ஆண்டு ஜனவரி 22 ஆம் திகதி தேர்தல் நடத்தப்படும் என்று தேர்தல் அலுவலக அதிகாரிகள் அறிவித்தனர்.

இஸ்ரேலில் சிக்கன நடவடிக்கைகளுக்கு ஆளும் கூட்டணியில் உள்ள கட்சிகள் ஒத்துழைப்பு வழங்காத காரணத்தால், நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகின் பதவிக்காலம் முடிவடைய இன்னும் ஒரு வருடம் உள்ளது. இந்நிலையில் சிக்கன நடவடிக்கையைப் பின்பற்றும் வகையில், வரவு செலவு அறிக்கையைத் தயாரிக்க ஆளும் கூட்டணியில் உள்ள கட்சிகள் ஒத்துழைக்காத காரணத்தால் பிரதமர் விரை வில் தேர்தலை நடத்தப் போவதாகக் கூறியிருந்தார்.

இதன்படி 120 பேர் கொண்ட நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. இதை யடுத்து அடுத்த ஆண்டு ஜனவரி 22 ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னதாக, அடுத்த வருடம் ஒக்டோபர் தேர்தல் நடை பெறுவதாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் இந்தத் தேர்தலில் பிரதமர் தலைமையிலான லிகுத் கட்சி வெற்றி பெற அதிகளவு வாய்ப்பு இருப்பதாக கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன. (வ)

கம்போடியாவில் ஒருவாரம் துக்க தினம்

அந்தநாட்டு முன்னாள் மன்னர் காலமானதற்கு

கம்போடியாவின் முன்னாள் மன்னர் காலமானதைத் தொடர்ந்து அங்கு ஒருவாரம் துக்க தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. காலமான கம்போடியாவின் முன்னாள் மன்னரும் முக்கிய பிரமுகருமான நொரொடொம் ஸிஹனூக்கின் பூதவுடல் கம்போடியாவுக்குக் கொண்டு செல்வ தற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாரடைப்பால் பாதிக்கப் பட்ட நிலையில் சீன தலை நகர் பீஜிங்கிலுள்ள வைத் தியசாலையொன்றில் சிகிச்சை பெற்று வந்த இவர் தனது 89 ஆவது வயதில் கடந்த திங்கட்கிழமை காலமானார்.

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட
டாக்டர்கள் சிபார்சு செய்வது
100% சுத்தமான
ரோயல் குளுக்கோஸ்
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
ரோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
Packed by:
Royal Industries, colombo -13
Hot line: 077 727 7670

Royal Wellcome
ROYAL
Pure Glucose

(அ/3726) (2-6-7)
ஆயுர்வேதிய உத்தியோகத்தர்கள்:
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2567
சத்திரச் சந்திக்கு அருகில்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
18.08.1952
மறைவு
30.10.2011

அமரர் பொன்னர் றாதா

(கிளை முகாமையாளரும், முன்னாள் தொழிற்சங்கத் தலைவரும் - சங்கானை ப.நோ.கூ.ச.)

அப்பா....
ஆண்டு ஒன்று ஆறாவாரித்தபடி.....
கலைந்து போனது - ஆனால்
மீண்டு எழுந்தாலும் - உம்
நினைவுகள் மாறாது....
உம் துணை தேடி நீர் சென்றீர்....
எம் கண்களை கரையவிட்டு....
ஆதரவற்றோராய் எம் ஆற்றாமை
தொடர்கிறது.....
பந்தங்களை விட்டு நீர்...
பாதியில் சென்றாலும் - உம்
நினைவோடு மட்டும் வாழும்
சொந்தங்கள் நாமானோம்....
சாவிலும் உம் நினைவுகளுடன்....

நிற்சாமம், சங்கானை.
குடும்பத்தினர்.
(24147)(2.6)

NMC New Medicare Clinic

கண்ணீர் அஞ்சலி



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட எமது வைத்தியசாலை உரிமையாளர்
தம்பிராசா குகநேசனின் பாசமிகு தந்தையுமாகிய

செல்லையா தம்பிராசா

அவர்கள் 16.10.2012 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தமையை அறிந்து ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது வைத்தியசாலை சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள்,
நியூ மெடிக் கெயர் வைத்தியசாலை,
கச்சாய் றோட், சாவகச்சேரி.

(21566)(2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரையும் கவர்வதற்கு அற்புத வழிகள்

(12)

சிறுவயதில் தான் பழகிய ஒரு பெண்ணைக் கூட, அவள் வளர்ந்து விட்ட பிறகு பார்த்தால், இளைஞர்கள் பேசவே வெட்கப்படுகிறார்கள்.

"சௌக்கியமா?" என்று கேட்கலாம். புன்சிரிப்பு செய்து அவளைப் புரிந்து கொண்டதைத் தெளிவுபடுத்தலாம். பள்ளி நினைவுகளைப் பற்றிப் பேசலாம்.

ஆண்கள் தாம் முதலில் பேசவேண்டும் என்பதில்லை. பெண்களும் வேகமாக முன்னேறி வரும் காலம் இது. பெண்களும் முதலில் பேசலாம். அதனால் தவறில்லை.

ஓர் அறிஞர் கூறுகிறார். ஒரு பெண்ணிடம் ஓர் ஆண் பேச வெட்கப்படுவது ஏன்? அவள் என்ன நினைப்பாளோ, மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என்ற பயமும் வெட்கமும்தான். வெட்கத்தை விட்டொழியுங்கள். ஒரு பெண்ணைக் கண்டால், ஆண்மகனிடம் எப்படி மனத்தில் எந்தவித களங்கமும் இல்லாமல் பேசுவீர்களோ, அப்படியே பேசுங்கள்.

ஆண்களும் சரி, பெண்களும் சரி, சரிசமமாகப் பழகும் போது கெட்ட எண்ணங்களுக்கே இடமிருக்காது.

ஒருவன் தன் தங்கையிடமோ, தாயிடமோ பழகும் போது எப்படிக் களங்கமில்லாமல் பழகுகிறானோ, அப்படியே மற்றப் பெண்களுடனும் பழக வேண்டும்.

இப்படிப் பழகுகிறவர்கள் தான் மற்றவர்களைக் கவர்ந்திழுக்க முடியும். இப்படிப்பட்டவர்களைத் தான் மற்றவர்கள் மிக விரும்புவார்கள்.

நீங்கள் மற்றவர்களிடம் எப்படிப் பேச விரும்புகிறீர்களோ, எதைப் பற்றிப்பேச ஆசைப்படுகிறீர்களோ, அதே போல் தான் மற்றவர்களும் உங்களிடம் பேச விரும்புகிறார்கள் என்று எண்ண வேண்டும். அப்போதுதான் கலகலப்பாக நாம் மற்றவர்களுடன் மனம் விட்டு பழக முடியும்.

புதிதாக ஒருவரைச் சந்திக்கிறீர்களா? அவருடைய பிரச்சினைகள் என்ன? அவருடைய ஆசைகள் என்ன? எதிர்காலத் திட்டங்கள் என்ன? என்று கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள் அதேபோல-

உங்களுடைய பிரச்சினைகள் என்ன, உங்கள் ஆசைகள் என்ன? உங்களுடைய எதிர்காலத் திட்டங்கள் என்ன என்பதை அவரிடம் சொல்லுங்கள்.

நீங்கள் மனம் விட்டுப் பேசுவது யாராக இருந்தாலும் சரி, ஓர் ஆணாக இருக்கலாம். அல்லது ஒரு பெண்ணாக இருக்கலாம். பேசும்போது தெளிவாகப் பேச வேண்டும். அரைகுறையாகப் பேசக் கூடாது.

உங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டதும் நீங்கள் நண்பர்களாகி விடுவீர்கள். ஒரு பெண் உங்களிடம் மனம் விட்டுப் பழகினால் உடனே அதைக் காதல் என்று நினைத்து ஏமாந்து விடவேண்டாம். நட்புக்கு முதலிடம் கொடுங்கள். காதல் என்பதெல்லாம் எடுத்த எடுப்பில் ஏற்படுவதில்லை. பல நாள்கள் பழகிய பின், இரு மனங்களும் ஒன்றுபட்டபின் ஏற்படுவதே காதல். எடுத்த எடுப்பிலேயே காதல் என்று நினைப்பது ஒரு வகை மயக்கம். இந்த மயக்கம் விரைவில் தெளிந்து விடும் தன்மையுடையது. ஆகவே ஏமாந்து விடாதீர்கள். காதலுக்கோ, காம உணர்ச்சிகளுக்கோ இடமளிப்பவர்கள் விரைவில் நண்பர்களைவிட பகைவர்களையே சம்பாதித்துக் கொள்வார்கள்.

நாம் முக்கியமானவர்கள் என்று மற்றவர்கள் நினைக்க வேண்டும்

மனிதனுக்கு வாழ்க்கையில் மிகவும் முக்கியமான தேவைகள் எத்தனையோ இருக்கின்றன. அவைகளில் சில-

ஆரோக்கியமான வாழ்வு, சத்துள்ள உணவு வகைகள், இன்றியமையாத அமைதியான தூக்கம், பணம் (பணம் பத்தும் செய்யும்.) எதிர்காலம் வளமாக வாழ வேண்டும் என்ற எண்ணம்,வாழ்க்கையில் முழுமை, பிள்ளைகள் நன்றாகப் படித்து வளர வேண்டும் என்ற எண்ணம், எல்லாவற்றுக்கும் மேலாக-

நான் முக்கியமானவன் என்று மற்றவர்கள் எண்ண வேண்டும் என்ற அசைக்க முடியாத கருத்து.

வாழ்க்கையில் தேவையான மற்றவைகளை சுலபமாக ஒரு மனிதன் அடைந்துவிட முடியும். ஆனால் அவன் மனதில் புதைந்து கிடக்கும் அடிப்படை ஆசை, ''நான் முக்கியமானவன் என்று மற்றவர்கள் கருத வேண்டும், எனக்கு முக்கியத்துவமும் மரியாதையும் மற்றவர்கள் தர வேண்டும்'' என்ற ஆசையை மட்டும் அவ்வளவு எளிதில் அடைந்துவிட முடியாது.

'நான் முக்கியமானவன்' என்று மற்றவர்கள் கருத வேண்டுமானால், வாழ்க்கையில் ஏதாவது ஒரு சாதனை புரிய வேண்டும். தியாகம் செய்தாக வேண்டும். மற்றவர்களை நாம் கவரும்படி ஏதாவது ஒரு மாபெரும் செயல் செய்தாக வேண்டும்.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவர் மனத்திலும், இப்படி ஓர் ஆசை புதைந்து கிடக்கிறது. ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் இந்த ஆசையைத் தட்டி எழுப்பிச் செயற்படுத்த விரும்புகிறோம். மனிதன் இப்படித் தான் முக்கியமானவன் என்று மற்றவர்கள் கருதும்படி ஏதாவது செய்வதால்தான் இன்று நாம் நவநாகரிக உலகில் வாழ முடிகிறது.

-தமிழ்வாணன்-

(தொடரும்)

தொழில்நுட்ப வசதிகள் அதிகரித்தாலும் தபால் சேவை முன்னிலை வகிக்கிறது

வடமாகாண பிரதி தபால் மா அதிபர் தெரிவிப்பு

இந்த வருடம் 'புதிய உலகுக்கான புதிய வியூகம்' எனும் தொனிப்பொருளில் அஞ்சல் தினம் கொண்டாடப்படுகிறது.

யாழ்ப்பாணம், ஒக்.18

தொழில்நுட்ப வசதிகள் அதிகரித்துச் சென்றாலும், தபால் சேவை முன்னிலை வகிக்கிறது. நகர்ப்புற வாசிகள் தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தினாலும் கிராமப்புற மக்கள் அதிகளவு அஞ்சல் துறையையே நம்பியுள்ளனர். உலகம் முழுவதும் அதிகளவான மக்கள் தபால் மூலம் தான் தமது தொடர்புகளை ஏற்படுத்தி வருகின்றனர் என்று வடமாகாண பிரதி தபால் மா அதிபர் என்.ரட்ணசிங்கம் தெரிவித்தார்.

138 ஆவது சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு யாழ். பிரதான தபால் திணைக்களத்தில் அஞ்சல் தின நிகழ்வு இடம்பெற்றது.

அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ரட்ணசிங்கம் இவ்வாறு தெரிவித்தார்:-

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைய அஞ்சல் தினமானது 138 ஆவது ஆண்டாக கொண்டாடப்படுகிறது. உலகம் முழுவதும் 193 நாடுகள் அங்கம் வகித்து இந்த அஞ்சல் தினத்தை கொண்டாடி வருகின்றன.

இந்த வருடம் 'புதிய உலகுக்கான புதிய வியூகம்' எனும் தொனிப் பொருளில் அஞ்சல் தினம் கொண்டாடப்படுகிறது.

வாடிக்கையாளர்களது சேவையை மேலும் விஸ்தரிப்பதற்கும், மெருகூட்டுவதற்கும், வாடிக்கையாளர்கள் திருப்தியடையும் வேலைத் திட்டங்களை நாம் தற்போது உருவாக்கி வருகின்றோம்.

நவீன மயமாக்கக் கூடிய வகையில் எமது சேவையை உலக அஞ்சல் தினத்தில் ஆரம்பித்துள்ளோம்.

மேலும் உலக அஞ்சல் தினத்தில் அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட போட்டியில் வடபிராந்தியத்தில் மட்டும் 23 பரிசில்கள் கிடைத்துள்ளன என்றார்.

இந்தநிகழ்வில்தேசியக்கொடியை வடமாகாண பிரதி தபால் மா அதிபர் என்.ரட்ணசிங்கமும், அஞ்சல் கொடியை யாழ்.மாவட்ட பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் க.ஜெபரட்ணமும் ஏற்றிவைத்தனர்.

மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பித்த இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் வாழ்த்துச் செய்தி, அஞ்சல் திணைக்கள அமைச்சர், செயலாளர், அஞ்சல்மா அதிபர் டி.எல்.பி.ஆர்.அபேயரட்ண ஆகியோரின் வாழ்த்து செய்திகளும் வாசிக்கப்பட்டன.

தொடர்ந்து அஞ்சல் உத்தியோகத்தர்கள் அனைவரும் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டனர்.

பிரதான தபால் அதிபர் எ.தர்மராஜா, பிரதி பிரதம தபால் அதிபர் லோகஞானம், கணக்காளர் திருமதி சு.கலைச்செல்வன் மற்றும் அஞ்சல் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (எ-13)

யாழ். வண்ணை நாவலர் பாடசாலையின் தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் சிறுவர் மற்றும் பெண்கள் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த மற்றும் அதிபர், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (எ-14)

மேலதிக கற்றல் செயற்பாடுகளில் மாணவர் பங்கு பெற வேண்டும்

நாவலர் பாடசாலை ஆசிரியர் தெரிவிப்பு

மேலதிகமாக கற்பிக்கப்படும் கற்றல் செயற்பாடுகளில் மாணவர்கள் தம்மை ஆர்வத்துடன் ஈடுபடுத்த வேண்டும். இதன் மூலமே பரீட்சைகளில் சிறந்த பெறுபேற்றைப் பெற முடியும் என்று வண்ணை நாவலர் பாடசாலையின் ஆசிரியர் சி.சிவானந்த ராசா தெரிவித்தார்.

யாழ்.வண்ணை நாவலர் பாடசாலையில் இந்த வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு, அதிபர் சு.சிவபாதசுந்தரம் தலைமையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கும் போதே சிவானந்த ராசா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

பாடசாலைகளில் பாடவேளை தவிர்ந்த மேலதிக நேரத்தில் மாணவர்களின் அறிவுத்திறனை வலுப்படுத்தவே மேலதிகமான வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. ஆனால் மாணவர்கள் இவற்றில் தம்மை ஈடுபடுத்துவது கிடையாது. இதனால் பரீட்சையை சரியாக எழுத முடியாமல், பெறுபேறுகளை அண்மித்ததாக புள்ளிகளைப்பெற்று பரீட்சையில் சித்தியடைய முடியாமல் தவறிவிடுகிறார்கள்.

ஆசிரியர்கள் தமது கடமை நேரம் தவிர்ந்து, மேலதிகமாக ஒரு நேரத்தை ஒதுக்கி பல பயிற்சிகளை உள்ளடக்கி கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறார்கள். இதில் மாணவர்கள் பங்குபற்ற பெற்றோர் வழிகாட்டலாக இருக்க வேண்டும். பரீட்சைக் காலம் முடிந்தவுடன் மாணவர்களுக்கு ஓய்வு காலம் உள்ளது என்பதை உணர்த்த வேண்டும்.

இந்த நிகழ்வில் இந்த வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 154 புள்ளிகளைப் பெற்ற கு.ஜிந்தனை சிறுவர் மற்றும் பெண்கள் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த பொன்னாடை போர்த்தி கௌரவித்ததுடன், பரீட்சைக்குத் தோற்றிய 14 பேருக்கும் பரிசில்களையும் வழங்கினார். மேலும் யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையின் தரம் 4 'எப்' பிரிவு மாணவர்களால் உண்டியலில் சேகரிக்கப்பட்ட ஒரு தொகுதி பணமும் மாணவன் ஜிந்தனுக்கு கல்வி உதவித் தொகையாக வழங்கப்பட்டது. (எ-14)

பட்டப்படிப்புக்கு இந்தியா பயணம்

இந்திய அரசின் ராஜீவ் காந்தி புலமைப் பரிசில் திட்டத்தின் பொறியியல் துறையில் பட்டப் படிப்பை மேற்கொள்ள கரணவாய் கிழக்கைச் சேர்ந்த நவீந்திரன் நிலோசன் இந்தியா சென்றுள்ளார்.

இவர் ஆரம்பக் கல்வியை நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலையிலும், கா.பொ.த. உயர்தரக் கல்வியை ஹாட்லிக் கல்லூரியிலும் மேற்கொண்டு உயர்புள்ளிகளைப் பெற்றவர் என்பது குறிப்பிடத் தக்கது. (எ-253)

இடமாற்றம்

அளவெட்டி, ஒக்.18

அளவெட்டி பிரதேச வைத்தியசாலைக்கு புதிய வைத்திய அதிகாரி நியமனம் பெற்றுள்ளார்.

வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலையில் பணியாற்றிய திருமதி கே.செல்வராசா கடந்த முதலாம் திகதி தொடக்கம் இடமாற்றம் பெற்று கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

இங்கு கடமையாற்றிய வைத்திய அதிகாரி எஸ். சேத்திரபாலன் வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலைக்கு இடமாற்றம் பெற்று கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். (எ-36)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
161, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
அறிவியாகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புளுதியாசோ வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' – மாலு சந்தி, அல்வாய் : 021226 3206, 'நெல்லியடி மாடேர்ன்ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – அம்பன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

அதிகாரப் பகிர்வுக்குத் தயாரில்லை

13ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாமல் செய்ய வேண்டும் என்று பாதுகாப்புச் செயலாளரும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ கூறியிருப்பதற்கு, அரசுக்குள்ளேயே எதிர்ப்புக் கிளம்பி உள்ளது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதான கட்சியான சுதந்திரக் கட்சியிடம் இருந்து அல்லாமல் அதன் பங்காளிக் கட்சிகளிடம் இருந்தே, அதிலும் குறிப்பாக இடதுசாரிக் கட்சிகளிடம் இருந்தே அந்தக் கண்டனக் கருத்துக்கள் கிளம்பி உள்ளன.

கோத்தபாயவின் கருத்தை ''பயங்கரமானது'' என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரான அமைச்சர் வாசுதேவ நாணயக்கார வர்ணித்துள்ளார். ''13ஆவது திருத்தம் தொடர்பில் தனி நபர் ஒருவரால் தீர்மானங்களை அறிவிக்கவோ யோசனைகளை முன்வைக்கவோ முடியாது. அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கூடி ஆராய வேண்டிய விடயம் இது'' என்று அமைச்சர் திஸ்ஸ விதாரண நிராகரித்துள்ளார். இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட அனைத்துக் கட்சிக் குழுவின் தலைவராகப் பணியாற்றி, தீர்வுத் திட்டம் ஒன்றை உருவாக்கிக் கையளித்தவர் அவர்.

கொழும்பில் இருந்து வெளிவரும் 'சண்டே ஐலன்ட்' பத்திரிகைக்கே கோத்தபாய ராஜபக்ஷ 13ஆவது திருத்தத்தை நீக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவித்திருந்தார். இந்தத் திருத்தமும் விடுதலைப் புலிகளுக்கும் ரணில் தலைமையிலான அரசுக்கும் இடையில், நோர்வே நாட்டின் தலைநகர் ஒஸ்லோ வில் இணக்கம் காணப்பட்ட தீர்வுப் பொதிக்கும் இடையில் வித்தியாசங்கள் எவையும் இல்லை என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

அவரது இந்தக் கருத்து, இலங்கை அரசுக்குள் இருந்து கொண்டே அதிகாரப் பரவலாக்கத்தை ஆதரிக்கும் தரப்புக்களுக்கு கடும் சங்கடத்தையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது. அதன் வெளிப் பாடே அமைச்சர்கள் வாசுதேவ மற்றும் திஸ்ஸ விதாரணவின் கருத்துக்கள்.

13ஆவது திருத்தத்தை நீக்கிவிடுவது என்பது நாட்டின் குறைந்தபட்ச அதிகாரப் பரவலாக்கத்தையும் இல்லாது செய்து, சிறுபான்மையினரின் உரிமைகளை மேலும் மோசமாகப் பாதிக்கும் நடவடிக்கையாக அமைந்துவிடும் என்று இவர்கள் கருதுகின்றார்கள்.

அவர்களின் இந்தக் கருத்தில் நியாயம் இருக்கவே செய்கிறது. இந்தியா மற்றும் மேற்கு நாடுகளிடம் ''13 பிளஸ் தீர்வு'' என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறிக்கொண்டிருக்க, அவரது தம்பியோ 13ஆவது திருத்தமே வேண்டாம் என்று கூறுவது கவர்ந்து அவதானிக்கப் வேண்டியதுதான்.

மஹிந்த ராஜபக்ஷ அல்ல, கோத்தபாய ராஜபக்ஷவே இந்த நாட்டை இயக்கிக் கொண்டிருக்கிறார் என்ற கருத்து இலங்கையில் பரவலாக நம்பப்படும் நிலையில் 13ஆவது திருத்தம் பற்றிய அவரது கருத்து உன்னிப்பான கவனத்துக்குரியதே.

13ஆவது திருத்தத்தை ஆரம்பம் முதலே தமிழர்கள் அடியோடு நிராகரித்து விட்டனர். அப்படி இருக்கையில் அது பற்றிய கோத்தபாயவின் கருத்துக் குறித்து அலட்டிக் கொள்வதற்கான தேவை என்ன என்ற கேள்வி நியாயமானதே. இருப்பினும், ''ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழர்களுக்கு கௌரவமான தீர்வு'' என்று கூறிக் கொண்டிருக்கும் கூட்டமைப்புக்கு ''ஒன்றுமே தரமுடியாது'' என்று சொல்லப்பட்ட பதிலாக அதனைக் கொள்ளமுடியும் என்பதால் அந்தக் கருத்து மிக முக்கியத்துவமானதே.

தனி நாடாகிறது ஸ்கொட்லாந்து

பிரிட்டனின் ஆட்சிக்கு உட்பட்ட ஒரு மாகாணமாக ஸ்கொட்லாந்து இருந்து வருகிறது. பிரிட்டனில் கூட்டணி கட்சி ஆட்சி நடக்கிறது. பிரதமராக டேவிட் கமரூன் உள்ளார். இந்த நிலையில் ஸ்கொட்லாந்து தேசிய கட்சியின் அமைச்சர் அலெக்ஸ் சல்மான்ட் ஸ்கொட்லாந்து தனி நாடாகுவதற்கான வாக்கெடுப்பை 2014 இல் நடத்த கமரூனுடன் ஒப்பந்தமிட்டுள்ளார்.

பிரிட்டனுடன் கடந்த மூன்று நூற்றாண்டுகளாக இணைந்திருந்த ஸ்கொட்லாந்தை தனிநாடாகப் பிரிப்பது தொடர்பான வரலாற்று முக்கியத்து வம் மிக்க கருத்து வாக்கெடுப்பு ஒன்றை மேற்கொள்வதற்கு உடன்பாடு ஒன்று திங்களன்று கைச்சாத்தாகியுள்ளது.

ஸ்கொட்லாந்து நாட்டின் தலைவர் அலெக்ஸ் சல்மன்ட் தலைமையில் ஸ்கொட்லாந்து சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் ஸ்கொட்லாந்து இறையாண்மையைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென ஐரோப்பிய சங்கத்துக்குள் தாம் தனித்து இயங்கும் அமைப்புக்கள் எனக் கருதும் கற்றலோனியா மற்றும் பிளண்டேஸ் போன்ற பிரிவினை கோரி நிற்கும் ஐரோப்பிய சமூகங்களும் தமது ஆதரவுகளை வழங்கி வருகின்றன.

இந்த நிலையில், ஸ்கொட்லாந்து மக்கள் தாம் பிரிட்டனில் இருந்து பிரிந்து சென்று தனிநாடு அமைப்பதா இல்லையா என்பதை வெளிப்படுத்தும் கருத்து வாக்கெடுப்பை 2014 இல் நடத்துவது தொடர்பான உடன்பாடு ஒன்று பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனுடன் ஸ்கொட்லாந்து தலைநகரான எடின்பேர்க்கில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

''இது ஸ்கொட்லாந்து மக்களைப் பொறுத்த அளவில் வரலாற்று முக்கியத்துவம் மிக்க ஒரு நாளாகும்'' என்று



சல்மன்ட் தெரிவித்துள்ளார். இதற்கான பரப்புரையில் தாம் வெற்றிபெறுவோம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

வடகடலில் பிரிட்டனின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள மீண்டும் பெற்றுக் கொள்ளமுடியாத 20 பில்லியன் எண்ணெய் பீப்பாய்கள் உள்ளன. இவை பிரிட்டனுக்கா அல்லது ஸ்கொட்லாந்து பிரிந்து சென்றால் ஸ்கொட்லாந்துக்குச் சொந்தமா என்பது தற்போது மிகப் பெரிய பிரச்சினையாகக் காணப்படுகிறது.

அத்துடன் ஸ்கொட்லாந்தில் தற்போது காணப்படும் பிரிட்டனின் அணுசக்தி நீர்மூழ்கித் தொகுதியின் எதிர்காலம் தொடர்பாக பிரிட்டன் ஆழ்ந்த கவலை அடைந்துள்ளது. ஸ்கொட்லாந்து சுதந்திரமடைந்ததன் பின்னர் அங்கு அணு ஆயுதங்களுக்கு இடமில்லை என சல்மன்ட் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நீர் மூழ்கித் தொகுதியை வேறிடம் நகர்த்துவதானது செலவு மிக்கது என்பதுடன் நேர விரயமான விடயமுமாகும்.

ஸ்கொட்லாந்து மக்கள் கருத்து வாக்கெடுப்பில் வழங்கும் வாக்குகளைப் பொறுத்தே இதற்கு சுதந்திரம் வழங்க முடியும் என கமரூன் தெரிவித்துள்ளார்.

பெரும்பாலான ஸ்கொட்லாந்து மக்கள் தாம் பிரிந்து செல்வதற்கு ஆதரவு அளிக்கவில்லை. அதாவது 34 சதவீதமான மக்களே ஸ்கொட்லாந்து சுதந்திரம் பெறுவதை ஆதரிக்கின்றனர். ஸ்கொட்லாந்து சுதந்திரமடைந்தால் இதன் பொருளாதாரம் பாதிக்கப்படும் என்று 55 சதவீதமான மக்கள் கருதுவதை இங்கு நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புத் தெரிவிக்கிறது.

16 வயது இளையோர் தொடக்கம் ஏனையோர் வாக்களிக்க முடியும் என்பதும் இந்த உடன்பாட்டில் தீர்மானிக்கப் பட்டுள்ளது. இந்த நிலையில் இளம் வாக்காளர்கள் தாம் சுதந்திர தேசம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கே அதிகம் விரும்புவர் என சல்மன்ட் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

''நான் போரில் பிரிட்டன் இராணுவத்தின் கீழ் பணியாற்றியுள்ளேன். இதனால் என்னைப் பொறுத் தளவில் பிரிட்டன் குடி மகனாக வாழ்வதையே நான் அதிகம் விரும்புகிறேன்'' என 24 வயதான முறே பூல் தெரிவித்துள்ளார். ''ஆனால் எனது நண்பர்களில் சிலர் பிரிட்டனை விரும்பவில்லை. அவர்கள் ஸ்கொட்லாந்து குடி மக்களாக வாழவே விரும்புகிறார் கள்'' எனவும் முறே பூல் மேலும் குறிப் பிட்டுள்ளார்.

''ஸ்கொட்லாந்து தனியாகப் பிரிந்து செல்வது முட்டாள் தனமானதாகும்'' என்று இளம் பணியாளரான ஜெமி சுமித் தெரிவித்துள்ளார்.

ஸ்கொட்லாந்து பிரிட்டனுன் இணைந்திருந்தால், பிரிட்டன் மேலும் பலமான நாடாகத் திகழும் என்று கருத்து வாக்கெடுப்பை நடத்துவதற்கான உடன்பாட்டில் கைச்சாத்திட்ட பின்னர் கமரூன் செய்தியாளர்களிடம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

''ஸ்கொட்லாந்தைப் பொறுத்தளவில் பிரிட்டனுடன் இணைந்திருத்தல் சிறப்பானதாகும் என்று நான் நம்புகிறேன். ஆனால் ஸ்கொட்லாந்துடன் பிரிட்டன் இணைந்திருப்பது பிரிட்டனுக்கு நலன் பயக்கும் என்பது முக்கியமானதாகும். இந்தக் குடும்பத்தை ஒன்றாக இணைப்பதற்காகவே நான் வாதாடுவேன்'' என கமரூன் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்கொட்லாந்து ஏற்கனவே தனக்கான தேசியக் கொடி, சட்ட முறைமை, விளையாட்டுக் குழுக்கள் மற்றும் ஏனைய தேசிய அடையாளம் என்பவற்றை உருவாக்கிவிட்டது.

றொபேற்றின் தலைமையில் ''பனக் போர்ண்'' என்ற களத்தில் போர் புரிந்த ஸ்கொட்லாந்து வீரர்கள் ஆங்கிலேய ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து வெற்றி கொண்ட 700 ஆவது நிறைவு ஆண்டான 2014லேயே கருத்து வாக்கெடுப்பும் நடத்தப்படவுள்ளது.

தற்போது கருத்து வாக்கெடுப்பை மேற்கொள்வதற்கான உடன்பாடு கைச்சாத்திடப்பட்டுள்ள நிலையில், இதில் யார் வாக்களிப்பது, இது நடத்தப்படவுள்ள திகதி, சட்ட ஒழுங்குகள் போன்றவற்றை வரையவுள்ளது.

இந்தக் கருத்து வாக்கெடுப்பானது 'ஆம் அல்லது இல்லை' என்ற இரு நேரடி விடைகளைப் பெறக் கூடியதாக மட்டுமே ஏற்படுத்தப்படும் என பிரிட்டனால் முன்வைக்கப்பட்ட முக்கிய நிபந்தனையை சல்மன்ட் ஏற்றுக் கொண்டுள்ளார்.

வடகடலில் காணப்படும் எண்ணெய் வளம் மூலமான பெருமளவு வருவாயை ஸ்கொட்லாந்து ஈட்டிக்கொள்ள முடியும் என்பதால் இது எதிர்காலத்தில் வளம் மிக்க நாடாகக் காணப்படும் என்று முன்னாள் எண்ணெய்வள பொருளியல் ஆய்வாளர் ஒருவர் நம்புகின்றார்.

தற்போது பிரிட்டன் அரசால் ஸ்கொட்லாந்தவர்களுக்கு வழங்கப்படும் 48 பில்லியன் டொலர்கள் மானியமானது நிறுத்தப்பட்டால் ஸ்கொட்லாந்து மக்கள் நிதி நெருக்கடியை எதிர்நோக்குவர் என பிரிட்டன் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எது எவ்வாறாக இருந்தாலும் ஸ்கொட்லாந்து சுதந்திரம் பெற்று தனிநாடாக வேண்டுமா இல்லையா என்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானத்தை ஸ்காட்லாந்து மக்களே எதிர்வரும் 2014 ஆம் ஆண்டில் எடுக்கப் போகிறார்கள்.

இந்தக் கருத்தறியும் வாக்கெடுப்பின் மூலம் கிடைக்கும் மக்கள் ஆணை எப்படி இருந்தாலும் ஸ்கொட்லாந்து மக்களின் நலன்சார்ந்த விடயங்களில் இரண்டு அரசுகளும் ஆக்க பூர்வமாக இணைந்து செயலாற்ற வேண்டும் என்று இணக்கம் காணப்பட்டுள்ளது.

(நன்றி: புதினப்பலகை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிசன மதிப்பீட்டு இறுதி அறிக்கை தாமதம் அடைவது ஏன்?

தமிழில்: வீயெஸ்ரி
மூலம் - ராவய

இலங்கையில் இறுதிப் போர் இடம்பெற்ற வேளையில் பெரும் மனிதப் படுகொலைகள் இடம்பெற்றதாக மேற்குலக நாடுகள் குற்றம் சாட்டி வருகின்றன. போர் காரணமாக தத்தம் சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்தோரை மீண்டும் சொந்த இடங்களில் குடியமர வைக்கும் விடயத்தில் சர்வதேச சமூகம் அக்கறை செலுத்தி வருகிறது. கடந்த மூன்று தசாப்த காலமாக போர் காரணமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து வெளியேறிய, வேறு மாகாணங்களில் குடியேறிய தமிழ், முஸ்லிம் மக்கள் குறிப்பிடத்தக்க பெரும் தொகையினராவர். அதே போன்று குறிப்பிட்ட பிரதேசங்களில் இருந்து வெளியேறி வெளி நாடுகளுக்கு பலர் சென்றனர். அவ்விதம் வடக்கு,கிழக்கு பகுதிகளிலிருந்து நாட்டின் ஏனைய பகுதிகளில் குடியேறியோர், மற்றும் காணாமல் போனோருக்கான பொறுப்பு அரசின் தலை மீதே சுமத்தப்படுகிறது. நாட்டில் வாழும் பொதுமக்களது மொத்தத் தொகை குறித்த சரியான விவரத்தைக் கணக்கிட்டுத் தெரிந்து கொள்ள நீண்ட காலத்தின் பின்னரே வாய்ப்புக்கிட்டியுள்ளது. அதற்கான குடிசன மற்றும் குடியிருப்புக்கள் குறித்து மதிப்பீடு அதற்குரிய வருடங்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதனால் தற்போது அது பற்றி பூரணமான விவரங்களை உறுதிப்படுத்திக் கொள்ள இயலாதுள்ளது. இது இலங்கை மீது குற்றம் சுமத்தி வரும் மேற்குலக நாடுகளுக்கு வாய்ப்பாக அமைந்துள்ளது.

ஒரு நாட்டுக்கு அந்த நாட்டின் பல துறைகள் சார் புள்ளி விவரங்கள் பெரும் உதவியாக அமைபவை. சரியான புள்ளி விவரத் தகவல்கள் இல்லாது அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல இயலாது. ஆகக் குறைந்தது, நாட்டில் வாழும் மொத்தப் பொதுமக்களது எண்ணிக்கை எவ்வளவு என்பது குறித்து சரியான புள்ளிவிவரங்களின்றி, எதிர்வரும் ஆண்டுகளில் மேற்கொள்ளவுள்ள செயற்பாடுகள் குறித்துத் திட்டமிட இயலாது. இத்தகைய நிலையில் இந்த நாட்டின் மிக முக்கிய பெறுமதி மிக்க குடிசன மற்றும் வீடுகள் தொடர்பான மதிப்பீட்டின் முடிவுகளை வெளியிடாது காலம் கடத்துவது சிக்கலுக்கு வழிவகுக்குமொன்றாகும்.

ஒரு தசாப்தத்தின் ஆரம்ப காலகட்டத்திலேயே குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்படுவது வழக்கமானதொன்று. 1871 ஆம் ஆண்டில் முதல்முதலாக இந்த நாட்டில் குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டதுடன் அதனுடன் சேர்த்து ஏழு தசாப்த ஆரம்பத்தில் தொடர்ச்சியாக குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.

1941 ஆம் ஆண்டில் எட்டாவது தடவையாக மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த குடிசன மதிப்பீடு தவிர்க்க இயலாத காரணத்தால் 1946 மார்ச் மாதத்திலும், அடுத்து முறையே 1953 மார்ச், மற்றும் 1963 ஜூலை ஆகிய காலங்களில் குடிசன மற்றும் வீடுகள் தொகை மதிப்பீடுகள் நடத்தப்பட்டன. அதையடுத்து 1971 ஆம் ஆண்டில் நடத்தப்பட வேண்டியிருந்த குடிசன மதிப்பீடு அவ்வாண்டில்நடத்தப்படவில்லை.

அதற்குப் பின்னர் 1981 ஆம் ஆண்டிலேயே குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டபோதிலும், போர்ச் சூழல் நிலவிய வடக்கு, கிழக்கு மாகாணங்களின் சில மாவட்டங்களில் அக்கணிப்பீட்டை மேற்கொள்ள முடியவில்லை. அதே போன்று 2001 ஆம் ஆண்டிலும் நாட்டின் 18 மாவட்டங்களிலேயே குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

உலகில் பல தரப்பினர், இந்த நாட்டின் இடம்பெற்ற இறுதிப்போரில் உயிரிழந்தவர்களது எண்ணிக்கை குறித்து பல்வேறு புள்ளிவிவரங்களை வெளியிட்டு வருகின்றனர். அவை உறுதிப்படுத்தப்பட்ட சரியான தகவல்கள் அல்ல. குறிப்பிட்ட சில அமைப்புக்களாலும், தனி மனிதர்களாலும், அடிப்படை எதுவுமற்ற விதத்தில் வெளிப்படுத்தப்படும் தகவல்களே அவை. வட பகுதியில் மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு சர்வதேச சமூகம் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்து வரும் இன்றைய நிலையில், தேர்தல்கள் ஆணையாளர் கூட வட பகுதியில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் தொடர்பாக கேள்வி எழுப்பியுள்ளனர். அபிவிருத்தி தொடர்பாக புதிய முடிவுகள் மற்றும் கொள்கைகள் மேற்கொள்ளப்பட வுள்ள இன்றைய நிலையில், நாட்டில் வாழும் பொது மக்களது சரியான எண்ணிக்கை குறித்து புள்ளி விவரங்கள் மிக அவசியமானவையே. தேவையான அறிக்கையையோ, ஆய்வையோ தவறின்றித் தயாரிக்க முறையான மதிப்பீடு அத்தியாவசியமாகும். குடிசன மதிப்பீட்டுச் செயற்பாட்டில் அத்தகைய பலாபலனை ஈட்டிக் கொள்ள இயலாதுள்ளமை பிரச்சினைக்கு உரியதொன்று.

தற்போது வெளியிடப்பட்டுள்ள 2012 ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின் புள்ளி விவரங்களின்படி இந்த நாட்டில் வாழும் பொது மக்களது மொத்தத் தொகை 20,277,597 பேராகும், 2001 ஆம் ஆண்டில் நாட்டின் 18 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டின் புள்ளி விவரங்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம், அதற்குச் சமமாக தற்போதைய குடிசன மதிப்பீட்டு புள்ளிவிவரங்களை ஒப்பிட்டு மேற்கொண்ட கணிப்புக்கு அமைய குடிசன அதிகரிப்பு விகிதம் 7.9 வீதமெனப் பிரகடனப்படுத்தியுள்ளது.

நாட்டில் மொத்த சனத்தொகையில் ஆகக் கூடிய 28.8 சத வீதத்தினர் மேல் மாகாணத்தில் வசித்து வருவதாகவும், ஆகக் குறைந்த வீதத்தினராக 5.2 வீதத்தினர் வட மாகாணத்தில் வாழ்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் சகல மாவட்டங்களிலும் ஆகக் குறைந்த தொகையினரான பொதுமக்கள் வாழும் மாவட்டங்களாக முல்லைத்தீவும் (92,228 பேர்) மன்னாரும் (99063 பேர்) குறிப்பிடப்பட்டுள்ளது. அதேவேளை கூடிய குடிசன அதிகரிப்பு வீதம் கொண்ட பிரதேசமாக வறட்சி வலயம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

குடிசன மதிப்பீடு மற்றும் வீடுகளின் மதிப்பீடு தொடர்பான ஆரம்ப அறிக்கையின் பிரதிகள் ஜனாதிபதி மற்றும் அமைச்சரவைக்கு கையளிக்கப்பட்டுள்ளது. அதில் மேற்குறிப்பிட்ட அடிப்படைத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனவே தவிர விரிவான பூரண தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. பூரணமான தகவல்கள் அடங்கிய இறுதி அறிக்கையை வெளியிட இன்னமும் ஒரு வருடகாலம் செல்லக் கூடுமெனத் தெரிய வருகின்றது. 2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த குடிசன மதிப்பீட்டை 2012 ஆம் ஆண்டில் மேற்கொண்டு அதன் விவரங்களை 2013 ஆம் ஆண்டில் வெளியிடுவதன் மூலம் அதன் நம்பகத்தன்மை மற்றும் பயன்பாடு குறித்துச் சிந்திக்க வேண்டியுள்ளது.

குடிசன மதிப்பீடு இந்த ஆண்டில் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டதையடுத்து அது தொடர்பான சகல அச்சிடுதல் பணியும் தனியார் வர்த்தகரொருவரிடம் கையளிக்கப்பட்டது. அதற்காக அவர் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்த அச்சு இயந்திரம் உரிய விதத்தில் இயங்காததால் குடிசன மதிப்பீட்டுப் பணியை பின்தள்ளிப் போட நேர்ந்தது. குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்பட்ட பத்திரங்களை 'ஸ்கான்' செய்து அதில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி விவரங்களை நேரடியாக கணினியில் பதிவு செய்யும் நடைமுறையைக் கடைப்பிடிக்கத் திட்டமிட்ட போதிலும் அது வெற்றியளிக்கவில்லை. அந்தப் பணி குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்ட போதிலும், கணினியில் புள்ளி விவரங்களைப் பதிவு செய்த பின்னர் அவை பகுப்பாய்வு செய்யப்பட்ட பின்னர் உரிய அனுமதி பெற்றே இறுதி அறிக்கை வெளியிடப்படுமெனக் கூறப்படுகிறது. இந்தப் பணிக்காக ஒதுக்கப்பட்ட நிதி தனியார் அச்சக உரிமையாளர்களையே சென்றடைந்துள்ளது.

அரச அச்சகம் அரசின் கீழ் இயங்குகின்றது. அது ஆசியாவிலேயே மிகப் பெரிய அச்சகமாக அடையாளப்படுத்தப்படுகிறது. அதேவேளை அரச அச்சகத்தைப் பயன்படுத்தாமல் குடிசன மதிப்பீடு தொடர்பான பணிகளுக்கான அச்சு வேலைகள் யாவும் தனியார் தரப்பினரிடம் ஒப்படைக்கப்பட்டமை பொதுமக்களது நிதியைத் தவறான விதத்தில் செலவிட்ட குற்றச்சாட்டுக்கு உட்படுத்தியுள்ளது.

குடிசன மதிப்பீடு அரச மற்றும் தனியார் தொழிற்றுறை முயற்சிகளை மேற்கொள்ளும் தரப்பினருக்கு அவை மிக அத்தியாவசியமானவை. வீடுகளில் எத்தனை தொலைக்காட்சிப் பெட்டிகள், வானொலிப் பெட்டிகள் பயன்பாட்டில் உள்ளன போன்ற பல முக்கிய விடயங்கள் கூட குடிசன மதிப்பீட்டுப் பத்திரத்தினூடாகத் திரட்டப்பட்டுள்ளன. காணாமல் போனோர் தொடர்பான விவரங்கள் முதல் வர்த்தகர்களது வர்த்தக முயற்சிகளுக்குப் பிரயோசனமான தகவல்கள் கூட அதன் ஊடாகத் திரட்டப்பட முடிந்தது. இதன் முக்கியத்துவத்தை உணராது குடிசன மதிப்பீட்டு விவரங்கள் அடங்கிய இறுதி அறிக்கையைப் பூரணப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அக்கறை காட்டாதிருப்பது கவலைக்குரியதொன்றே.

மிளகாய் செய்கையில் பீடைகளின் தாக்கம்

செ.துஷ்யந்தி,
விவசாய பீடம்

இன்றைய கால கட்டத்தில் யாழ்ப்பாணத்தின் விவசாயப்பொருளாதாரமானது பல்வேறு பட்ட சவால்களை எதிர்நோக்கியுள்ளது. இவற்றுக்கான காரணமாக சீரற்ற காலநிலை மற்றும் வானிலை மாற்றங்கள் மற்றும் விவசாய நிலங்களில் புதிதாகத் துளிர்விடும் கட்டடங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

எனினும் விவசாயத்தை தமது முதன்மையான தொழிலாகக் கொண்டுள்ள விவசாயிகள் இன்றும் விவசாய உற்பத்தியில் நாட்டம் கொண்டுள்ளனர். இருந்தபோதிலும் பயிர்ச் செய்கையின்போது பூச்சிப் பீடைகளின் தாக்கத்தால் 4 வீதம்- 20 வீதம் வரையிலான விளைச்சலில் பாதிப்பு ஏற்படக் கூடிய வாய்ப்புண்டு. எனவே பீடை முகாமைத்துவமானது இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகின்றது.

2010 ஆம் ஆண்டுத் தரவின்படி ஏறக்குறைய 581 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் மிளகாய்ச் செய்கையானது யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் 2011 ஆம் ஆண்டுத் தரவின்படி பச்சை மிளகாயின் பெறுமதியானது கிலோவுக்கு ரூபா 500 என்ற உச்ச விலையை எட்டியதுடன் ரூபா 152 என்ற சராசரிப் பெறுமதியையும் கொண்டிருந்தது. எனவே மிளகாயில் ஏற்படும் பூச்சிப் பீடைகளின் தாக்கத்தைக் குறைப்பதன் மூலம் விளைச்சலை அதிகப்படுத்தி வருமானத்தை அதிகரிக்கக் கூடியதாக இருக்கும்.

பனிப்பூச்சி, சிற்றுண்ணி, அழுக்கணவன் போன்ற பூச்சிகள் இளம் இலைகளில் சாற்றை உறிஞ்சிக் குடிப்பதாலும் வெண் ஈக்கள் மூலம் பரவும் வைரசுகளினாலும் மிளகாயில் இலைச்சுருளல் நோயானது ஏற்படுகின்றது. இந்த நோயானது பயிரின் நாற்றுப் பருவத்தில் இருந்து எல்லாப் பருவத்திலும் ஏற்படலாம்.

பனிப்பூச்சியானது 1 மி.மீ வரை நீளமான இளம் கபில நிறத்தைக் கொண்ட மெல்லிய பூச்சியாகும். நிறையுடலி பூச்சிகளும் அணங்குகளும் மிளகாய் இலைகளின் மேற் பகுதியிலிருந்து சாற்றை உறிஞ்சிக் குடிப்பதால் இலையானது விளிம்புகளின் வழியே மேற்பக்கமாகச் சுருளும் பாதிக்கப்பட்ட இலை முதலில் மினுங்கும் வெள்ளி நிறமாகி பின்னர் கபில நிறமாக மாறும், பாதிக்கப்பட்ட காய்களில் கபில நிற அடையாளங்களைக் காணலாம். காய்கள் குறண்டு நிறம் மங்கிக் காணப்படும். இந்த நோயானது பெரும்பாலும் சிறுபோகத்தில் ஆடி- ஆவணி மாதங்களில் பரவலாகக் காணப்படும். அம்மாதங்களில் நிலவும் கூடிய வெப்பமும் கடுமையான காற்றும் இதற்கான காரணமாக அமைகின்றன.

சிற்றுண்ணிகள் வெறும் கண்களால் தெளிவாகப் பார்க்க முடியாத நீள்வட்ட வடிவான கபிலநிற பூச்சிகளாகும். இவை பயிரின் இலைகளின் கீழ்ப் பகுதிகளில் இருந்து சாற்றை உறிஞ்சிக் குடிப்பதனால் இலையானது விளிம்பு வழியே கீழ்நோக்கி சுருளடைகின்றது. இலைகளின் கீழ்ப்பக்கம் படிப்படியாகக் கபில நிறமாக மாறும். பாதிப்பு அதிகமாகும் போது இலைகள் தடிப்பாகி சடுதியாக முறியும் நிலைக்கு உட்படும். பாதிக்கப்பட்ட மிளகாய் விகாரமடைந்து கரு நிறமாக மாறும்.

மிளகாயைத் தாக்கும் அழுக்கணவனானது 1-2 மி.மீ வரை பருமனுள்ள கறுப்பு நிறமான பூச்சியாகும். 1.25- 2.5 மி.மீ பருமனான மஞ்சள், பச்சை நிறத்தையொட்டிய இரண்டு இனங்களும் மிளகாய் பயிருக்குச் சேதத்தை ஏற்படுத்தும். இந்தப் பூச்சிகள் கூட்டம் கூட்டமாக இலைகளிலும் தண்டுகளிலும் வசித்து அவற்றின் சாற்றை உறிஞ்சிக் குடிப்பதன் மூலம் இலைகள் கோப்பை வடிவமாக மாறி மஞ்சள் நிறமாக மாறும். பயிர்களின் வளர்ச்சி குறைவதுடன் ஒடுங்கிய காய்கள் உருவாகும்.

வெண் ஈக்கள் 1 மி.மீ வரை நீளமான பூச்சிகள். இவை மிளகாய் சுருளல் வைரசு நோயைப் பரப்பும் காவிகள் ஆகும். இவற்றின் தாக்கத்துக்குள்ளான மிளகாய்ச் செடிகளின் இலைகள் மஞ்சள் நிறத்தையடையும். ஓடம் போன்றஉருவமையும். நரம்புகள்தெளிவாகத் தோற்றமளிக்கும். கணுவிடைகளின் இடைவெளிகள் குறையும். பயிர்கள் குறண்டு படர்ந்து பற்றை போல வளர்ந்து தோற்றமளிக்கும்.

இலைச்சுருளல் நோயானது பின்வருமாறு கட்டுப்படுத்தப்படலாம்.

1.சிறந்த தரமான விதைகளை நடுதல்

2. நாற்று மேடையை முறையாகப் பராமரிப்பதன் மூலம் சிறந்த வீரியமான மிளகாய் நாற்றுக்களை உற்பத்தி செய்தல்

3.பயிர்ச் செய்கையை சரியான பருவத்தில் ஆரம்பித்தல்

4. சிறுபோகத்தில் பங்குனி மாதத் தொடக்கத்தில்நாற்று மேடையை ஆரம்பித்து சித்திரை மாதத்தில் நாற்றுகளைத் தோட்டத்தில் நடவேண்டும்.

5. காற்றுத் தடைப் பயிராக தோட்டத்தைச் சுற்றி சோளம், குரக்கன் போன்ற பயிர்களை நடல்

6.யூரியா பசளையை அதிகளவில் பயிர்களுக்கு இடாது சிபாரிசு செய்யப்பட்ட அளவை மாத்திரம் இடல்.

7.பத்திரச் சலவை இடல்

8. நீரை விசிறுதல்

9. ஒட்டிக்கொள்ளக் கூடிய மஞ்சள் நிறப் பொறிகளை பாவித்தல்

10. தோட்டத்தில் உள்ள மாற்று விருந்து வழங்கிகளை (களைகள்) அழித்தல்

11. சிபாரிசு செய்யப்பட்ட பூச்சி நாசினிகளை விசிறுதல்

உரிய பருவத்தில் உரிய நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் விளைச்சலில் ஏற்படும் இழப்பைத் தடுத்து வருமானத்தை அதிகரிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எது தடை?

ஓர் ஊரில் பழமை வாய்ந்த கோயில் ஒன்று உள்ளது. அந்தக் கோயிலின் உள்ளே செல்வதற்கு பயமாக இருக்கும். எந்த நேரத்திலும் இடிந்து விழுந்துவிடுமோ என்ற பயம் இருப்பதால் யாரும் துணிந்து கோயிலுக்கு உள்ளே சென்று சுவாமி கும்பிடப் போவதில்லை. கோயிலுக்குச் செல்லும் மக்கள் தொகையும் குறைந்து கொண்டே வந்தது.

கோயில் நிர்வாகிகள் எல்லோரும் கூடி அமர்ந்திருந்து இதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்தனர். ஆலயத்தில் எந்தப்பகுதி அதிகமாகச் சேதமடைந்திருந்ததோ அந்தப் பகுதியைப் பழுது பார்த்தார்கள். அந்த இடத்தில் வர்ணத்தைப் பூசி சிறிது அழகுபடுத்திப் பார்த்தனர்.

ஏதோ அந்த ஊரில் கோயில் ஒன்று இருப்பது மக்களுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காக இவ்வாறெல்லாம் செய்தனர்.

எனினும் கோயில் இருக்கும் நிலைமை குறித்து மக்களுக்குத் தெரியும். ஆதலால் மக்கள் வருகை குறைந்து போய்விட்டது. ஒரு கட்டத்தில் யாருமே வருவதில்லை என்ற நிலை ஏற்பட்டு விட்டது.

மறுபடியும் கோயில் நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டம் கோயிலுக்குள்ளே நடைபெறவில்லை. கோயிலுக்கு வெளியேதான் நடைபெற்றது. உள்ளே போக அவர்களுக்கும் துணிச்சல் இல்லை. அந்தக் கோயில் எந்த நேரமும் விழுந்து விடும் போல இருந்தது.

அந்தக் கோயில் வழியாகப் போகின்றவர்கள் கூட விரைவாக அந்த இடத்தைக் கடந்து போக ஆரம்பித்து விடுவர்.

கோயில் நிர்வாகிகள் கூடிய கூட்டத்தில் நான்கு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அந்த நான்கு தீர்மானங்களும் வருமாறு. முதலாவது தீர்மானம்:- இந்தக் கோயிலை இடிப்பது என்ற முடிவை நிர்வாகக் குழு மிகவும் வருத்தத்துடன் ஏற்றுக் கொண்டது.

இந்தத் தீர்மானத்திற்கு பதிலாக இன்னொரு கோயிலை உடனடியாகக் கட்டி முடிக்க வேண்டும் என்பது இரண்டாவது தீர்மானம்.

மூன்றாவது தீர்மானம்:- பழைய கோயிலின் கதவுகள் அதிலிருந்து பிரிந்து எடுக்கும் செங்கல் என்பவற்றையே புதுக்கோயில் கட்டப் பயன்படுத்த வேண்டியது. பழைய கோயில் இருந்த மாதிரியே அதே வடிவத்திலே புதிய கோயிலையும் கட்ட வேண்டியது. பழைய கோயிலின் அத்திபாரத்தை அப்படியே வைத்துக் கொண்டு அதன் மேல் கல்லை அடுக்கி அதன் மேல் புதிய கோயில் எழுப்ப வேண்டியது இதுதான் மூன்றாவது தீர்மானம். இதையும் குழு முழு மனத்தோடு ஏற்றுக் கொண்டது.

இது வரைக்கும் சரி.... ! இப்போது அந்தக் குழு நான்காவது ஒரு முக்கியமான தீர்மானத்தையும் கொண்டு வந்து அதையும் ஏக மனதாக நிறைவேற்றியது.

அந்தத் தீர்மானம் என்னவென்றால்...

புதிய கோயில் கட்டி முடிக்கும் வரைக்கும் பழைய கோயிலை இடிப்பதில்லை என்பதுதான்.

பழைய கோயிலை இடிக்காத வரைக்கும் அதே இடத்தில் புதிதாக எப்படிக் கட்ட முடியும்?

பல விடயங்களில் நாம் நடந்து கொள்ளும் முறையும் இப்படித்தான் உள்ளது. வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்று ஆசைப்படுவோம். அதே நேரத்தில் அந்த முன்னேற்றத்துக்கு எது தடையாக இருக்கின்றதோ அதை விட்டுவிடவும் மனம் வராது!

வெளிநாட்டில் பெரியளவிலான விருந்தொன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. எல்லோரும் மதுக் கிண்ணமும் கையுமாகக் காணப்பட்டனர். ஒருவர் மட்டும் கையில் எதுவுமில்லாமல் மிகவும் நல்ல பிள்ளையாக சாதுவாக ஒரு புறமாக தனியாக அமர்ந்திருந்தார்.

அவரிடம் நெருங்கி 'வாங்க மது சாப்பிடலாம்' என்று விருந்தில் உள்ளவர்கள் கூப்பிட்டனர்.

''என்னை வற்புறுத்தாதீர்கள்.. நான் என் மனதுக்குள்ளே உறுதியான தீர்மானித்து விட்டேன்'' என்றார்.

''என்ன முடிவு எடுத்துள்ளீர்கள்? '' என்று கேட்டனர்.

''ஏற்கனவே முழுமையான போதையில் இருக்கும் போது மறுபடியும் மதுக்கிண்ணத்தைத் தொடுவதில்லை என்று முடிவு செய்துள்ளேன்'' என்றார்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

நெடுந்தீவுக்கே உரித்தான கத்தோலிக்க பாடசாலையாக விளங்கும் அ.த.றோ.க.

லக்ஸ்மன்

நெடுந்தீவு ஆறு, ஏழு, எட்டாம் வட்டாரங்களைச் சேர்ந்த சிறுவர்கள் தமது கல்விக்காக பாடசாலைக்குச் செல்வதில் கஷ்டங்கள் இருப்பதை அவதானித்த இப்பகுதிப் பெற்றோர்கள், சீக்கிரியாம்பள்ளம் பகுதியில் ஒரு பாடசாலையை அமைக்க முடிவு செய்தனர். இது இந்தப்பகுதிச் சிறுவர்களின் கல்விக்கு உறுதுணையாக இருக்கும் என்பதால் கத்தோலிக்க மக்கள் அதிகம் உள்ள பகுதியான இங்கு கத்தோலிக்க பாடசாலையை அமைக்க விரும்பினார்கள். இந்தப் பகுதியில் உள்ள பெற்றோர்களும், ஆசிரியர் செபதேயுவும் எடுத்துக் கொண்ட முயற்சியினால் 1960 ஆம் ஆண்டில் இந்தப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் ஆண்டு ஒன்று முதல் ஆண்டு ஐந்து வரை 35 மாணவர்களுடன் இயங்கிய சீக்கிரியாம் பள்ளம் அ.த.றோ.க. பாடசாலையின் இன்றைய மாணவர் தொகை எண்பத்தி எட்டாகவுள்ளது. தற்போது ஆண்டு ஒன்பது வரை வகுப்புகள் உள்ளன.

இந்தப் பாடசாலையின் அதிபர்களாக இருந்தவர்கள் இப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். எனவே தமது பிள்ளைகள் கல்வியிலீ நிறைவடைந்தவர்களாக எதிர்காலத்தில் விளங்க வேண்டும் என்பதால் தமது பதவிக் காலங்களில் திணைக்களத்தின் ஊடாகப் பெறக் கூடிய தேவைகளை முழுமையாகப் பெறுவதில் கூடுதல் அக்கறை காட்டியிருந்தார்கள். இங்கு சின்ராசா, செபதேயு, திருமதி அந்தோனியாப்பிள்ளை கிறிஸ்தோபர், அன்ரன் மரியதாஸ் ஆகியோர் ஆரம்பகாலம் தொடக்கம் 2007 வரை அதிபர்களாகக் கடமையாற்றியுள்ளனர். 2007 இல் இன்றைய அதிபர் திருமதி செல்வராணி பாக்கியநாதர் அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கல்வியில் படிப்படியான வளர்ச்சி தென்படுகிறது. மாணவர்களின் ஆர்வம் தெரிகின்றது. மாணவர்களின் நிலைகளை அவதானித்து அதற்கமைவாக ஆசிரியர்கள் தமது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வது மாணவர்களுக்கு உந்து சக்தியாக விளங்குகின்றது. பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட ஒருசில வருடங்களுக்குள்ளேயே பரீட்சைகளில் மாணவர்கள் பயனுள்ள பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்டனர். 2006 இன் பின்னர் இது மேலும் உயர்ந்துள்ளதாக அதிபர் தெரிவித்தார்.

புலமைப்பரிசில் பரீட்சையில் பெரும்பாலான பிள்ளைகள் நூறுக்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்று வருகின்றார்கள். கோட்டத்தில் முதல் இடங்களும் இப்பாடசாலைக்குக் கிடைக்கின்றது. இந்தப் பிரதேசங்களில் வசிக்கும் பெற்றோர்கள் தமது கஷ்டத்தின் மத்தியிலும் பிள்ளைகளின் நலன்களில் அக்கறை கொண்டுள்ளதால் பாடசாலைக்குத் தேவையான உதவிகளைச் செய்ய வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளனர்.

> **2006 இற்கு முன்னர் புலமைப்பரிசில் பரீட்சையில் குறைந்த பெறுபேறுகளே காணப்பட்ட போதும் தற்போது நல்ல பெறுபேறுகள் கிடைக்கின்றன. ஆசிரியர்கள் பிள்ளைகளின் சிறந்த பெறுபேறுக்காக முழுமையான முயற்சிகள் மேற்கொண்டு வருகிறார்கள். தற்போது கடமையில் உள்ள ஆசிரியர்களில் சிலர் ஏற்கனவே இங்கு மாணவராக இருந்துள்ளனர்.**

வழமையான கல்விச் செயற்பாட்டுடன் இணைப்பாட விதானச் செயற்பாடுகளும் கணிசமான அளவில் வளர்ச்சி பெற்றுள்ளன. கீழ்பிரிவு, மத்திய பிரிவுகளில் நடனம், நாடகம் போன்ற போட்டிகளில் கோட்டமட்டத்தில் முதன்மை மிக்க-தாகக் காணப்படுகின்றது. தமிழ், ஆங்கில தினப் போட்டிகளிலும் சிறுபிள்ளைகள் தமது திறமையை வெளிப்படுத்தி முன்னணியில் உள்ளனர். வலய மட்டம் வரை போட்டிகளில் கலந்து கொள்கின்றார்கள். வலய, மாவட்ட மட்டப் போட்டிகளிலும் தாங்கள் சிறந்த புள்ளிகளைப் பெற்று தேசிய மட்டத்திலும், நுழைய வேண்டும் என்பது மாணவர்களின் விருப்பமாக உள்ளது. விளையாட்டுப் போட்டிகளிலும் சிறப்பான பார்வை உண்டு. பாடசாலைக் கென சொந்தமாக விளையாட்டு மைதானம் என்றில்லாவிட்டாலும், அதன் முன்பாக உள்ள காணியில் அமைந்துள்ள முன்னாள் கிராம சேவகர் நாகேந்திரர் நினைவாக விளையாட்டுக் கழகத்திற்கு வழங்கப்பட்ட காணியை இப்பாடசாலை மாணவர்கள் பயன்படுத்தக்கூடிய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

2006 இற்கு முன்னர் புலமைப்பரிசில் பரீட்சையில் குறைந்த பெறுபேறுகளே காணப்பட்ட போதும், தற்போது நல்ல பெறுபேறுகள் கிடைக்கின்றன. ஆசிரியர்கள் பிள்ளைகளின் சிறந்த பெறுபேறுக்காக முழுமையான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள். தற்போது கடமையில் உள்ள ஆசிரியர்களில் சிலர் ஏற்கனவே இங்கு மாணவராக இருந்துள்ளனர். அவர்களுடன் ஏனைய ஆசிரியர்களும் ஒன்றுபட்டு மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளைச் சிறப்பாகக் கவனித்து வருகின்றனர். ஆசிரியர்களின் முழுமையான ஒத்துழைப்பு கிடைப்பதால் தான் புலமைப்பரிசில் பரீட்சையில் இம்முறை சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள முடிந்தது என்று கூறும் அதிபர் செல்வராணி பாக்கியநாதர் ஆண்டு ஒன்பது வரை இங்கு பயின்று க.பொ.த. சாதாரண தரத்தில் கல்வி கற்கச் சென்ற பிள்ளைகள், தாம் பயிலும் பாடசாலைகளில் சிறந்த சித்திகளைப் பெற்றிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

கல்வி, இணைப்பாடவிதான செயற்பாடுகளில் தன்னை மேலும் வலுப்படுத்திக் கொண்டு வருவதால், பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் ஆரம்பக் கல்விக்காக இப்பாடசாலையைத் தெரிந்தெடுக்கின்றார்கள். 'வாழ்வு மலரக் கல்'' என்ற மகுடவாசகம் கவனிக்கப்படுகின்றது. பாடசாலையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் வலயக் கல்வி அலுவலகம் தனது ஒத்துழைப்பை வழங்குகின்றது. தவிர பாடசாலையில் தேவை களை நிறைவு செய்வதில் ஏனையோர்களும் உதவுகின்றார்கள். பிரதேச சபை குடிதண்ணீர் வழங்குகின்றது. மின்சார விஸ்தரிப்புக்கு பிரான்சில் உள்ள லென்ரக்கோன், புதிய கட்டடம் அமைப்பதற்கான காணியை க.டானியல் ஆகியோரும் விளையாட்டு மைதானத்திற்கு முன்னாள் கிராம அலுவலர் நா.கணபதிப்பிள்ளையும் உதவியுள்ளதாகவும் அதிபர் குறிப்பிட்டார்.

கனடா ஒன்றியம் ஆங்கில ஆசிரியர்களுக்கான கொடுப்பனவை வழங்குகின்றது . ஆங்கிலம், கணித பாடங்களுக்கான ஆசிரியர் நியமிக்கப்படவில்லை. சமையல் கூடம் உலக உணவு நிறுவனத்தினால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. பெற்றோர்களே சுழற்சி முறையில் உணவு தயாரிக்கின்றனர். கணினி பயிற்சியில் பிள்ளைகள் திறமையாக உள்ளனர். கணினி அறை, போட்டோ பிரதி இயந்திரம் என்பன பாடசாலைத் தேவையாக உள்ளன. 'நிக்கொட்' நிறுவனம் மூன்று வகுப்புக்களைக் கொண்ட புதிய கட்டடத்தையும், யுனிசெப் திருத்த வேலைகளையும், ஜீ.ரி.இசற் மலசலகூட வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளன. கல்வித் திணைக்களம் யுனிசெவ் உதவியுடன் ரூபா 34 லட்சம் செலவில் விஞ்ஞான ஆய்வு கூடம் அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளது. சுற்றுமதில் முழுமையாக்கப்பட வேண்டிய தேவை உள்ளது. தற்போது ஒருபகுதிக்கான மதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. நூலகம் அவசியம் தேவையாக உள்ளது.

பாடசாலைக்கு முன்பாக உள்ள வெட்டுக்குழி இதற்கு ஒரு பெரும் பிரச்சினையாக உள்ளது. தண்ணீர் இன்றி வறண்டு கிடக்கும் காலங்களில் கடும் காற்று வீசும் சமயங்களில் அதிலிருந்து கிளர்ந்தெழும் புழுதி பாடசாலையை வெகுவாகத் தாக்குகின்றது. பிள்ளைகள் வகுப்பறைகளில் இருக்க முடியாத நிலைமை, அலுமாரிகளில் வைத்துப் பூட்டப்பட்டிருக்கும் ஆவணங்கள் பொருள்கள் கூட புழுதி கொட்டிக் கிடக்கக் காணக்கூடியதாக உள்ளன. இதனைத் தவிர்ப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை எதுவோ அது செயற்படுத்தப்பட வேண்டும். பிள்ளைகளின் நோய்த் தாக்கங்களுக்கும் புழுதி காரணமாக அமையும் சாத்தியம் உண்டு.

சிறந்த கல்வி இணைப்பாட விதான செயற்பாடுகளை உரிய முறையில் முன்னெடுத்து இந்தப் பிரதேசத்தின் கல்வி உயர்வதற்கு தமது முழுமையான அர்ப்பணிப்பை வழங்க வேண்டும் என்ற முனைப்புடன் செயற்படும் அதிபர், ஆசிரியர்களால் எதிர்காலத்தில் சீக்கிரியாம் பள்ளம் அ.த.றோ.க. பாடசாலை நெடுந்தீவின் சிறந்த பாடசாலைகளில் ஒன்றாக விளங்கும் என்பதில் பெற்றோர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்னேஸ்வராக் கல்லூரியில் போலியான பிரதி அதிபர்

பொலிஸார் விசாரணை

ஹற்றன்,ஒக்.18

ஹற்றன் கல்வி வலயத்துக்குட்பட்ட கடவலை விக்னேஸ்வராக் கல்லூரியில் கடமையாற்றிய பிரதி அதிபர் ஒருவரும் ஆசிரியர் ஒருவரும் போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்து கடமையில் இணைந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் வலப்பனை மற்றும் நுவரெலியா கல்வி வலயங்களில் இருந்து இடமாற்றம்பெற்று இங்கு வந்து போலி ஆவணங்களை சமர்ப்பித்து கடமையில் இணைந்துள்ளமை தெரிய வந்துள்ளது.

மத்திய மாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் கடிதங்களை இவர்களே தயார் செய்துள்ளமை தெரிய வந்ததையடுத்து, இவர்கள் தொடர்பாக ஹற்றன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டை அடுத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

> அதிபர் ஒருவரும் ஆசிரியர் ஒருவரும் போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்து கடமையில் இணைந்தமை தெரியவந்துள்ளது.

கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா இன்று

திருகோணமலை,ஒக்.18

கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட கிழக்கு மாகாணத் தமிழ் இலக்கிய விழா இன்று வியாழக்கிழமை திருகோணமலை விவேகானந்தாக் கல்லூரியின் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொஹான் விஜயவிக்ரம, கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத், பௌத்தசாசன பிரதி அமைச்சர் எம்.ஜே.டி.ஏ.எம்.குணவர்த்தன ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். (ச-40)

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டக் கிளை ஏற்பாடு செய்த ஆசிரியர்தின விழா அண்மையில் மட்டக்களப்பு வாகரை மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்படுகின்றனர். (5)

பட்டதாரி நியமனத்தில் அரசியல் தலையீடுகள்

மட்டக்களப்பு வந்த பஸிலுக்கு எதிராக கிளர்ந்தெழுந்தனர் பாதிக்கப்பட்டவர்கள்

எருவில்,ஒக்.18

மட்டக்களப்பு மாவட்டத்தில் வழங்கப்பட்ட பட்டதாரிகள் நியமனங்களில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு உள்ளீர்ப்பதற்காக நடத்தப்பட்ட நேர்முகப்பரீட்சையில் தோற்றி தெரிவு செய்யப்பட்டபோதும், இறுதியில் அரசியல் காரணங்களினால் இடைநிறுத்தப்பட்டவர்கள் நிரந்தர நியமனங்களை வழங்கக்கோரி ஆரையம்பதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

ஆரையம்பதி பிரதேச செயலகத்தில் தற்காலிக நியமனங்கள் வழங்கப்பட்ட பட்டதாரிகளே இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மண்முனைப் பாலத்துக்கு நேற்று முன்தினம் அடிக்கல் நட பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ வந்ததையொட்டி, இவர்கள் மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் ஆரையம்பதி பிரதேச செயலகத்துக்கு

முன்பாக இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

எனினும், ஹெலி மூலம் ஒல்லிக்குளம் பகுதியில் வந்திறங்கிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நிகழ்வை முடித்துக்கொண்டு ஹெலியிலேயே கொழும்பு சென்றுள்ளார்.

இதுகுறித்து ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் தெரிவித்ததாவது:-

பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் நிரந்தர நியமனங்களை வழங்குவதற்காக தற்காலிக நியமனங்கள் வழங்கப்பட்ட பட்டதாரிகள் மத்தியில் நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டது. பிரதேச செயலகங்கள் தோறும் 34 நியமனங்களை வழங்குவதற்காக நேர்முகப்பரீட்சைகள் நடத்தப்பட்டு நாம் தெரிவுசெய்யப்பட்டோம். ஆனால், அரசியல்வாதிகள் சிலரினால் நேர்முகப்பரீட்சையில் தோற்றியவர்கள் நிறுத்தப்பட்டு தகுதியற்றவர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் நேற்று முன்தினம் மட்டக்களப்புக்கு வருகைதந்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் கவனத்துக்கு கொண்டு செல்லவிருந்தோம். ஆனால், அது கைகூடவில்லை.

நாங்கள் பட்டப்படிப்புக்களை முடித்து நீண்ட நாள்களாக தொழில் அற்ற நிலையில் இருந்தோம். இப்போது பட்டதாரி நியமனம் கிடைத்துள்ளது. ஆனால் அதுவும் இன்று, ஒரு நிரந்தரமற்ற நிலையில் உள்ளது. -என்று தெரிவித்தனர்.

இதேவேளை, ஆர்ப்பாட்டம் நடைபெற்ற பகுதிக்கு வந்த கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், ஜனாதிபதியின் ஆலோசகருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் கருத்துத் தெரிவிக்கையில், இந்தநியமனங்கள் 'திவிநெகும' திட்டத்தின் கீழ் வருவதன் காரணமாக அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்களே இதற்குப் பதிலளிக்கவேண்டும் என்று கூறினார். (ச-31)

தமிழ் - முஸ்லிம் உறவு ஒருபோதும் பிளவுபடாது

கலை இலக்கிய மன்றத் தலைவர் கூறுகிறார்

திருகோணமலை,ஒக்.18

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சேர்ந்து கிழக்கு மாகாண ஆட்சியை அமைக்க ஒத்துழைப்பு வழங்காவிட்டாலும் தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையிலான உறவு ஒருபோதும் பிளவுபடப் போவதில்லை என்று கிண்ணியா கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் தெரிவித்தார்.

'இலக்கியங்கள் இயம்புவது மனித ஒற்றுமைகளையன்றி வேற்றுமைகளை அல்ல' என்ற தலைப்பில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாணத்தில் காலந்தோறும் தமிழர்களும், முஸ்லிம்களும் ஒன்றாகக் கலந்தே வாழ்ந்துவருகின்றனர். தமிழ், முஸ்லிம் எழுத்தாளர்களின் படைப்புகள் பல இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை வலியுறுத்துவதாகவே அமைந்துள்ளன.

ஒருசில கால கட்டங்களில் ஏற்பட்ட அசாதாரண சம்பவங்கள் பல வருடங்களாக வாழ்ந்துவரும் உறவுகளைப் பிரிக்கப்போவதில்லை.

அத்தகைய இலக்கியங்களை எவரும் படைக்கப் போவதுமில்லை. அண்மையில் நடைபெற்றுமுடிந்த கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஆட்சியை அமைக்கும் சக்தியாக முஸ்லிம் காங்கிரஸ் இருந்தும் அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சேர்ந்து ஆட்சியமைக்க முன்வராதமை கட்சியையும், அதன் கொள்கைகளையும் பொறுத்துள்ளது.

ஆனால், தமிழர்களும், முஸ்லிம்களும் ஒன்றிணைந்து வாழ்ந்தவர்கள் என்ற கொள்கையையும், அதன் உறவையும் எவரும் பிளவுபடுத்த முடியாது - என்றார். (ச-40)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்கள் இயக்கமாக மாறவேண்டும்

இது காலத்தின் தேவை என்கிறார் திருமலை நகராட்சிமன்ற உறுப்பினர்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சட்டரீதியாக அரசியல் அந்தஸ்துள்ள கட்சியாகப் பதிவுசெய்யப்படும் அதேவேளை, கிராமிய, நகர, பிராந்திய மட்டங்களில் ஜனநாயக கட்டமைப்புகளை உருவாக்கவேண்டும். இது காலத்தின் தேவையாகும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை நகராட்சிமன்ற உறுப்பினர் சி.நந்தகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், அரச உத்தியோகத்தர்கள், பெண்கள், இளைஞர்கள் உட்பட பரந்துபட்ட மக்களை இணைத்து மக்கள் இயக்கமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிறுவன மயப்படுத்தப்படவேண்டும். அப்போதுதான் தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக, அரசு மேற்கொள்ளும் ஜனநாயக விரோத நடவடிக்கைக்கு எதிராக ஜனநாயக போராட்டங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் முன்னெடுக்க முடியும்.

1934ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் சீனப் புரட்சித் தலைவர் 'மா ஓ சேதுங்' கியாங்கி நகரிலிருந்து 90 ஆயிரம் பேருடன் கலந்துகொண்ட நீண்ட நடைப்பயணம் 6 ஆயிரம் மைல்கள் நீண்டதாக அமைந்தது. மா ஓவின் நீண்ட நடைப்பயணம் கொம்யூனிஸக் கட்சியை சீன மக்களிடம் நெருக்கமாக எவ்வாறு கொண்டு சென்றதோ அதுபோலவே தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் பணிக்கான நீண்ட பயணத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் அந்தஸ்துள்ள கட்சிப் பதிவு நடவடிக்கை வலுச்சேர்க்கும் என்பது மக்களின் அபிப்பிராயமாகும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-40)

உள்ளூராட்சி திருத்தச் சட்டம் மலையக அரசியலுக்கு பாதிப்பு

மாகாணசபை உறுப்பினர் தெரிவிப்பு

நுவரெலியா,ஒக்.18

உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச்சட்டம் மலையக சமூக அரசியல் நலனுக்கு ஏற்புடையதல்ல. ஆராய்ந்து பார்க்காமல், அரசிற்கு துணை போனது மலையக அரசியல் தலைமைகளின் வரலாற்று துரோகம் என்று மத்திய மாகாண சபை உறுப்பினர் முரளி ரகுநாதன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உள்ளூராட்சி தேர்தல் திருத்தச் சட்டமானது இருக்கின்ற மலையகதமிழர் உறுப்பினர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தியுள்ளது. இந்த விடயத்தில் அரசில் பங்குதாரர்களாக செயற்படும் மலையக தலைமைகள் மௌனம் காத்துள்ளார்கள். இது மன்னிக்க முடியாத ஒரு குற்றமாகத்தான் சமூக ரீதியாக என்னால் பார்க்க முடிகின்றது.

> உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச்சட்டம் மலையக சமூக அரசியல் நலனுக்கு ஏற்புடையதல்ல.

இவ்வாறான செயற்பாடுகள் மலையக மக்களுக்கு ஏற்படும் மிகமோசமான பாதிப்பும், வருந்தத்தக்க செயலும் ஆகும் - என்றார். (ச)

கரையொதுங்கும் மீன்கள்...

மட்டக்களப்பு மாவட்டத்தின் கரத்தான்குடி, கடற்கரை [illegible] மீன்களை மக்கள் எடுத்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது
வித்தியா

இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

மேஷம்: இனிய எண்ணங்களால் மனதில் கூடுதல் உற்சாகம் பெறுவீர்கள். பணிகளில் ஆர்வமும், திறமையும் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரவளர்ச்சி இலக்க எளிதில் பூர்த்தியாகும். ஆதாய பணவரவு கிடைக்கும். உடல் நல ஆரோக்கியம் பலம் பெறும்.

இடபம்: உங்களின் இனிய பேச்சால் சில நன்மை பெறுவீர்கள். எதிரித்தனமாக நடந்த வரும் உங்கள் மீது நல்ல அபிப்பிராயம் கொள் வர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சித்தன்மை அதிகரிக்கும். பணியாளர்கள் நிர்வாகத்திடம் சிறந்த செயலால் நன்மதிப்புப் பெறுவர்.

மிதுனம்: நண்பர், உறவினரின் செயலை விமர்சிக்கக் கூடாது. மன நிம்மதியைப் பாதுகாப்பது நல்லது. தொழில், வியாபார நிலை மந்த கதியில் இருக்கும். சுமாரான அளவில் பணம் கிடைக்கும். நிர்ப்பந்தத்தின் பேரில் அதிக பயன் தராத பொருள் வாங்குவதைத் தவிர்க்கவும்.

கடகம்: எவரையும் எளிதில் நம்புகின்ற மனப்பான்மை கொள்வீர்கள். புதியவரை நண்பராக ஏற்பதில் அதிக கவனம் வேண் டும். தொழில், வியாபாரத்தில் வருகிற குறுக்கீடு சரி செய்வதால், வளர்ச்சி சீராகும். அளவான பணவரவு கிடைக்கும்.

சிங்கம்: உங்களின் இனிய அணுகுமுறை யால், நல்லபலன்களைப் பெறுவீர்கள். உறவினர், நண்பர்களிடம் மதிப்பு, மரியாதை கிடைக்கும். பணவரவு திருப்திகரமாகும். குடும்பத்தேவைகளைப் பெருமளவில் நிறைவேற்று வீர்கள்.

கன்னி: உங்கள் எண்ணம், செயலில் சில மாறுதல் இருக்கும். எதிர்மறையாக பேசுபவர்களிடம் விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் நேரம் தவறாமையை அவசியம் பின்பற்ற வேண்டும். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

நாளை

ஐப்பசி -03 வெள்ளிக்கிழமை 19.10.2012
திதி: சதுர்த்திமு.ப. 09.31வரை
நட்சத்திரம்: கேட்டை பி.இ 02.41 வரை
சுபநேரம்: 06.02- 07.32 வரை
ராகுகாலம்: 10.32- 12.02 வரை

துலாம்: புதிய திட்டங்களைச் செயற் படுத்துவீர்கள். இனிய அணுகுமுறையால் எதிர்பார்த்ததைவிட அதிக நன்மை கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இடையூறு குறைந்த அனுகூலத்தன்மை வளரும். பணப்பரிவர்த்தனையில் நல்ல முன்னேற்றம் உண்டு.

விருச்சிகம்: உங்களுக்கு அறிமுகம் இல் லாத எவருக்கும் ஆலோசனை சொல்ல வேண் டாம். கருத்து பேதம் வளர்ந்து மனக்கவலை வரலாம்; கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். சுமாரான அளவில் பணவரவு இருக்கும்.

தனுசு: உங்கள் நலன் விரும்புபவரைச் சந்திப்பீர்கள். இனிய எண்ணங்களால் மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழில், வியாபாரம் சிறக்க அதிக பொறுப்புடன் நடந்து கொள்வீர்கள். தாராள பணவரவு கிடைக்கும்.

மகரம்: பொது நலப்பணி புரிவதில் ஆர்வம் கொள்வீர்கள். சிரமங்களைச் சமாளித்து புதிய சாதனை புரிவீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சிப்பணி திருப்திகரமாகும். சராசரி பணவரவுடன் நிலுவைப்பணமும் கிடைக்கும்.

கும்பம்: தொடர்பில்லாத பணி ஒன்றில் ஈடுபட நேரலாம். வாக்குறுதி நிறைவேற்றுவதில் தாமதம் இருக்கும். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். அளவான பணவரவு கிடைக்கும். சேமிப்பு பணம் முக்கிய செலவுக்கு பயன்படும்.

மீனம்: செயல்களில் மூலம் புகழ் பெறு வதில் ஆர்வம் கொள்வீர்கள். கடினப்பணி களில் தற்காப்பு முறை பின்பற்றுவது அவ சியம். தொழில், வியாபாரத்தில் உள்ள குளறு படிகளைச் சரி செய்தால், வளர்ச்சி சீராகும். சராசரி அளவில் பணவரவு கிடைக்கும். பணியாளர் நிர்வாகத்தின் கண்டிப்பை எதிர்கொள்வர்.

சுடோக்கு

எண் விளையாட்டு

	8		4			9		6
				8			4	
	9		7	6		5	8	1
2				7	4			9
			8		5			
8			3	9				7
5	4	9		3	8		7	
	6			1				
7		2			9		3	

சுடோக்கின் நேற்றைய விடை

2	1	4	6	5	9	8	7	3
9	8	5	3	7	1	4	2	6
3	6	7	2	4	8	5	9	1
7	9	2	4	1	5	6	3	8
1	4	8	7	3	6	2	5	9
6	5	3	8	9	2	1	4	7
5	3	9	1	6	4	7	8	2
8	7	6	5	2	3	9	1	4
4	2	1	9	8	7	3	6	5

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டிப்பாகாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பிரபலமாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபலமானது.

பாராட்டும் பிறந்த நாள் வாழ்த்தும்

"தெய்வ நிழல் மல்லம்", உடுவிலைச் சேர்ந்த
திரு. திருமதி சதீஸ் - ஜெகதா தம்பதியரின் ஏக புத்திரனும்
யா/ ஏழாலை மேற்கு, சைவசன்மார்க்க
வித்தியாசாலை மாணவனுமான
செல்வன் சாருஜன்
2012 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில்
150 புள்ளிகள் பெற்று சித்தியடைந்தமையையிட்டும்
இன்று தனது 10 ஆவது பிறந்த நாளை
விமரிசையாகக் கொண்டாடுவதையும்
பாராட்டி வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, சாம்பவி (தங்கை), ஜெயராஜா (அம்மம்மா), சாரதா (அம்மம்மா), சதீசன் (மாமா), சஞ்சுதா (சித்தி).
உடுவில்.
Best Wishes (24424)(4.6)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

அதிபர் சுப்பிரமணியம் நடராசா
இந்த ஆண்டுக்கான
நல்லதிபராகத் தெரிவு செய்யப்பட்டு
"பிரதீபா பிரபா" 2012 விருதினைப் பெற்ற
எமது பாடசாலை அதிபர் அவர்களை மேன்
மேலும் உயர்வுபெற
வாழ்த்துகின்றோம்.
Best Wishes
வாழ்த்துவோர்: ஆசிரியர்கள்
கிளி/அழகாபுரி வித்தியாலயம், இராமநாதபுரம்.
(24215) (2-6)

யா/வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம்
நூற்றாண்டு விழா பற்றிய கலந்துரையாடலும் தீர்மான மெடுத்தலும்

யா/வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு எதிர்வரும் 21.10.2012 அன்று பாடசாலை மண்டபத்தில் பிற்பகல் 2 மணியளவில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் பாடசாலையின் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள், ஆசிரியர்கள், ஆர்வலர்கள் ஆகியோரைத் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
தலைவர்: ச.ஞானசோதியன் 0774604525,
செயலாளர்: அகிலன்
(ச/2459) (2-6)

வீடு வாடகைக்கு

207, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு எனும் முகவரியில் அமைந்துள்ள விசாலமான வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 0776179105 (ச/4142) (2-7-6)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

கள்/வேரவில்
இந்து மகா வித்தியாலயத்தில்
கல்வி கற்பிக்கும்
சபாரட்ணம் லதீஸ்குமார்
அவர்கள் 09.10.2012 அன்று இந்த வருடத்துக்கான சிறந்த ஆசிரியருக்கான குருப் "பிரதீபா பிரபா" எனும் விருதினை அத்மேதகு ஜனாதிபதி அவர்களால் வழங்கப்படு கௌரவிக்கப்பட்டமையைப் பாராட்டி அகமகிழ்வுடன் மேன் மேலும் பட்டங்கள் பதவிகள் பெற்று பிரகாசிக்க பாராட்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
குடும்பத்தினர்.
Best Wishes
(ச/4146)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

திருமதி
சிவரஞ்சினி கணேசானந்தன்
(B.A, Dip. in Edu., SLPS - III)
கிளி/ அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தில்
ஆசிரியராக கடமையாற்றிய
திருமதி சிவரஞ்சினி கணேசானந்தன்
அவர்கள் கடந்த (03.10.2012) அன்று
அதிபர் சேவையில் இணைந்துகொள்வதை
இட்டு பெருமகிழ்வடைவதுடன் அவர் மேலும்
மேலும் பல பதவிகளைப் பெற்று
பலர் போற்ற வாழ வேண்டும் என்று இறை
ஆசி வேண்டி பாராட்டி வாழ்த்துகின்றோம்.
Best Wishes
வாழ்த்துவோர்:
அதிபர், ஆசிரியர்கள்,
பெற்றோர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
கிளி/ அக்கராயன்,
ஆரம்ப வித்தியாலயம்.
(ச/4148)(4.6.)

திறப்பு விழா அழைப்புமடல்....
Jupitar Shoe Palace
யூபிற்றர் சூ பலஸ்

நிகழும் மங்களகரமான நந்தன வருடம் ஐப்பசித் திங்கள் 02 ஆம் நாள் இன்று (18.10.2012) வியாழக்கிழமை காலை 09 மணி முதல் 10 மணிவரையுள்ள சுபமுகூர்த்த சுபவேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

யூபிற்றர் சூ பலஸ்

எனும் வியாபார நிலையத்தைத் திறந்து வைக்கவுள்ளதால் அத்தருணம் தாங்கள் குடும்பசமேதரராய் வருகை தந்து திறப்புவிழா நிகழ்வைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

தங்களின் நல்வரவை நாடி நிற்கும்.....

சாயி மந்திர் அருகே,
பிரதான வீதி, பருத்தித்துறை.

திரு. திருமதி நடராஜன் - கலைச்செல்வி.
திரு. திருமதி இளங்கோ - ஜெயவதனி.
செல்வன் பா. காண்டீபராஜ்.
(ச/4173)(2-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நச்சுத்தன்மையான விவசாய உள்ளீடுகளைப் பயன்படுத்தி வடமத்திய மாகாண விவசாயிகளுக்கு தீங்கு விளைவித்தமைக்காக நட்டஈடு கோரி கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் செயலகத்துக்கு முன்னால் விவசாயிகள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கூட்டத்துக்கு செல்ல மாட்டோம் மஹிந்த அரசை எதிர்ப்போம்

மனோகணேசன் கூறுகிறார்

கொழும்பு,ஒக.18

சரத் பொன்சேகா தலைமையில் இன்று நடக்க இருக்கும் பொதுக்கூட்டத்தில் நாம் கலந்து கொள்ளப் போவதில்லை. ஆனால், அரசுக்கு எதிரான அனைத்துக் கூட்டணிகளையும் நாம் வரவேற்கிறோம் என்று ஜன நாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

சரத் பொன்சேகா தலைமையில் இன்று நடக்க இருக்கும் பொதுக்கூட்டம் குறித்துக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய இரண்டு கட்சி ஆட்சிகளிலும் தமிழ் மக்கள் இனவன்செயல்களுக்கு முகம் கொடுத்தார்கள். இவற்றை யாரும் மறுக்க முடியாது.

இந்த அடிப்படை உண்மையை அறிந்துகொண்டதால்தான், நாம் நமது கட்சியை தனித்துவமாக நடத்துகின்றோம்.

இந்த அரசு வீழ்த்தப் பட்டே ஆகவேண்டும். ஆனால், இந்த அரசை வீழ்த்த தனி ஒரு கட்சியாலோ, தனி ஒரு கூட்டணியாலோ முடியாது. அனைத்து எதிர்கட்சிகளும், ஒன்று சேருகின்ற சந்தர்ப்பத்திலேயே இது சாத்தியம். எனவே, சரத் பொன்சேகாவின் இன்றைய கூட்டத்தில் கலந்துகொள்வது இல்லை என்ற முடிவை கடந்த வெள்ளிக்கிழமை கூடிய நமது அரசியல்குழு ஏகமனதாக தீர்மானம் எடுத்துள்ளது. ஆனால் இந்தக் கூட்டத்துக்கு ஆதரவு வழங்குவோம்- என்றார்.(ச)

பல்கலைக்கழக மாணவர்களுக்கு மீண்டும் தலைமைத்துவப் பயிற்சி

கொழும்பு,ஒக.18

பல்கலைக்கழக மாணவர்களுக்கு இந்த முறையும் தலைமைத்துவப் பயிற்சி வழங்கப்படவுள்ளது என்று உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி பல்கலைக்கழக மாணவர்களுக்கான முதல் கட்ட தலைமைத்துவப் பயிற்சி ஆரம்பிக்கப்படவுள்ளது.

மூன்று கட்டங்களாக மாணவர்களுக்கு பயிற்சி வழங்கப்படவுள்ளது என்று உயர்கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

முதல் கட்டத்தில் ஒன்பதாயிரம் மாணவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

கடற்படை மற்றும் பொலிஸ் முகாம்களில் இந்தப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

சட்டப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் நோக்கில் மாணவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி வழங்குவது தொடர்பில் சட்ட மா அதிபரின் ஆலோசனை பெற்றுக்கொள்ளப்பட உள்ளது என்று உயர்கல்வி அமைச்சு கூறியுள்ளது.

இந்த ஆண்டு அதிகளவான மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு உள்ளீர்க்கப்படுவதனால் மூன்று கட்டமாக தலைமைத்துவ பயிற்சி வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

அரசின் வரிக் கொள்கை; வறிய மக்களுக்கு பாதிப்பு

ஐ.நா. அபிவிருத்தி நிறுவனம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக.18

இலங்கை அரசின் வரி விதிப்புக் கொள்கை வறிய மக்களைப் பாதிக்கும் என்று ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை தொடர்பிலான அதன் வருடாந்த அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அரசு முதலீடுகள் உள்ளிட்ட வெளிநாட்டு நிதி கையாள்கை தொடர்பிலான வரி விதிப்புகளை அதிக அளவில் குறைத்துக் கொண்டுள்ளது.

எனினும் நேரடி மற்றும் மறைமுக வரிவிதிப்புகள் பொது மக்கள் மீது அதிக அளவில் திணிக்கப்பட்டுள்ளன. இதனால் விலைகள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றன.

> அரசின் வரி விதிப்புக் கொள்கை வறிய மக்களைப் பாதிக்கும் என்று ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. இதனால் வரிவிதிப்புக் கொள்கையை மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டும்.

இந்த நிலையில் இலங்கையின் தற்போதைய அரசின் வரிக் கொள்கை வறிய மக்களை பாதிக்கும் வகையில் காணப்படுகின்றது.

1995 ஆம் ஆண்டின் பின்னர் மொத்த தேசிய உற்பத்தியில் வருமான வரியின் பங்களிப்பு கணிசமாகக் குறைவடைந்துள்ளது.

1995 ஆம் ஆண்டில் 15 சதவீதமாகக் காணப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியில் வருமான வரியின் பங்களிப்பு, தற்போது 2012 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாத காலப்பகுதியில் 6.9 சதவீதமாகக் குறைடைந்துள்ளது. இது மிகப்பெரிய வருமான இழப்பைக் காட்டுகிறது.

இந்தச் சுமை அனைத்து மறைமுக வரிகளின் ஊடாக வறிய மக்களையே சென்றடைகின்றது.

இந்த நிலையில் அரசின் வரி விதிப்பு மற்றும் முதலீட்டு கொள்கையை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

வெளிநாடு செல்வதற்கு அமைச்சர்களுக்குத் தடை

ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, ஒக.18

அடுத்துவரும் நாடாளுமன்ற அமர்வுகளின் போது அமைச்சர்கள் மற்றும் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளக்கூடாது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

எதிர்வரும் 23 ஆம் திகதி இடம்பெறவுள்ள நாடாளுமன்ற அமர்வின்போது பல சட்ட வரைவுகள் நிறைவேற்றப்படவுள்ளமையால், இவை தொடர்பான விவாதங்களில் கலந்து கொள்ளவும், அவற்றுக்கு வாக்களித்து நிறைவேற்றிக் கொள்ளவும் வசதியாகவே இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவுறுத்தல்கள் கட்சியின் பிரதான அமைப்பாளர் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, திவிநெகும சட்டவரைவுக்கு எதிராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீதான விசாரணை எதிர்வரும் திங்கட்கிழமை உயர்நீதிமன்றத்தில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

நாடாளுமன்றத் தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்

கரு ஜயசூரிய எம்.பி. வேண்டுகோள்

கொழும்பு, ஒக.18

மாகாண சபைகள் மற்றும் நாடாளுமன்ற தேர்தல் முறைகளிலும் உடனடியாக மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். அதற்கான நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் யோசனைகளை உடனடியாகச் செயற்படுத்த வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த தேர்தல் முறை மாற்றத்தை நாம் மாத்திரமல்ல நாட்டில் உள்ள பெரும்பான்மையானவர்கள் அங்கீகரிக்கின்றனர்.

தேர்தல் முறையில் மாற்றங்களை ஏற்படுத்துவதால் மாத்திரம் சுதந்திரமான மற்றும் நீதியான தேர்தலை நடத்த முடியாது. அண்மைய காலத்தில் சுதந்திரம் மற்றும் நீதியான தேர்தல்கள் நடத்தப்படவில்லை என்பது

நாம் அனைவரும் அறிந்த விடயமாகும்.

அரசியல்மயப்படுத்தப்பட்ட அரச கட்டமைப்புக்குள் அது எந்த விதத்திலும் சாத்தியப்படாது.

தேர்தல் ஆணையாளரின் உத்தரவுகளை ஏற்றுக் கொள்ளாது அரச சேவை மற்றும் பொலிஸ் என்பன அரசியல் மயப்படுத்தப்பட்டு, நீதித்துறையில் தலையீடுகளை மேற்கொள்ளும் போது, வாக்காளர்களுக்கு சுதந்திரம் மற்றும் நீதியான தேர்தலுக்கான சந்தர்ப்பம் கிடைக்காது.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு முன்னர், 17 ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு அமைய முழுமையான அதிகாரம் உள்ள தேர்தல் ஆணைக்குழுவின் அவசியம் குறித்து நாம் தொடர்ந்தும் வலியுறுத்தியுள்ளோம்.

18 ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு அமைய நியமிக்கப்படும் ஆணைக்குழுவின் மூலம் சுதந்திரமாகச் செயற்பட முடியும் என்று நாம் நம்பவில்லை.

இதேவேளை வாக்கெடுப்பு நிலையங்கள் மற்றும் வாக்கு எண்ணும் நிலையங்களில் இடம்பெறும் மோசடிகளைத் தடுக்க இலத்திரனியல் வாக்கெடுப்பு இயந்திரங்கள் சிறந்ததாக இருக்கும்.

இந்தியாவில் இந்த முறை மிகவும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த முறையின் மூலம் சில நிமிடங்களில், தேர்தல் முடிவுகளை அறிவிக்க முடியும் என்பதை நாம் நேரில் பார்த்தோம் - என்றார். (ச)

ஹெரோயின் வைத்திருந்த இருவர் சிக்கினர்

கொழும்பு, ஒக.18

கல்கிஸ்ஸை பகுதியில் ஹெரோயின் வைத்திருந்த ஆண் ஒருவரும் ஹெரோயின் விற்பனை செய்த பெண்ணும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்கிஸ்ஸை வலய குற்றத்தடுப்புப் பிரிவினர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை 400 கிராம் ஹெரோயினுடன் நபர் ஒருவரைக் கைது செய்தனர்.

குறித்த நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து ஹெரோயின் விற்பனை செய்த பெண் ஒருவர் 8 கிராம் ஹெரோயினுடன் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார். (ச)

மாகாணசபை முறைமையை ஒழிக்க நடவடிக்கை அவசியம்

எல்லே குணவன்சதேரர் கோரிக்கை

கொழும்பு,ஒக.18

ஐக்கிய தேசியக் கட்சியினால் உருவாக்கப்பட்ட மாகாணசபை முறைமையை ஒழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தேசத்தை பாதுகாப்பதற்கான தேசிய அமைப்பின் தலைவர் எல்லே குணவன்ச தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த மாகாணசபை முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என்று தமது அமைப்பு ஜனாதிபதியை வலியுறுத்தும் என்று அவர் கூறினார்.

மூன்றில் இரண்டு அதிகாரம் கொண்ட அரசுக்கு இதனை இல்லாதொழிப்பது இலகுவான விடயம். அதற்கு மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஐக்கிய தேசிய கட்சி ஆகியன ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

ரயில் மோதி ஒருவர் சாவு

கொழும்பு,ஒக.18

கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து அவிசாவளை நோக்கிப் பயணித்த ரயிலில் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அவிசாவளை,உக்வத்த ஜயபோதிக்கு அருகில் நேற்றுமுன்தினம் செவ்வாய் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த நபர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூராட்சி வாரம்

யாழ்ப்பாணம், ஒக்.18

வலிகாமம் தெற்கு பிரதேச சபைப் பொது நூலக நடமாடும் சேவையும் நூல்களின் கண்காட்சியும் இன்று முற்பகல் 9.30 மணிக்கு உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையில் இடம் பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் நி.தேவதயாளன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நூல்களின் கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதுடன் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்களின் நாடகமும் மற்றும் தனிநடன நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வாரமாக இந்த வாரம் அனுஷ்டிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மக்கள் மத்தியில் வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான் என்பதை எடுத்துச் சொல்லும் வகையில் மேற்படி நிகழ்வுகள் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது. (16)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
021 567 1111

தவறிவிட்டது

நல்லூரைச் சேர்ந்த சாந்தினி ஜெயந்திரன் என்பவது தேசிய அ.அட்டை(468600250V)10.10.2012 அன்று நல்லூரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 21 492 1849 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (24476)(5-6)

கண்ணீர் அஞ்சலி



அம்பிகை களஞ்சியம், அன்னை நாகா பூட்சிற்றி
உரிமையாளர்களின் தந்தை.

செல்லையா தம்பிராசா

அவர்களின் மறைவால் துயர் அடைந்துள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

சுதன் களஞ்சியம்,
320, ஆஸ்பத்திரி வீதி,யாழ்.
உரிமையாளர்,ஊழியர்கள்.

திவ்யா ஸ்ரோர்ஸ்
163, கே.கே.எஸ். றோட்,யாழ்.
உரிமையாளர்,ஊழியர்கள்.

ஜெகன் களஞ்சியம்
477, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.
உரிமையாளர்,ஊழியர்கள்.

(24473)(5-6)

Make the best use of your time after A/Levels
CSC-ASIAN COMPUTER EDUCATION
ISO 9001:2008 Certified Institution - India
விபரங்களுக்கு அழையுங்கள்
யாழ்ப்பாணம் ▸ 021-2225677
நல்லூர் ▸ 021-2229191
நெல்லியடி ▸ 021-2262399
சாவகச்சேரி ▸ 021-2270267

பசுமாடு விற்பனைக்கு

நல்லினப் பசுமாடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 138 1492 (24468)(5-6)

தவறிவிட்டது

சிறுதொகைப் பணம் மற்றும் முக்கிய ஆவணங்களுடன் இ.இராஜேந்திரா என்பவரது பேர்ஸ் ஒன்று தவறவிடப் பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு: 077 306 8750, 077 665 0356 (24467)(5-6)

கார் விற்பனைக்கு

NP-KO-xxxx Toyata Vitz 2008 மொடல் லீசிங் உடன் விற்பனைக்கு உண்டு. மு.ப.11.00 மணிக்குப் பின் தொடர்பு கொள்ளவும்.
தொ.பே: 077 663 1413 (24466)(5-6)

45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு
01.11.1958

உதிர்வு
04.09.2012

அமரர் நடராசா இராசகணேசன்

(ஆசிரியர், யா/அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, கொடிகாமம்)

04.09.2012 அன்று அமரத்துவ மடைந்த எமது குடும்ப அகல் விளக்கின் துயரில் பங்கெடுத்த அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (18.10.2012) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உதயபானு, கண்டி வீதி,
கொடிகாமம். (சி/4177)(2.6)

குடும்பத்தினர்.

45ஆம் நாளில் எம் நெகிழ்ந்து துயர் பகிர்கின்றோம்

உதயபானு, கண்டிவீதி, கொடிகாமத்தை வசிப்பிடமாகக் கொண்ட கணித ஆசான்

அமரர் நடராசா இராசகணேசன்

04.09.2012 அன்று அகால மரணமான அன்னாருக்கு எமது கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்குவதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து அவர்களது குடும்பத்தினருக்கு எமது அழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை

31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
17.12.1939

மறைவு
18.09.2012

பொன்னாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் கன்னாபுரம், நாவாந்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் **நடராசா பூரணம்** (பொன்கிளி)

அவர்களின் பிரிவுத்துயர்

ஆறாது ஆறாது அழுதாலும் ஆறாது
தீராது தீராது உன் பிரிவு தீராது என்றும்
உன் பிரிவால் வாடும்

தேவாலய வீதி,
சங்கானை.

திரு.திருமதி தயாளகுமார் ராதிகா
(லண்டன்)

(24450)(5.6.7)

மூன்றாம் ஆண்டு நினைவுகளில்

திருமதி
சரவணமுத்து
பாக்கியவதி

திதி : 18.10.2012
பூர்வபக்க திருதியை

தோற்றம்
26.04.1947

மறைவு
20.10.2009

முத்துக்கு முத்தாகிய
எங்கள் சொத்தே
அம்மா!
மூன்றாண்டுகளிலும்
உங்கள் நினைவுகளோடு
நெகிழ்ந்து,வாழ்கின்றோம்.

'தெணியகம்',
பொலிகண்டி.
தொ.பே: 077 6219 225

குடும்பத்தினர்.

இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
15★02★1944

ஆண்டவன் அடியில்
10★10★2010

திருமதி
சோமசுந்தரம் சின்னப்பிள்ளை

திதி: சதுர்த்தி (18.10.2012)

இரண்டாண்டு ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவு
என்றென்றும் எங்கள் மனதில் நிறைந்திருக்கும்
ஐயனார் காலடியே சரணென்று
எம்முறவை மறந்தே புகழுடலில் வாழ்பவரே
காலங்கள் விடை பெறலாம் ஆனாலும்
கண் முன்னே நிழலாடும் உங்கள் நினைவுகள்
ஒருபோதும் எம்மை விட்டு அகலாது
உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும் :
கணவர்: ஆ. சோமசுந்தரம்,
மகன்: சோ. இராசநாதன் (கனடா),
மருமகள்: இ.சரோஜாதேவி (கனடா),
பேரர்பிள்ளைகள் : ரஜீவன் (கனடா), ரஜீபன் (லண்டன்), ரஜீந்தன், ரஜீபன், ரசீலன், றமணதன் (கனடா).

மீசாலை கிழக்கு,
மீசாலை.

(20250)(45-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்து கொள்ளுங்கள்.....
"எம்மை நாமே பாதுகாப்போம்"

மருத்துவர் ஆர் தெய்வேந்திரன்

யாழ்ப்பாணக்குடாநாட்டில் டெங்கு வைரஸ் நோய் பரவும் சாத்தியம் அதிகரித்து வருவதாக சுகாதார வைத்தியப் பகுதியினர் மக்கள் கவனத்தை ஈர்த்துள்ளனர். இது குறித்து மக்கள் விழிப்புணர்வுடனும், எச்சரிக்கையுடனும், செயற்பட வேண்டிய அவசரமானதும், அவசியமானதுமான தேவை எழுந்துள்ளது.

மக்கள் இந்நோயால் பீடிக்கப்படுவதைத் தடுப்பதற்கு தனிப்பட்ட ரீதியில் கடைப் பிடிக்க வேண்டிய வழிமுறைகளையும் நேயால் வந்த அதனைக் குணப்படுத்துவதற்குச் செய்ய வேண்டிய கருமங்களையும் குறிப்பு வடிவத்தில்இலகுமுறையில்வடித்துதருகின்றோம்.

டெங்கு தொற்று என்பது என்ன?

இது நுளம்பினால் பரவப்படும் ஒரு வைரஸ் நோய்.

இது இருவகையாக வெளிப்படும்.

✱டெங்கு காய்ச்சல் (DENQUE FEVER)

✱இரத்தத் தாக்கத்தை உண்டாக்கும் டெங்குக் காய்ச்சல் (DENGUE HAEMORHAGIC FEVER)

டெங்கு காய்ச்சலின் குணங்குறிகள்

✱சடுதியாக ஏற்படும் காய்ச்சல்

✱கடுமையான தலையிடி

✱கண்ணின் பிற்பகுதியில் நோ

✱தசை, எலும்பு, மூட்டுக்கள் போன்றவற்றில் கடும் நோ

இரத்தத் தாக்கத்தை உண்டாக்கும் டெங்குக் காய்ச்சலின் குணங்குறிகள்

மேற்குறிப்பிட்ட குணங்குறிகளுடன் உறுப்புக்களில் இரத்தம் கசிதலும் அதிர்ச்சி நிலை ஏற்படும் நிலையிலும் சாதாரணமாக காய்ச்சல் ஏற்பட்டு 2-3 நாள்களில் காணப்படும் இந்த நிலை 5-6 நாள்கள் (103 பாகை- 105 பாகை) தொடரும். 3-4 நாள்களில் குறைந்து மீண்டும் வரக்கூடும். இந்த நிலையில்நோயாளிக்குப் பலவீனமான நிலை ஏற்பட்டு இயலாத் தன்மை ஏற்படும். இந்நோய் மக்களிடையே சடுதியாகப் பெருகிப்பலரைத் தாக்கும் சக்தி கொண்டது.

டெங்குக் காய்ச்சலை அடையாளம் காணும் வழிகள்

✱ சடுதியாக ஏற்படும் காய்ச்சல் கடுமையான தலையிடி குறிப்பாக நெற்றிப்பகுதியில்

✱கண்களின் பிற்பகுதிகளில் கடும் நோவும், கண்களை அசைக்கும் போது நோவு கூடுதலும்.

✱உடலின் முழுப்பகுதிகளிலும், மூட்டுக்களிலும் நோ

✱ஓங்காளம், வாந்தியெடுத்தல்

கடுமையான டெங்கு இரத்த தாக்க நிலை அதிர்ச்சி நிலையை எவ்வாறு இனம் காண்பது

மேற்குறிப்பிட்ட குணங்குறிகளுடன் கீழே தரப்படும் ஏதாவது1-2 வரையான குணங்குறிகள் இருப்பின் ஆபத்து நிலையாகக் கணிக்கலாம்.

1) கடுமையான தொடர்ச்சியான வயிற்று நோ அல்லது வலி

2) மூக்கு, வாய், முரசு, தோலின் அடியில் குருதி ஒழுக்குக் காணப்படுதல்.

3) அடிக்கடி குருதி கலந்தோ அல்லது இல்லாமலோ வாந்தி எடுத்தல் .

4) மலம் கறுப்பு நிறமாக வெளியேறுதல்

5) நாவறட்சி மற்றும் தண்ணீர்த் தாகம் ஏற்படல்

6) வெளிறிய /குளிர்ந்த நிலையில் தோல் காணப்படல் .

நோயை இனங்காணும் முறைகள்

சுலபமாகச் செய்யக் கூடிய ஆய்வு முறைகள் (Platelet Count, PCV Count, Tourniquet test, Haematocrit test, Denque test)எவ்வாறு எனினும் மேற்குறிப்பிட்ட குணங்குறிகள் இருப்பின் சிகிச்சை உடன் மேற்கொள்ளவேண்டும்.

சிகிச்சை முறைகள்

டெங்கு நோய் என்று கருதினால் ஒரு தகைமையுள்ள வைத்தியரைக் கொண்டு பரிசோதித்தல் அவசியம். ஆரம்பத்தில் சிகிச்சை மேற்கொண்டால் மட்டுமே சிக்கல் ஏற்படுவதையும், உயிர் இழப்பையும் தவிர்க்கலாம். அஸ்பிரின்(Asprin),புறுபென்(Brufen), கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். அவை நோயை சிக்கலாக்கும். பரசிற்றமோல் (Paracetamol) வைத்திய ஆலோசனையுடன்கொடுக்கலாம்

கடுமையான வயிற்று நோவு, கறுப்பு நிறமான மலம் வெளியேறுதல், கடும் வியர்வை வெளியேறுதல், மூக்கு, வாய், தோலுக்கு அடியில் இரத்தக் கசிவு காணப்படுதல், குளிர்ந்த தோல் என்பன நோயாளிக்கு உயிர் ஆபத்து ஏற்படுவதற்கான அறிகுறிகள். ஆகவே அவ்வேளையில் உடனடியாக வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்க வேண்டும்.

டெங்கு பற்றிய அடிப்படைத் தகவல்கள்

✱Aedes வகை நுளம்பினால் இந்த நோய் ஏற்படலாம்.

ஒரு நோயாளியைக் கடித்த நுளம்பு ஒரு சுகதேகியை கடித்தால் அவருக்கு 5-7 நாள்களில் நோயின் அறிகுறி தென்படும். எந்த நுளம்பு நோய்க்காவியாக இருந்தது என்பதை கண்டுபிடிக்க முடியாது ஆகையால் நுளம்புக் கடியிலிருந்து பாதுகாப்பது முக்கியம்.

நுளம்பு பெருகும் இடங்கள்

நீர்த் தேக்கங்கள், நீர்த்தேங்கி நிற்கும் பாத்திரங்கள், பூச்சாடிகள் மற்றும் பரவலாக எறியப்பட்டிருக்கும் வெற்றுப் போத்தல்கள், பாவனைக்குதவாத சட்டிகள் போன்றவற்றிலும்,தண்ணீர்த் தொட்டிகளிலும்,மழை நீர் தேங்கி நிற்கும் இடங்களிலும் நுளம்பு பெருகும்.தண்ணீரைத் தேக்கி வைக்கும் கொள்கலன்கள் மூடப்படாமல் இருப்பின் அவை 7 நாள்களுக்கு ஒரு முறை மாற்றப்பட வேண்டும், இல்லையேல் நுளம்பின் குடம்பிகள் உருவெடுத்துப் பெருகும்.

நுளம்பு கடிப்பதை தவிர்த்தல்

அ) டெங்கு நுளம்பு பகலில் கடிக்கும். அதிலிருந்து பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

ஆ) முழு நீள மேற்சட்டை மற்றும் கால்களைப் பாதுகாக்கும் வகையில் உடை அணிதல் வேண்டும்.

இ)நுளம்பு வராமல் தடுக்கும் மருந்துகளைப் பாவித்தல்.

ஈ) நுளம்புச்சுருள் மற்றும் அழிக்கும் இரசாயனப் பொருள்களைப் பாவித்தல்.

உ) நுளம்பு வலைகளைப் பயன்படுத்தல் (குறிப்பாக குழந்தைகள், சிறார்களுக்கு) Permithrin மருந்து தெளித்த நுளம்பு வலை கள் மற்றும் கதவு, யன்னல், வலைகளைப் பயன் படுத்தல்.

நோய்ப் பரம்பலை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை எடுத்தல், நோயாளியிடமிருந்து ஏனையோருக்கு பரவாமல் நடவடிக்கை எடுப்பது அவசியம்.

நுளம்புகள் பெருகுவதைத் தடுத்தல்

டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் ஒவ்வொரு வீட்டின் சுற்றுப் புறத்திலுள்ள நீர் தேங்கும் இடங்களிலிருந்து பரவுகின்றது. அதனைத் தடுப்பதற்கு நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் வருமாறு:-

வீட்டுச் சூழலிலுள்ள நீர் தேங்கும் நிலைகளை ஒழித்தல், வீட்டுக்குள் வைக்கும் சாடிகள், கோப்பைகள் போன்றவற்றுள் நீர் நிலைத்து நிற்காமல் சுத்தப்படுத்தல். தண்ணீர் சேமித்து வைக்கும் பாத்திரங்கள் மற்றும் வாளிகளை மூடி வைத்தல். பாவித்து எறிந்த போத்தல்கள் மற்றும் பாத்திரங்களை சுற்றுச் சூழலி லிருந்து அகற்றி அழித்தல். மேலே தெரிவிக்கப்பட்டிருந்த முறைகளை கவனத்தில் எடுத்து நாம் எல்லோரும் செயற்பட்டால் டெங்கு நோயிலிருந்து எம்மைக் காப்பாற்றிக் கொள்ளலாம்.

முக்கிய அறிவித்தல்

யாழினி அடகு பிடிப்பகம்
ஏ 9 வீதி, முருகன் கோயில் அருகில்
கிளிநொச்சி.

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2011ஆம் ஆண்டு (08.03.2011) இக்கு பின்னர் வைத்து ஒரு வருடம் பூர்த்தி ஆனவர்கள். (31.12.2012) இந்த திகதிக்கு முன்னர் உங்கள் அடகு நகைகளை மீட்கவும். தவறும் பட்சத்தில் உங்கள் அடகு நகைகள் விற்கப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

குறிப்பு: 31.12.2012 இல் இருந்து எமது அடகு சேவைகள் அனைத்தும் நிரந்தரமாக மூடப்படும்.

ஏ -9 வீதி,
முருகன் கோயில் அருகில்,
கிளிநொச்சி.

உரிமையாளர்,
யாழினிஅடகு பிடிப்பகம்.

(24213)(5 6 7)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
021567111 1

நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்

செல்வி விஜயபாரதி வெங்கடேஸ்வரன்

(ஆசிரியை,யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்)

எமது கல்லூரியின் இசை ஆசிரியை செல்வி விஜயபாரதி வெங்கடேஸ்வரன் அவர்கள் இந்த ஆண்டின் நல்லாசிரியர் விருதாகிய 'பிரதீபா பிரபா' விருதினைப் பெற்றதையிட்டுப் பாராட்டி வாழ்த்துவதோடு, மேலும் பல விருதுகள் பெற்று வாழ்வில் மேன் மேலும் மேன்மையுற வாழ்த்துகின்றோம்.

Best Wishes

ஆசிரியர் கழகம்,
யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம்.

(24158)(5-6)

வாழ்த்துகிறோம் வையகம் போற்றிட

கந்தசாமி ஸ்ரீதரன்

Sp.Trained Com.,B.Ed.,SLPS-3

'ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவருக்கு எழுமையும் ஏமாப்பு உடைத்து.'



எமது ஆலய தர்மகர்த்தா சபை செயலாளரும் யா/வேலணை மேற்கு நடராசா வித்தியாலய ஆசிரியருமான கந்தசாமி ஸ்ரீதரன் அவர்கள் 02.10.2012அன்று அலரிமாளிகையில் நடைபெற்ற நிகழ் வில் அதிபர் தரம்-3 பதவியுயர்வு பெற்றமையையிட்டு அவரை மனமுவந்து பாராட்டுவதுடன் அவர் மேன்மேலும் பல உயர்வுகள் பெற எல்லாம் வல்ல காமாட்சி அம்பாளின் அருளை வேண்டுகின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்:
தொண்டர்குழுவும் தர்மகர்த்தா சபையினரும்
வண்ணை ஸ்ரீகாமாட்சி அம்பாள் தேவஸ்தானம்
(நாச்சிமார் கோயில்)

(24166)(5-6)

உளம் மகிழ பாராட்டி வாழ்த்துகின்றோம்

09.10.2012 அன்று மீபே கல்வி அபிவிருத்தி நிலையத்தில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் பிரதீபா பிரபா விருதினைப் பெற்று எமது கல்லூரிக்குப் புகழ் சேர்த்த ஆசிரியர்களை மனதார வாழ்த்துகின்றோம்.

Best Wishes

திருமதி அருளானந்த தேவி மேகநாதன்
(Maths Trained)
கணித பாட இணைப்பாளர்

செல்வி தாரணி சுந்தரமூர்த்தி
(B.Sc(Agri),Dip.in Ed)

இவர்கள் மேலும் பற்பல விருதுகளைப் பெற்று ஆசிரியப் பணியில் சிறப்புற்றிடைய வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் சமூகம், யா/இந்து மகளிர் கல்லூரி.

24463 (5-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ மட்டுலில் வடக்கு அ.த.க. பாடசாலையில் அதிபராக கடமையாற்றும்

சரவணை கிருஷ்ணன் (SLPS - III)



அவர்கள் கடந்த 02.10.2012 அன்று கொழும்பு அலரிமாளிகையில் நடைபெற்ற வைபவத்தில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களிடமிருந்து இலங்கை அதிபர் சேவை தரம் III இற்குரிய பதவி உயர்வு நியமனத்தைப் பெற்றுக் கொண்டமையை பாராட்டுவதுடன் அவர் மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

Best Wishes

முல்லைமாறன் குடும்பம்
'கவின் கோல்ட்'
சாவகச்சேரி.

(21567 3)(5-6)

கண்காட்சியும் விற்பனையும்

திருக்குடும்ப சகோதரிகள் யாழ். மண்ணில் தடம் பதித்த முப்பொன்(150) விழாவைச் சிறப்பிக்க

யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடத்தில் இடம்பெறும்

★ கண்கவர் காட்சிகளை

★ விற்பனையை

★ சிறுவர் விளையாட்டுக்களை

கண்டு களிக்க -பங்கு பற்ற வாருங்கள்.....

காலம்: ஐப்பசி 19, 20,21

நேரம்: காலை 9 மணி – மாலை 6.30 வரை

யாழ்.திருக்குடும்ப சகோதரிகள்,
யாழ்ப்பாணம்.

(24461)(5-6)

31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
21.09.1921

மறைவு
18.09.2012

திருமதி தெய்வநாயகி சுப்பிரமணியம்

அன்பினை ஊட்டி நல் வழிகாட்டி
கடமை சுமந்து கண்ணியமாய் நடந்து
எமை ஆறாத் துயரில் மூழ்க வைத்து
இறைபதம் அடைந்த அன்புத் தெய்வமே
உயிரோடும் உணர்வோடும்
கலந்துவிட்ட உங்கள் நினைவலைகள்
என்றென்றும் எம்முடன் நிலைத்திருக்கும்
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

19, கடவைப்புலம்,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.

(24440)(2-6)

கண்ணீர் அஞ்சலி

அன்னை நாகா பூட்சிற்றி, அம்பிகை களஞ்சியம் ஆகிய நிறுவனங்களின் உரிமையாளர்களின் பாசமிகு தந்தை

செல்லையா தம்பிராசா

அவர்களின் மறைவால் துயர் அடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

உரிமையாளர்:
லிங்கம் ஸ்ரோர்ஸ், பிள்ளையார் கோயிலடி,
மானிப்பாய் வீதி, தாவடி.

(ஞ/41[illegible])

நூல் வெளியீடும், பிறந்த தின நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஒக். 18

சிறிமதி நகுலாம்பிகை அம்பிகைபாகனின் 90 ஆவது பிறந்த தின நிகழ்வும், 'அம்பிகை பாகன் ஆளுமைத் தடம்' நூல் வெளியீடும் நாளை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் விவேகானந்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் எம். மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வாழ்த்துரைகளை யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரச ரட்ணம், யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே. யோக நாதன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் வி.கே. கண பதிப்பிள்ளை, யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட பேராசிரியர் இ.குமாரவடிவேல், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க செயலாளர் சரா. புவனேஸ்வரன், வைத்தீஸ்வராக் கல்லூரியின் முன்னாள் அதிபர் சிவ.சரவணபவன், தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் ஆறுதிருமுருகனும் வழங்கவுள்ளனர்.

இந்த நிகழ்வில் கல்லூரி மாணவிகளது கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

(16)

கணித மதிப்பீடு

தென்மராட்சி, ஒக்.18

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6இல் கற்கும் கற்கும் மாணவர்களுக்கான கணிதமதிப்பீடு இல.9 நாளை வெள்ளிக் கிழமை நடைபெறும்.

இதற்கான வினாத்தாள்களை இன்று வியாழக் கிழமை கோட்டக் கல்வி அலு வலகத்தில்பெற்றுக்கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப் பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

(ம-9)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

வேலையாள் தேவை

பாடசாலைப் பொருள்கள் விற்பனை நிலையத்திற்குப் பெண் ஊழியர் தேவை. (தையல் பயிற்சி மாணவர்களுக்கு ஏற்ற துணிகள் ஒட்டி, ஆக்கங்கள் எழுதி வைக்கும் கொப்பிகள் தையல் விதிமுறைகளுக்கு அமைவானது எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.)

ராஜ் கொம்பியூட்டர் பிறிண்டிங் சென்ரர்,
10, இராமநாதன் வீதி, பரமேஸ்வராச் சந்தி.
T.P. 021 222 0231 (24475)(2-6)

மீட்கப்படாத அடகு நகைகள் ஏலவிற்பனை

பின்வரும் வங்கிக் கிளைகளில் அவ்வங்கிகளின் பெயர்களுக்கு முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் அடகு வைக்கப்பட்டு 2ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிவரை மீட்கப்படாமலுள்ளதும், 3ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி வரையிலும் மீட்கப்படாத, புதுப்பிக்கப்படாத அடகு நகைகள், இவ்வட்டவணையின் 4ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலும், இடத்திலும் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.
(பகிரங்க ஏலவிற்பனை 9.30 மணிக்கு ஆரம்பிக்கப்படும்)

கொமர்ஷல் வங்கியின் கிளை	திகதி வரை அடகு வைக்கப்பட்ட நகைகள்	மீட்கப்படவேண்டிய கடைசித் திகதி	ஏலவிற்பனையின் திகதியும் இடமும்
மருதானை, முகத்துவாரம், வெள்ளவத்தை, கொழும்பு 07, பிரதான வீதி புறக்கோட்டை, நகர் அலுவலகம்	2011/09/26 வரையிலான 12 மாதங்களுக்கும், 2012/03/26 வரையிலான 06 மாதங்களுக்கும் அடகு வைக்கப்பட்ட நகைகள்	09/11/2012	மருதானைக் கிளை 2012 .11.10 மற்றும் 2012.11.11
மன்னார்	2011/09/26 வரையிலான 12 மாதங்களுக்கும், 2012/03/26 வரையிலான 06 மாதங்களுக்கும் அடகு வைக்கப்பட்ட நகைகள்	23/11/2012	மன்னார் கிளை 24.11.2012 மற்றும் 25.11.2012
கொட்டாஞ்சேனை, மாலம்பே, தெகிவளை, இரத்மலான, கிருலப்பனை, பத்தரமுல்லை	2011/09/26 வரையிலான 12 மாதங்களுக்கும், 2012/03/26 வரையிலான 06 மாதங்களுக்கும் அடகு வைக்கப்பட்ட நகைகள்	23/11/2012	மருதானைக் கிளை 24.11.2012 மற்றும் 25.11.2012

மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஏலவிற்பனையை இரத்துசெய்வதற்கும், காலந்தாழ்த்துவதற்கும், இணைப்பதற்கும், அல்லது ஏலவிற்பனையின் இடத்தை மாற்றுவதற்கும் கொமர்ஷல் வங்கி தத்துவம் கொண்டுள்ளது.

கொமர்ஷல் வங்கி
சிரேஷ்ட முகாமையாளர்- அடகுச்சேவை
இலக்கம் 23 லில்லி வீதி, கொழும்பு 02
தொலைபேசி. 011 2 353 806, 011 5 743 997

(க/2021)(2-6)

COMMERCIAL BANK



20% வரை தள்ளுபடி

யாழ்ப்பாண
புத்தகக்
கண்காட்சி

1500/- மதிப்பிற்கு கொள்முதல் செய்து லப்ரொப், ரப்லட், இலக்ரோனிக் டிக்ஷனரி ஆகியவற்றை வெல்லுங்கள்

9.00 முதல் 6.30 வரை
19 - 29 ஒக்டோபர் 2012
யாழ்பாண மத்திய கல்லூரி

எம்.டீ.குணசேன
புத்தக நிலையம்

(க/2020)(2-6)

நாம் வாசிப்பை தேசத்திற்கு கற்பித்தோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண அறிவித்தல்

செல்லையா தம்பிராசா

புங்குடுதீவு, 11ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், புங்குடுதீவு, 4 ஆம் வட்டாரத்தை வதிவிடமாகவும், இல. 415, கோயில் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா தம்பிராசா கடந்த (16.10.2012) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - பொன்னம்மா தம்பதியரின் அன்புமகனும், காலஞ் சென்றவர்களான சிற்றம்பலம் - செல்லமுத்து தம் பதியரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற நாகம் மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அன்னமுத்து, அமிர்தலிங்கம், துரைச்சாமி, கற்பகம், பரராஜசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சிவக்கொழுந்து, அப்பையா, செல்லத் துரை மற்றும் மீனாட்சி, பாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சாரதாம்பாள், குழந்தைவேல் (சண்முகம் SSR - 4 ஆம் குறுக்குத்தெரு, கொழும்பு, அன்னைநாகா பூட்சிற்றி, யாழ்ப்பாணம்), தில்லை நாயகி, சிவசோதி, தர்மபாலன், குகநேசன் (அம்பிகை களஞ்சியம், ராம் சுப்பர் சிற்றி), தயாளினி (நாகா பூட்சிற்றி) ஆகியோரின் அன்புத் தந்தையும், விசாகப்பெருமாள், மகேஸ்வரி (குணபூசணி), காலஞ்சென்ற முத்துலிங்கம் மற்றும் கிருஷ்ண லிங்கம், ராகினி, பவானி, ரவீந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமனும், ராஜேஸ்வரன், பவானி, ஞானேஸ்வரன், ராகினி, சத்ஸ்வரன் ரோகினி, ஷைலஜா, நிலாணி, நித்தியா, சுபேந்திரன், நிறோஜி, விஜயராஜ், விஜயதாஸ், விமலதாஸ், விஜித்தா, வினோதா, வனஜா, லாவணஜா, கிருஷாந்தி, கஜனி, பவீந்திரன், ரஜிந்தன், தனுஷன், கானுஜா, மிதுலா, வர்சிகா, மிதுலன், கோகுலன், கர்ஷனா, சபிலன், விபூஷன், சங்கிகா ஆகியோரின் பேரனும் மற்றும் பூட்டப்பிள்ளைகளின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2012) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 4.00 மணியளவில் தகனக்கிரி யைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

மக்கள், மருமக்கள், மகன் த.குழந்தைவேல்.

இல.415, கோயில் வீதி,

நல்லூர், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணித பாடத்துக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

தென்மராட்சி, ஒக்.18

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் நடத்தப்படும் வழிகாட்டல் கருத்தரங்கில் நாளைமறுதினம் காலை நடைபெறவிருந்த கணிதபாட கருத்தரங்கு பிற்பகல் 1.30மணிக்கு அந்தந்த நிலையத்தில் நடைபெறும்.

20ஆம்திகதி காலைசைவ பரிபாலன சபையினரால் பரீட்சை நடத்தப்படுவதால் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பிற்பகல் 1.30 மணிக்கு கருத்தரங்கு செல்லுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந் தன் அறிவித்துள்ளார். (ம-9)

கண்ணீர் அஞ்சலி

16.10.2012 அன்று இறைபதமடைந்த எமது பாடசாலையின் முன்னாள் அதிபரும், திருக்குடும்பக் கன்னியர் சபையைச் சேர்ந்தவருமான

அருட்சகோதரி மேரி நிசெற்றா

அவர்களின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு, எமது கண்ணீர்ப் பூக்களையும் காணிக்கையாக்குகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/மாதகல் சென். தோமஸ் றோ.க. பெண்கள் பாடசாலை.

(24479)(45-6)

நேர மாற்றம்

கொழும்புத்துறை, ஒக்.18

கொழும்புத்துறை மீன் சந்தையில் மீனவர்களால் நேரகாலத்துடன் அதிகளவான மீன்கள் விற்பனைக்காக கொண்டுவரப்படுகின்றன. இதனால் மீன்விற்பனையை இன்றிலிருந்து காலை 7 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதுவரை காலமும் காலை 8.30 மணிக்குப் பின்பே மீன் மொத்த விற்பனை இடம்பெற்று வந்தது. இதனால் பெட்டி வியாபாரிகள் மீன் நுகர்வோருக்கு நேரத்துக்கு விற்பனை மேற்கொள்வதில் சிரமங்கள் ஏற்படுவதாக சுட்டி காட்டியதைத் தொடர்ந்து இந்த நேர மாற்றம் இடம்பெறுவதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (வ-135)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

மரண அறிவித்தல்



வீ. அரசநாயகம்

(ஓய்வுபெற்ற அரச அச்சக உத்தியோகத்தர்)

தெல்லிப்பழை மேற்கு, பரந்தகலட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் நல்லூர் செட்டித் தெருவை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட வீ. அரசநாயகம் நேற்று (17.10.2012) புதன்கிழமை உலக வாழ்வை நீத்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம்-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வரும், பகவதியின் அன்புக் கணவரும், அஜந்தன், தருமினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுரேந்திரனின் அன்பு மாமனும், காலஞ்சென்ற கருணாநிதி மற்றும் திலகவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், செந்தூரனின் சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2012) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் செம்மணி இந்துமயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செட்டித்தெரு,
நல்லூர்,
(ஆட்டிஸ் மணியம் ஒழுங்கை) (24476) (45.6)

தகவல்:
அ. அஜந்தன் (மகன்)

அளவெட்டி மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ-து) பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிக்கு தகுதியானோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவங்களை காரியாலயத்தில் ரூபா 10/= செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் **பொது முகாமையாளர், அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கம், அளவெட்டி** எனும் முகவரிக்கு **31.10.2012** ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

பதவி : காசாளர் 306/15 (நிரந்தரம்) ஆண்கள் மட்டும்.
குறியீட்டு இலக்கம் : 306/15
சம்பளத்திட்டம் : (66/2006 இன்படி) 9450-11000
75×10-80×10

கல்வித்தகைமை : அ) கூட்டுறவு பணியாளரின் 16ஆவது சம்பளத்திட்டத்திலான பதவியில் 02 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவுப்பணியாளர் (சாதாரண)தர பத்திரம்/க.பொ.த. சாதாரணதரத்தில் 02அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம் /வர்தக எண்கணிதம்/தூய கணிதம், சிங்கள/தமிழ்மொழி என்பவற்றினை உள்ளடக்கியதாக 06 பாடங்களிலான சித்தியும், காசாளராக/வியாபார நடவடிக்கைகளில் ஒரு வருடத்துக்கு குறையாத அனுபவம்.

வயது : 18 -45 வயதுக்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

குறிப்பு: 1. சங்கப்பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.
2. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கல்வி, பிறப்பு, அனுபவ சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகள் இணைத்தல் வேண்டும்.
3. இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து சங்கத்தால் கோரப்படும் பிணைப்பணத்தை செலுத்தத் தயாராக இருத்தல்வேண்டும்.

பொது முகாமையாளர்,
அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கம், அளவெட்டி.

(சி/4194) (45-6)

மரண அறிவித்தல்

கணபதிப்பிள்ளை செல்வரட்ணம்

கரம்பன் தெற்கைப் பிறப்பிடமாகவும், இல. 611, நாவலர் வீதியை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை செல்வரட்ணம் கடந்த 15.10.2012 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காயத்திரி, கிரிதரன், சுபோதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயக்குமார், சுமங்கல்யா, தர்ஷினி ஆகியோரின் அருமை மாமனும், காலஞ்சென்றவர்களான முத்தையா, சிவயோகம், சோமசுந்தரம், நவரெத்தினம் ஆகியோரின் அருமைச் சகோதரரும், இராசமணி, கிருபானந்தபாலினி, வடிவேல், தங்கவேல், நகுலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், அபிஷா, பிரதீஸ், பதுஷிகன், கேசிகன், சௌமி, நிரோமி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.10.2012) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 611, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
(24476) (45.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Happy Birth Day பிறந்தநாள் வாழ்த்து

சிவராஜகுமார் - மதிவதனி
தம்பதியரின் செல்வப் புதல்வர்களான
சிவடனுஷன், சிவடனுஷிகன்
2 ஆவது பிறந்த நாளை இன்று 18.10.2012
தமது இல்லத்தில் வெகு சிறப்பாகக்
கொண்டாடுகிறார்கள்.
இச் செல்வங்களை அப்பா, அம்மா, பெரியப்பா - பெரியம்மா, பெரியப்பா- பெரியம்மா (கனடா), அத்தைமார் - மாமாமார் (கனடா) , சித்தப்பா (கனடா), அக்கா , அண்ணா சின்னண்ணா , சின்னக்கா (கனடா) ஆதியோர் சகல செல்வங்களும் பெற்று நீடூழிகாலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.

சிவடனுஷிகன் சிவடனுஷன்

"சிவபதி",
14/1, விதானை வீதி, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். [24481][2-6]

அகமகிழ்ந்து பாராட்டி
வாழ்த்துகின்றோம்

Best Wishes

பொரளை ஆயுள்வேத வைத்தியசாலையில்06.10.2012 அன்று
அகில இலங்கை ரீதியில் இடம்பெற்ற
கொரியன் அக்குபஞ்சர் (Korean Acupuncture)
ஆய்வுக் கட்டுரைப்போட்டியில் 2ஆம் இடத்தினைப் பெற்ற
DR.திருமதி மனோரஞ்சிதமலர் கணேசலிங்கம்
(மாவட்ட ஆயுள் வேத வைத்தியசாலை -வவுனியா)
அம்மணி அவர்களை அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
மணிமாரன்கள்,
துஷிந்த்,ஷங்கர அச்சகம், நெஸ்லியா. [23657][5-6]

பாராட்டி வாழ்த்துகின்றோம்
'உயர்வு கண்டீர் உவகை கொண்டோம்'

Best Wishes

06.10.2012 இல் பொரளை ஆயுள்வேத வைத்தியசாலையில் அகில
இலங்கை ரீதியில் நடைபெற்ற
கொரியன் அக்கு பஞ்சர் (Korean Acupuncture)
ஆய்வுக் கட்டுரையில் 2ஆம் இடத்தினைப் பெற்ற
DR.திருமதி மனோரஞ்சிதமலர் கணேசலிங்கம்
(மாவட்ட ஆயுள் வேத வைத்தியசாலை -வவுனியா)
அவர்களை அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
V CAREU Laboratory
&
Phyotharphy Clinic, Nelliyady. [23658][5-6]

சிவமயம்

சிவாச்சாரியாபிஷேக அழைப்பு

நிகழும் மங்கலமிகு நந்தன வருடம் ஐப்பசி மாதம் 2 ஆம் நாள் இன்று (18.10.2012) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணி முதல் 12.00 மணி வரையுள்ள வளர்திருதியை திதியும் அனுஷ நட்சத்திரமும் சித்த யோகமும் தனுலக்கினமும் கூடிய சுபவேளையில்

எமது குமாரன்

சிரஞ்ஜீவி மு. வித்தியானந்தசர்மா

அவர்களுக்கு மீசாலை மேற்கு இலந்தைக்கூடல் வீரகத்தி விநாயகர் கோயில் சந்நிதானத்தில் வீரகத்தி விநாயகர் திருவருளுடன் விசேட தீக்ஷை, நிர்வாணதீக்ஷை, சிவாச்சார்யா அபிஷேகம் நிகழ்த்த நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதராக வருகை தந்து சிறப்பித்து குருவருள் பெறும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தீக்ஷாகுரு
பிரதிஷ்டசிரோண்மணி
பிரம்மஸ்ரீ க. ச. சோமாஸ்கந்தக்குருக்கள்
(பொன்னாலை வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்)
தங்கள் நல்வரவை நாடும்,

மீசாலை மேற்கு,
மீசாலை, சாவகச்சேரி.

பிரம்மஸ்ரீ பா. முரளிதரக்குருக்கள் -
நாகபூஷணி தம்பதிகள்.

(சி/4196)(3.14.6)

ஆண்மை குறைவால்
குழந்தைகள் இல்லையே
என்ற கவலையா?
வீரியம் அதிகரிக்க,
குழந்தை பாக்கியம் பெற
ஆலோசனைக்கு அழையுங்கள் 0750 252 141

Room தேவை
நிறுவன பெண் உழியர்கள் தங்குவதற்கு சுண்டுக்குளி பாடசாலைக்கு அருகில் Room தேவை. (நற்குணமுள்ள குடும்பம் விரும்பத்தக்கது)
தொடர்பு: 0775006769
(24487)(3.6)

ஜெனரேற்றர் விற்பனைக்கு
30kw இத்தாலி நாட்டில் உற்பத்தியான மின்பிறப் பாக்கி (ஜெனரேற்றர்) விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0771877294
(24485)(3.6)

வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு
இரண்டு வீடுகளை உள்ளடக்கிய 3 பரப்பு காணி ஈச்சமோட்டையில் சகல வசதிகளுடனும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0773960311
(24489)(3.14)

கண்ணீர் அஞ்சலி

எமது இயக்குநர்
அருட்பணி. J.X. பேணாட் றெக்னோ
அவர்களின் மைத்துனரும் எமது
பணியாளர் விஜயசேகரின் தந்தையுமான

சொலமன் மரியதாஸ்

"அவர் என்னிடம் ஒப்படைக்கும் எவரையும் நான் அழிய விடாமல் இறுதி நாளில் அனைவரையும் உயிர்த்தெழச் செய்யவேண்டும். இதுவே என்னை அனுப்பியவரின் திருவுள்ளம்"
யோவான் 6:39

பணியாளர்கள்,
கரித்தாஸ் - கியூடெக்.

(சி/4200)(3.6

மரண அறிவித்தல்

வேலுப்பிள்ளை நாகேந்திரன் [ராசா]

யாழ்ப்பாணம்,கைதடியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி, இரத்தினபுரி மற்றும் கொழும்பு ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நாகேந்திரன் (சமாதான நீதிவான்- அகில இலங்கை, ஓய்வு பெற்ற FINANCIAL CONTROLLER, BALANGODA PALANTATION PLC) அவர்கள் 16.10.2012 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-சின்னப்பிள்ளை தம்பதியரின் மகனும் திருநெல்வேலியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான Dr.இராமலிங்கம்-லீலாவதி தம்பதியரின் மருமகனும் ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெயசுதன், றிஷிகேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் முத்துக் குமாரசாமி,காலஞ்சென்ற சின்னம்மா, நாகபூசனியம்மா, கண்ணகாதேவி, காலஞ்சென்ற Dr.கங்கதரன் மற்றும் நடேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராஜேஸ்வரி மற்றும் பாஸ்கரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.10.2012) வியாழக்கிழமை பொறளை ஜெயரத்ன மலர்ச்சாலையில் முற்பகல் 10.00 மணி முதல் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் பிற்பகல் ஒருமணிக்கு ஆரம்பிக்கப்பட்டு பிற்பகல் 3.00 மணியளவில் பொறளை பொது மயானத்தில் தகனஞ்செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
077 773 8462

தகவல்:
மனைவி,பிள்ளைகள்

(சி/4197)(5-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதம் உறங்கினால்...

மனிதம் கெட்டு
மதியிழந்து
மரநாயாக
மனிதனின்
மனித வாழ்வு....
மனிதனிடம்
மனிதம் உறங்கினால்
மண்ணுலக வாழ்வு
ஏதோ...?

பட்டமாம்
பதவியாம்
என்று சொல்லி
அலைகின்றான்
நாயாக...
சொந்தங்களை
இழந்து
சோரம் போகின்றான்
சொந்தங்களை
வெறுத்து
சோதி காண
முனைகின்றான்....
மனிதம் உறங்கினால்
மனிதனின்
மானுட வாழ்வு ஏதோ?

மனிதன்
மனிதத்தோடு
வாழ்ந்தால்
மண்ணுலக வாழ்வின்
இன்பந்தான்
என்னே?

த.ஐங்கரதீபன்
யாழ்.பல்கலைக்கழகம்.

மிருகபலியிடல்

வரமா? சாபமா?

இயற்கையின் சீற்றங்களுக்கு அஞ்சிய எம் முன்னோர்கள் இயற்கையையும் காளி, வைரவர் போன்ற தெய்வங்களையும் வழிபட்டு வந்தனர். ''நாம் உமக்கு இவ்வகையான உணவுகளைத் தருகின்றோம். நீர் எங்களை இயற்கைச் சீற்றங்களிலிருந்தும், ஆபத்துக்களிலிருந்தும் காப்பாற்றும்'' என்று இறைவனை வேண்டித் தமக்கு இலகுவாகக் கிடைத்த உணவுகளான தேன், தானியங்களுடன் மிருகங்களையும் பலியிட்டு இறைச்சி, மீன் எனும் அசைவ உணவுகளையும் படைத்து வழிபட்டனர்.

அந்தக் காலத்தில் வாழ்ந்த கல்வியறிவற்ற பாமர மக்கள் வழிவழியாக தமக்கு கிடைத்தவற்றைப் படைத்து வழிபாடுகளையும், நேர்த்திக் கடன்களையும் செய்தனர்.

ஆனால் 21 ஆம் நூற்றாண்டில் விஞ்ஞான யுகத்தில் வாழும் நாம் இந்த மாதிரியான மூட நம்பிக்கைகளை நம்பி வாழ்வது மூடத்தனமாகும். இறைவன் எம்மிடம் உண்மையான அன்பை மட்டுமே எதிர்பார்க்கிறான். எமது மகிழ்ச்சிக்காக வேண்டுமானால் நாம் தானிய வகைகளினால் செய்யப்படும் பல்வகையான பிரசாதங்களைப் படைத்து வழிபடலாம்.

புறாவுக்காகத் தன்னையே கொடுத்த சிபிச் சக்கரவர்த்திக்கு அருளிய இறைவன், பசுவின் கன்றை அறியாமல் கொன்றதற்காக, தன் மகனையே தேரேற்றிக் கொன்று பசுவுக்கு நீதி வழங்கிய மனுநீதிச் சோழனுக்கு அருளிய இறைவன், தனக்காக என்று கூறி ஓர் உயிரைத் தன் முன்னே கதறக் கதற பலியிடுவதற்காக எமக்கு அருளிடுவானா? இல்லை, அதைத்தான் ஏற்றுக் கொள்வானா? சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். மிருகங்களும் எம்மைப் போல் ஓர் உயிரே. அவற்றை அந்த வாயில்லா ஜீவன்களை ஆறறிவு படைத்த மனிதர்கள் பலியிடல் எனும் பெயரில் வதம் செய்வது பாவமான செயலாகும். உயிர்களை நேசிப்போம் மிருக பலியைத் தடுப்போம்.

ர.இந்துஜா, அல்லைப்பிட்டி.

மெல்ல வீசு தென்றலே...

வறுமை தொடர்ந்தாலும்
வாழ்க்கை கசந்தாலும்
வண்ணமாய் மனதில் - நீ
வளர்த்த இலட்சியம் தன்னை
வழி தவற விடாதே...!

இருள் வானம் சூழ்ந்தபோதும்
இளங்காற்று இதமாக வீசி
இதயத்தை வருட - உன்
இலட்சிய வேட்கை
இளைய சூரியன் போல் ஒளிர
இல்லம் தன்னுள்
மெல்ல வீசு தென்றலே...!

கிரிசனா குணசிங்கம்,
கெற்பேலி மத்தி, மிருசுவில்.

கோபம் வேண்டாம்

எதையுமே பதற்றப்படாமல் நிதானமாக, அமைதியாக செய்து முடியுங்கள். நீங்கள் ஒரு முடிவை எடுக்கமுன் அனுபவமுள்ள பெரியவர்களிடம் கேட்டுக் கொள்ளுங்கள்.

''இப்ப நான் எதற்கெடுத்தாலும் கோபப்படுகிறன், என்னையறியாமலே சில நேரம் கோபப்படுகிறன்'' என்று எங்களுடன் கூட இருப்பவர்கள், நண்பர்கள் புலம்புகிறார்கள். எதிலும் திடமான முடிவு எடுப்பதில்லை. எதிர்காலத்தை எண்ணி திட்டம் போடுகிறவர்களாகவும், விட்டுக்கொடுப்பு இல்லாதவர்களாகவும், வேண்டாத கற்பனை செய்பவர்களாகவும் இருப்பவர்களுக்கு அடிக்கடி கோபம் வரும். தீர்க்க முடியாத பிரச்சினை என்ற ஒன்று இந்த உலகில் இல்லை என்பதை அவர்கள் முதலில் நினைவுறுத்திக் கொள்ள வேண்டும்.

இதனால் மன அழுத்தம், இரத்தக் கொதிப்பு போன்ற உடல் ரீதியான பாதிப்புக்களுக்குத்தான் உள்ளாகுவோமே தவிர, வேறு ஒரு பயனும் கிடையாது. எதையுமே பதற்றப்படாமல் நிதானமாக, அமைதியாகச் செய்து முடியுங்கள். நீங்கள் ஒரு முடிவை எடுக்கமுன், அனுபவமுள்ள பெரியவர்களிடம் கேட்டுக் கொள்ளுங்கள். உங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை உங்கள் மனதுக்குள்ளேயே போட்டு குழம்புவதைத் தவிர்த்து உங்கள் நம்பிக்கையானவர்களிடம் சொல்லுங்கள்; மனம் திறந்து பேசுங்கள்; மனம் ஆறுதலடையும். பிறகு ஏன் கோபம்..?

சதாசிவம் கேதீஸ்வரி, வவுனியா.

அம்மா

உனக்கென ஒரு வாழ்த்து
நான் கூற - நீ
மௌனமாக இருப்பதுதான்
ஏனோ...?

உள்ளம் கொதிக்கிறது
உன் மௌன நிலை கண்டு
உன்னை இழந்த பாவியாக
நான் இன்று துடிக்கிறேன்

உனக்கான நாளை - நான்
எண்ணி இருந்தேன்
நீ எனக்கு இல்லை
என்பதை மறந்து

கல்லாக நீ இருந்திருந்தாலும்
உன்னை சிலையாகச்
செதுக்கியிருப்பேன்
ஆனால் நீ....
கண்ணில் கூட படாமல்
கல்லறையில் தூங்குகிறாயே...

ல.நிஷா, நவக்கிரி

இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-.....

முகவரி :- .....

.....

....
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

மாணவர்களின் ஆற்றலை வளப்படுத்துவது கலவன் பாடசாலைகளா? தனிப் பாடசாலைகளா?

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

தோல்வி

புண்பட்டு போன
நெஞ்சத்தில்
புகைப்பட்டு
போனதே!
புறப்பட்டு வா..
புண்ணியவதியே..!

சா.ஜிந்துஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் தேவை

யாழ். வர்த்தக சங்கத் தலைவர் கருத்து

யாழ்ப்பாணம், ஒக்.18

யாழ்ப்பாண வர்த்தகர்கள் இந்தியாவிலிருந்து நேரடியாகச் சந்தைப் பொருள்களை இறக்குமதி செய்ய இலங்கை அரசு இந்தியாவுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ளவேண்டும். இதன்மூலம் யாழ். வர்த்தகர்கள் கூடிய விலையில், போக்குவரத்துச் சிரமங்களின் மத்தியில் கொழும்பிலிருந்து பொருள்களைக் கொள்வனவு செய்வதைத் தவிர்த்து இலாபகரமான வர்த்தக நடவடிக்கையை மேற்கொள்ளலாம் இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். வர்த்தக சங்கத் தலைவர் ஜெயசேகரம்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள வர்த்தகக் கண்காட்சி தொடர்பாகக் கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரைநிகழ்த்தும்போது -

யாழ்ப்பாணக் கண்காட்சியில் இந்தியாவில் இருந்து பெருமளவான வர்த்தகர்கள் பங்குபற்றவுள்ளனர். யாழ்ப்பாண வர்த்தகர்கள் தற்போது அதிகமாக புடைவை, அழகுசாதனப் பொருள்கள் போன்றவற்றை இந்த நிலைமை மாறி நேரடியாக இந்தியாவில் இருந்து கொள்வனது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். கொழும்பில் இருந்தே கொள்வனவு செய்கிறார்கள்.

சிறிய, நடுத்தர கைத்தொழில்கள் முடக்கப்பட்டுள்ளதால் பொருளாதார ரீதியாக உள்ளூரில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். குறிப்பாக நெசவுசார் கைத்தொழில் நிலையங்கள் பல மூடப்பட்டுவிட்டன. இது வர்த்தகர்களின் நெருக்கடிக்கு மூலகாரணமாக உள்ளது.

எனவே காங்கேசன்துறை துறைமுகத்தின் ஊடாக நேரடியாக பொருள்களை இறக்குமதி செய்ய இலங்கை - இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றார்.

(10-14)

தென்னிலங்கையில் இருந்து மதம்பிடித்த யானை ஒட்டுசுட்டானுக்கு

யாழ்ப்பாணம், ஒக். 18

தென்னிலங்கையில் இருந்து மதம் பிடித்த யானைகள் வன இலாகாத் திணைக்களத்தின் உதவியுடன் முல்லைத்தீவு மாவட்டத்தின் மக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்குள் கொண்டு வந்து விடப்பட்டுள்ளதால் அண்மை நாள்களாக அவற்றின் அட்டகாசம் குடிமனைக்குள் அதிகரித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே இந்தப் பகுதிகளில் காட்டு யானைகள் அதிகம் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டு வன வளத் திணைக்களமும் இராணுவத்தினரும் இணைந்து அவற்றை விரட்டியடிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். இந்த நிலையில் தென்னிலங்கையில் இருந்து மதம் பிடித்த யானைகளை இந்தப் பகுதிக்கு சிலர் திட்டமிட்டு வாகனங்களில் ஏற்றி கொண்டு வந்து விட்டுள்ளனர்.

குறிப்பாக கடந்த வாரம் புத்தளம் பகுதியில் இருந்து மதம் பிடித்த யானை ஒன்று கனரக வாகனம் ஒன்றில் ஏற்றப்பட்டு ஒட்டுசுட்டான் பகுதியில் இறக்கிவிடப்பட்டுள்ளதாகவும், அது மக்களின் வீடுகளுக்குள் புகுந்து உணவு உள்ளிட்ட பொருள்களை உண்பதோடு பயன்தரு மரங்களையும் நாசம் செய்து வருவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (10)

தமிழக முதல்வரின் எதிர்ப்பும் எமது பயிற்சிக்கு முன்னேற்றமே

இந்தியாவில் பயிற்சி பெறுவது குறித்து இராணுவத் தளபதி பெருமிதம்

கொழும்பு, ஒக்.18

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா எவ்வளவுதான் தனது எதிர்ப்பை வெளிப்படுத்தியபோதும், இந்தியா தமக்கு உன்னதமான இராணுவப்பயிற்சியை வழங்கியுள்ளதாக இலங்கை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

இலங்கைப் படையினருக்கு இந்திய அரசு தொடர் பயிற்சியினை வழங்கியதன் மூலம் தலைமைத்துவம் மற்றும் தொழில்திறன் ஆகியவற்றில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த வருடத்தில் இந்தியாவில் பயிற்சி பெறுவதற்கு இலங்கைப் படையினரின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டிருந்தது. இதன்மூலம் எமது படையினரை சிறந்த இராணுவக் கட்டமைப்பாக மாற்ற முடிந்துள்ளது.

> இந்திய அரசு தொடர் பயிற்சியினை வழங்கிய தன்மூலம் தலைமைத்துவம் மற்றும் தொழிற்திறன் ஆகிய வற்றில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாமல் தமிழக முதல்வரின் எதிர்ப்பையும் நாம் ஒரு அனுபவமாகக் கொண்டுள்ளோம்.

கடந்த 50 வருடகால இந்திய - இலங்கை உறவில் இதுபோன்ற பயிற்சி வழங்கல்கள்தொடர்ந்துஇடம்பெற்று வருகின்றன. இந்த உறவு தொடர்ந்து நிலைத்திருக்கும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (உ-10)

காங்கேசன் துறைமுக நிர்மாணப் பணி 2014 நடுப் பகுதியில் நிறைவடையும்

யாழ்ப்பாணம், ஒக்.18

2014 ஆம் ஆண்டு நடுப் பகுதியில் காங்கேசன் துறைமுகத்தின் ஆறாம் கட்ட நிர்மாணப் பணிகள் முடிவடையும். அதனையடுத்து இந்தியாவில் இருந்து வணிகப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் மகாலிங்கம்.

எதிர்வரும் ஜனவரி மாதம் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள யாழ்ப்பாண வர்த்தகக் கண்காட்சி தொடர்பாக யாழ்ப்பாண வர்த்தகர்களுடன் நேற்று யாழ். வர்த்தக சங்கத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் உரை நிகழ்த்தும் போது -

அடுத்த வருடம் ஜனவரி மாதம் 18 ஆம் திகதி யாழ்ப்பாண வர்த்தகக் கண்காட்சியை நடத்தத் தீர்மானித்துள்ளோம். இந்தக் கண்காட்சி யாழ்ப்பாணத்தில் 3 வருடங்களாக இடம்பெற்று வருகிறது. இதில் 40 முதல் 45 வரையான இந்திய நிறுவனங்கள் பங்குபற்றியிருந்தன. ஆனால் இந்த வருடம் குறைந்தது 50 இந்திய வர்த்தக நிறுவனங்களை கண்காட்சியில் பங்குபெறச் செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறோம்.

குறிப்பாக புடைவை தொடர்பான விற்பனை நிலையங்களை அழைக்க இருக்கிறோம். இதுதொடர்பாக யாழ்ப்பாண வர்த்தகர்கள் தமது கருத்துக்களைத் தெரிவிக்கும்போது எந்த

வகையான புடைவை நிறுவனங்களை வரவழைக்க வேண்டும் என்பதை முடிவு செய்யலாம்.

அத்துடன் காங்கேசன் துறை துறைமுகத்தின் நிர்மாணப் பணிகளின் 3ஆம் கட்டப் பணிகள் முடிவடைந்துள்ளன. இதில் மூழ்கிய 10 கப்பல்கள் அப்புறப்படுத்தப்பட்டு கரைக்குக் கொண்டு வந்து சேர்க்கப்பட்டுள்ளன. ஆரம்பகாலத்தைப் போன்று துறைமுகமூடாகப் பொருள்களை இறக்குமதி செய்ய இன்னும் மேலதிகமாக நான்கு கிலோ மீற்றர் உயர்த்தப்பட வேண்டியுள்ளது. அதற்கு இந்திய நிறுவனத்திடம் மிக விரைவில் பணிகள் மேற்கொள்ளப்படுவதற்கான கைச்சாத்திடல் மேற்கொள்ளப்படவுள்ளன. - என்றார். (10-14)

ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக 50 சர்வதேச அமைப்புகள் அறிக்கை

கொழும்பு, ஒக் 18

''ஐ.நா. மனித உரிமைகள் பேரவை யின் பூகோள காலக்கிரம மீளாய்வுக் கூட்டத்தொடரில் இலங்கை அரசின் போலியான நம்பகத்தன்மையற்ற செயற்பாடுகளைச் சுட்டிக்காட்டி 50 சர்வதேச அமைப்புகள் அறிக்கைகளைத் தாக்கல் செய்துள்ளதால் அரசுக்குப் பாரிய நெருக்கடிகள் ஏற்படும்'' - என்று ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக் காட்டியுள்ளது.

அதேவேளை, மேற்படி கூட்டத் தொடரில் இலங்கை விடயம் தொடர்பில் இந்தியா காத்திரமானதொரு அறிக்கையைச் சமர்ப்பிக்கவுள்ளது. அது அரசுக்குக் கடும் சவால்மிக்க அறிக்கையாகவே அமையும் என்றும் அந்தக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

தான் வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றுவதற்கு அரசு தவறியுள்ளதன் காரணமாகவே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது எனச் சுட்டிக்காட்டும் ஐ.தே.கவின் சிரேஷ்ட உப தலைவர் லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி., இதே நிலைமை தொடர்ந்தால் 2013இல் சர்வதேச விசாரணை இடம்பெறுவது தவிர்க்கமுடியாததொன்றாகிவிடும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் பூகோள காலக்கிரம மீளாய்வுக் கூட்டத் தொடர் தொடர்பில் கருத்து வெளியிடும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்ட அவர், இது தொடர்பாக மேலும் தெரிவித்தவை வருமாறு:-

17ஆவது அரசமைப்பு அமுல்படுத்தப்படும் என சர்வதேசத்திடம் உறுதியளித்த அரசு பிற்காலத்தில் அதை நீக்கியது. அத்துடன், தகவல் அறியும் சட்டமூலத்தை நாம் கொண்டுவந்தவேளை அதை விவாதத்துக்கு எடுப்பதற்கு எதிர்ப்பை வெளியிட்டது.

குறிப்பாக, இறுதி யுத்தத்தில் மீறப்பட்டுள்ளது எனக் கூறப்படும் சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள் தொடர்பில் அரசு இன்றும் எந்தவித விசாரணைகளையும் ஆரம்பிக்கவில்லை. அதுமட்டுமல்லாது, நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அமுல்படுத்துவதிலும் அது இழுத்தடிப்பை மேற்கொள்கின்றது.

அதேவேளை, சர்வதேசத்துக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றுவதற்கும் அரசு பின்வாங்குகின்றது. எனவே, அரசின் மேற்கூறப்பட்ட செயற்பாடுகளைச் சுட்டிக்காட்டி 50 சர்வதேச அமைப்புகள் அறிக்கைகளைத் தாக்கல் செய்துள்ளன. இது அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தும்.

அத்துடன், மனித உரிமைகள் பேரவையின் பூகோள காலக்கிரம மீளாய்வுக் கூட்டத்தொடரில் கண்காணிப்பு நாடுகளுள் ஒன்றான இந்தியா, இலங்கை விடயம் தொடர்பில் காத்திரமான அறிக்கையொன்றை சமர்ப்பிக்கவுள்ளது. அது, அரசுக்குப் பாதகமாக இருப்பதற்கான சாத்தியங்களாகவே காணப்படுகின்றது. உறுதிமொழிகளை மீறுவதன் காரணமாகவே அரசுக்குச் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

எனவே, இனியும் இழுத்தடிப்புப் போக்கைக் கடைப்பிடித்தால் 2013ஆம் ஆண்டில் நடைபெறும் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணை [illegible] இதில் [illegible] கருத்துக்கு இடமிருக்க முடியாது. - என்றார்.

ஆஸி. செல்ல முயன்ற 35 சிங்களவர்கள் கைது

கொழும்பு,ஒக் 18

சட்டவிரோதமாகப் படகு மூலம் ஆஸ்திரேலியா செல்ல முயற்சித்த 35பேர் கந்தர கடற்பிரதேசத்தில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுப் புதன்கிழமை அதிகாலை தென் கடற்பரப்பில் படகில் பயணித்துக் கொண்டிருந்த நிலையில் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று கடற்படையின் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

'இசுறு புத்தா' என்ற படகு மூலம் பயணிக்க முற்பட்ட இவர்கள் அனைவரும் சிங்களவர்கள் என விசாரணைகள் மூலம் தெரியவந்ததாகக் கடற்படையின் பேச்சாளர் குறிப்பிட்டார்.

இவர்களைக் காலி துறைமுகத்துக்கு அழைத்துவந்த கடற்படையினர், மேலதிக விசாரணைகளுக்காக இரகசிய பொலிஸாரிடம் ஒப்படைத்தனர் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

(த)

ஆயுதக் கிடங்கு தோண்டிய படையினருக்கு அதிர்ச்சி

வவுனியா, ஒக்.18

கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றில் புலிகளால் மறைத்து வைக்கப்பட்ட ஆயுதங்களை ஏற்கனவே ஒருபடைப்பிரிவால் மீட்கப்பட்ட விடயத்தை அறிந்துகொள்ளாமல் அதே இடத்தில் ஆயுதக் கிடங்கு இருப்பதாக நிலத்தைத் தோண்டி ஏமாற்றம் அடைந்தனர் இன்னொரு படைப்பிரிவினர்.

புதுக்குடியிருப்பு 10 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றில் விடுதலைப் புலிகளால் ஆயுதங்கள் புதைத்து வைக்கப்பட்டிருந்தது என்ற தகவலைதடுப்பிலுள்ள போராளி ஒருவர் படையினருக்கு வழங்கினார். இந்தத் தகவலையடுத்து கொழும்பு குற்றப்புலனாய்வுப் பணியகத்தைச் சேர்ந்தவர்கள் தகவல் வழங்கிய நபருடன் கடந்த வாரம் புதுக்குடியிருப்புக்குப் பறந்து வந்தனர்.

வந்த படைப்பிரிவினர் தகவல் வழங்கியவர் காட்டிய இடத்தில் மண்வெட்டிகளால் மூசிமூசி வெட்டினர். ஆனாலும் ஆயுதங்கள் கிட்டவில்லை. எனினும் தமது முயற்சியில் சற்றும் தளராத படையினர் தொடர்ந்தும் அகழ வேண்டுமானால் பெக்கோ வாகனத்தால் தான் வெட்ட முடியும் என முடிவு செய்தனர்.

இந்தவேளையில் அந்த இடத்தால் சென்ற ஒருவர் படையினர் தேவாலய நிலத்தைத் தோண்டுவதை அவதானித்துவிட்டு பின்னர் ஒரு தகவலைவழங்கினார்.

அந்தத் தகவல் மூசிமூசி வெட்டியவர்களுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது.

குறித்த தேவாலய நிலத்தில் புலிகளால் புதைத்து வைக்கப்பட்ட ஆயுதங்களை வேறு ஒரு போராளி வழங்கிய தகவலின் அடிப்படையில் இன்னொரு படைப்பிரிவினரால் ஏற்கனவே மீட்கப்பட்டு விட்டன என்பதே அந்தப் பொதுமகன் வெளியிட்ட தகவல்.

பெரியதொரு ஆயுதக் கிடங்கை கண்டுபிடிக்கும் ஆவலில் வந்த படைப்பிரிவினர் இதன் பின்னர் வெறுங்கையுடன் திரும்பிச் சென்றனர்.

(ங-410)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோல்மழை பொழிந்து சம்பியனானது யாழ். பிரதேச செயலகம்

யாழ். பிரதேச செயலக அணித்தலைவரிடம் உடுவில் பிரதேச செயலர் நந்தகோபன் வெற்றிக்கிண்ணம் வழங்குகிறார்.

உடுவில் பிரதேச செயலக தெரிவு அணித்தலைவரிடம் கிண்ணம் வழங்கப்படுகின்றது

யாழ்ப்பாணம், ஒக். 18

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும் விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து தேசிய உதைபந்தாட்ட அணிக்கான போட்டிகளை நடத்திவருகின்றது.

அந்த வகையில் யாழ். மாவட்டத்துக்கு உட்பட்ட பிரதேச செயலக பிரிவுகளைச் சேர்ந்த 21 வயதுக்குட்பட்ட தெரிவு அணிகளுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டம் நேற்று மாலை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த இறுதியாட்டத்தில் யாழ். பிரதேச செயலக பிரிவு தெரிவு அணியை எதிர்த்து உடுவில் பிரதேச செயலக பிரிவு தெரிவு அணி மோதிக் கொண்டது.

விறுவிறுப்பாக இடம் பெற்ற இந்தப் போட்டியில் முதல்பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரண்டு அணிகளும் தமது அணிக்கான கோல்களைப் பெறவேண்டும் என்ற எண்ணத்தோடு மோதிக் கொண்டன. இதனால் ஆட்டத்தில் அனல் பறந்தது. ஆயினும் யாழ் .பிரதேச செயலக அணியின் ஆதிக்கம் மெல்ல மெல்ல நிலைநாட்டப்படத் தொடங்கியது. அந்த அணியின் வீரர்கள் அனைவரும் முன்னேறித் தாக்கும் முயற்சிகளில் இடைவிடாது ஈடுபட்டார்கள். இதனால் பந்து அந்த அணி வீரர்களின் கால்களுக்கு இடையிலேயே ஆட்டத்தின் பெரும் பகுதி நேரமும் சிக்குண்டிருந்தது. ஆட்டம் ஆரம்பித்து மூன்றாவது நிமிடத்திலேயே உடுவில் அணிக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தார் யாழ். பிரதேச செயலக வீரன் யூட். இவர் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பம் ஒன்றை அற்புதமான கோலாக்கினார். தொடர்ந்தும் ஆறாவது நிமிடத்தில் யூட் இன்னொரு கோலை அடித்தார். அதன் பின்னர் உடுவில் வீரர்கள் தம்மை சுதாகரித்துக் கொண்டு, தடுப்பாட்டத்தில் இறங்கினர். இதனால் யாழ். அணி வீரர்களின் கோல் பெறும் முயற்சிகள் பல முறியடிக்கப்பட்டன. அப்படியிருந்த போதும் எதிரணி வீரர்களை 'உச்சிவிட்டு' ஆட்டத்தின் பத்தாவது நிமிடத்தில் ஜெனட் அடித்தார் ஒரு கோல்.

பதிலடி கொடுக்க முயற்சித்த உடுவில் அணியின் வியூகங்களை உடைத்தெறிந்துகொண்டு இருபதாவது நிமிடத்தில் யாழ். பிரதேச செயலக அணிக்காக ஒரு கோலை நிதர்சன் அடித்தார். இந்தக் கோலுடன் யாழ். பிரதேச செயலக அணியின் கோல்களின் எண்ணிக்கை நான்காக உயர்ந்தது.

> எதிரணி வீரர்களை வெற்றிகரமாகத் தாண்டிச் சென்று தன்னுடைய 'ஹட்ரிக்' கோலை யூட் அடிக்க, யாழ். பிரதேச செயலகத்தின் கணக்கில் கோல்களின் எண்ணிக்கை ஐந்தாகியது.

இத்தோடு முடிந்துவிடவில்லை யாழ். பிரதேச செயலக அணியின் கோல் வேட்டை. மீண்டும் புயலாகி, எதிரணி வீரர்களை வெற்றிகரமாகத் தாண்டிச் சென்று தன்னுடைய 'ஹட்ரிக்' கோலை யூட் அடிக்க, யாழ். பிரதேச செயலகத்தின் கணக்கில் கோல்களின் எண்ணிக்கை ஐந்தாகியது.

இடைவேளையின் பின்னர் இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமான போதும், தொடர்ந்தும் ஆக்ரோஷ ஆட்டத்தையே யாழ். பிரதேச செயலக அணி வீரர்கள் வெளிப்படுத்தினர். எனினும் முதல் பாதி ஆட்டத்தில் விட்ட தவறுகளைச் சீர் செய்து, தமது முழுத் திறமையோடு எதிரணியை எதிர் கொண்டார்கள் உடுவில் வீரர்கள். எனினும் இரண்டாம் பாதி ஆட்டத்தின் 10ஆவது நிமிடத்தில் மரியரூபனும், 17 ஆவது நிமிடத்தில் யூட்டும் கோல்களை அடித்தனர். இதற்குப் பதிலடியாக 20 ஆவது நிமிடத்தில் உடுவில் பிரதேச செயலக வீரன் சபேசன் ஒரு கோல் அடித்து அந்த அணிக்கு ஆறுதல் கொடுத்தார்.

ஆட்ட நேர நிறைவில் யாழ். பிரதேச செயலக அணி 7:1 என்ற கோல்கணக்கில் உடுவிலை வீழ்த்தி மாவட்டச் சம்பியன் ஆனது.

(ங-23)

இன்றைய ஆட்டம்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் ஆதிசக்தி வி.க. நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு-

பி.ப.3 மணி

உடுப்பிட்டி யுத் வி.க. எதிர் அண்ணாசிலையடி வி.க.

பி.ப.4 மணி

மனோகரா வி.க. எதிர் உரும்பிராய் சென்.மைக்கல்ஸ் வி.க. (ங-23)

'உதயனின் தினமொரு பரிசுமழை'

உதயனின் தினமொரு பரிசுமழை அதிர்ஷ்டசாலிகளைத் தெரிவு செய்யும் நிகழ்வு நேற்று உதயன் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், உதயன் பிரதம ஆசிரியர் ம.வ. கானமயில் நாதன் மற்றும் விளம்பரதாரர்கள் கலந்துகொண்டு அதிர்ஷ்ட சாலிகளைத் தெரிவுசெய்தனர்.

உதயன் நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன்

உதயன் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன்

வெற்றிபெற்றோர் விவரம்

1) த.கஜேந்திரன் - பிள்ளையார் கோயிலடி, தாவடி கிழக்கு
2) ஜெ.ஜெயவர்மன் - அளவெட்டி வடக்கு, அளவெட்டி
3) பி.அஸ்வதா-11, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்.
4) எஸ். நேருகன்- 411/2 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
5) சோ.கஜன் -150, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
6) ச. உதயசங்கர்- சத்திரங்கை,கம்பர்மலை வல்வெட்டித்துறை.
7) ஏ.தேவராஜா - 67, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
8) ரி.லிபீசன்- 9 1/5 காரைநகர் வீதி, கொட்டடி.
9) ச.சௌந்தரி -ஏழாலை தெற்கு, சுன்னாகம்.
10) சி.சிவதர்சினி - 'ராஜ்வேல்ஸ்' 24, நவீன சந்தை உட்புறம், சாவகச்சேரி.
11) லி.சுமந்திரன் -'சக்தி இல்லம்' ஜி.எஸ். லேன், கொக்குவில் கிழக்கு.
12) வி.சொருபினி- மீசாலை மேற்கு, மீசாலை.
13) சி.சிவராகவன்- 4 1/6, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
14) தெ.தினேஸ்- கொம்மாந்துறை, வல்வெட்டித்துறை.
15) சி.நளினி -184, பிரதான வீதி, நெல்லியடி.
16) கோ. தீபனா-603, காங்கேசன்துறை வீதி, (மனோகராச் சந்தி அருகில்) யாழ்ப்பாணம்.
17) ர.பிரசன்னா- மல்லாம் சந்தி, மல்லாகம்.
18) சி. மோகனகுமார்-28,துரைராசா வீதி, வண்ணார் பண்ணை.
19) லு.கம்சிநாத் - இருபாலை தெற்கு, கோப்பாய்
20) த.சங்கீர்த்தன்-412, ஆஸ்பத்திரி வீதி , யாழ்ப்பாணம்,

சிங்கர் யாழ்.கிளை முகாமையாளர் கிரிசாந்

கிருபாலேணர்ஸ் உரிமையாளர் அ.கிருபாகரன்

திருநெல்வேலி, கந்தர்மடம் அபான்ஸ் காட்சியறை சார்பாக ம.தஜீவன்

நெல்லியடி, 'ஹொண்டா வேள்ட்' நிறுவனத்தின் சார்பாக க.பிரசாந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைகிறது இலங்கை கிரிக்கெட் அணி

உலக 'ரி- 20' இறுதி ஆட்டத்தில் இலங்கை, மேற்கிந்திய தீவுகள் அணியிடம் 36 ஓட்டங்களால் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து 'ரி- 20' என்று தனியான அணியை தோற்றுவிக்க வேண்டும், என்று இலங்கை பிரதம தெரிவாளர் அசந்த டி மெல் கூறியுள்ளார்.

நியூசிலாந்துடன் ஒக்டோபர் 30 இல் விளையாடவுள்ள ஆட்டத்தில் இந்த புதிய அணி அறிமுகமாகலாம் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதன் தலைவராக தற்போதைய உதவி அணித்தலைவர் அன்ஜலோ மத்தியூஸ் நியமனம் பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

'இறுதி 'ரி- 20' ஆட்டத்தில் இலங்கை அணியினால் ஒரேயொரு சிக்ஸர் மட்டுமே அடிக்க முடிந்தது. சரியாக இலக்கு வைத்து பந்தை அடிக்க கூடிய இளம் இளைஞர்களை நாம் தேடிப்பிடிப்போம். மஹேல ஜெயவர்த்தன, அன்ஜலோ மத்தியூஸ் ஆகியோரால் எல்லைக்கு அப்பால் பந்தை அனுப்புமளவுக்கு பலம் இல்லை.

எமது துடுப்பாடலுக்கு என்ன நடந்தது என்று எனக்கு தெரியவில்லை. முன்னர் முதல் ஆறு பந்துப் பரிமாற்றங்களில் குறைந்தது 50 ஓட்டங்களை எடுத்துவந்தோம். இறுதி ஆட்டத்தில் எமது அணி 30 ஓட்டங்களையே பெற்றது. இதனால் எதிரணியின் கையோங்கியது, என்று அவர் மேலும் கூறினார். (5)

சென்னை சொதப்பல் லயன்ஸ் வெற்றி

லயன்ஸ் அணிக்கு எதிரான சம்பியன்ஸ் லீக் ஆட்டத்தில் சென்னை சூப்ப கிங்ஸ் அணி 6 இலக்குகள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. தொடர்ந்து இரண்டாவது தோல்வியை பெற்ற சென்னை அணியின் அரையிறுதி வாய்ப்புக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அபாரமாக ஆடிய லயன்ஸ் அணி கடைசிப் பந்துப் பரிமாற்றத்தில் திரில் வெற்றி பெற்றது.

தென்னாபிரிக்காவில், நான்காவது சம்பியன்ஸ் லீக் 'ரி-20' கிரிக்கெட் தொடர் நடக்கிறது. கேப்டவுனில் நேற்று முன்தினம் இரவு நடந்த 'பி' பிரிவு லீக் ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ், தென்னாபிரிக்காவின் பிராந்திய அணியான ஹைவெல்டு லயன்ஸ் அணிகள் மோதின.

சென்னை அணியில் இரண்டு மாற்றம் செய்யப்பட்டது. மைக்கல் ஹசி, யோ மகேஷ் நீக்கப்பட்டு, அல்பி மோர்கல், விரிதிமன் சகா தேர்வு செய்யப்பட்டனர். நாணயச் சுழற்சியில் வென்ற லயன்ஸ் அணி களத்தடுப்பை தேர்வு செய்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னைக்கு டு பிளசி, முரளி விஜய் ஜோடி நல்ல தொடக்கம் கொடுத்தது. முதல் இலக்குக்கு 44 ஓட்டங்கள் சேர்த்த போது டுபிளசி (25) ஆட்டமிழந்தார். அடுத்து வந்த சுரேஷ் ரெய்னா (20) பெரிய அளவில் சாதிக்கவில்லை. பங்கிசோ சுழலில் முரளி விஜய் (22) வெளியேறினார்.

பின்னர் இணைந்த அணித் தலைவர் டோனி, ரவிந்திர ஜடேஜா ஜோடி ஆட்டத்தை கையில் எடுத்துக் கொண்டது. சிம்ஸ் பந்தில் சிக்சர் விளாசிய ஜடேஜா, டி பிரியுன் பந்தில் அடுத்தடுத்து இரண்டு பவுண்டரிகள் அடித்தார். மறுமுனையில் அதிரடி காட்டிய டோனி, மோரிஸ் பந்தில் சிக்சர், பவுண்டரிகளாக விளாசினார். நான்காவது இலக்குக்கு 32 ஓட்டங்கள் சேர்த்த போது ஜடேஜா (21) பவிலியன் திரும்பினார். அல்பி மோர்கல் (4) நிலைக்கவில்லை.

பின்னர் டோனியுடன் இணைந்த பத்ரிநாத், நானஸ் பந்தில் இரண்டு சிக்சர்கள் விளாச, ஓட்ட எண்ணிக்கை 150 ஓட்டங்களை கடந்தது. தன்வீர் பந்தை சிக்சருக்கு அனுப்ப முயன்ற டோனி (34) ஆட்டமிழந்தார். சென்னை சூப்ப கிங்ஸ் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளுக்கு 158 ஓட்டங்கள் எடுத்தது. பத்ரிநாத் (27) ஆட்டமிழக்காமல் இருந்தார். லயன்ஸ் அணி சார்பில் பங்கிசோ 2 இலக்குகளை கைப்பற்றினார்.

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய ஹைவெல்டு லயன்ஸ் அணிக்கு முதல் பந்துப் பரிமாற்றத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. பொலஞ்சர் வீசிய ஆட்டத்தின் முதல் பந்தில் அல்விரோ பீற்றர்சன் எல்.பி.டபிள்யூ. முறையில் 'டக்-அவுட்' ஆனார். மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிராக அரைசதம் அடித்த குயின்டன் டி காக் (5), இந்த முறை பொலஞ்சரிடம் சரணடைந்தார்.

பின்னர் இணைந்த குலாம், நீல் மெக்கன்சி ஜோடி ஆட்டத்தை கையில் எடுத்துக் கொண்டது. அல்பி மோர்கல் வீசிய 9 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் இரண்டு சிக்சர்கள் அடித்த குலாம், ரவிந்திர ஜடேஜா, அஷ்வின், டுபிளசி ஆகியோரது பந்தையும் விட்டுவைக்கவில்லை. டுபிளசி பந்தை சிக்சருக்கு பறக்கவிட்ட இவர் அரைசதம் அடித்தார். மூன்றாவது இலக்குக்கு 93 ஓட்டங்கள் சேர்த்த போது 46 பந்தில் 64 ஓட்டங்கள் (4 சிக்சர்கள், 5 பவுண்டரிகள்) எடுத்த குலாம் ஆட்டமிழந்தார். இவருக்கு ஒத்துழைப்புக் கொடுத்த மெக்கன்சி (33) நம்பிக்கையளித்தார்.

மத்தியவரிசையில் களமிறங்கிய ஜீன் சிம்ஸ், கிறிஸ் மோரிஸ் ஜோடி பொறுப்பாக ஆடியது. சென்னை அணி பந்துவீச்சை எளிதாக சமாளித்த இவர்கள் அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றனர். கடைசிப் பந்துப் பரிமாற்றத்தில் 9 ஓட்டங்கள் தேவைப்பட்டது. அல்பி மோர்கல் வீசிய 20 ஆவது பந்துப் பரிமாற்றத்தின் முதல் பந்தில் ஓர் ஓட்டம் எடுக்கப்பட்டது. அடுத்த இரண்டு பந்தில் சிம்ஸ் இரண்டு பவுண்டரிகள் அடிக்க, லயன்ஸ் அணி 19.3 பந்துப் பரிமாற்றத்தில் 159 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. சிம்ஸ் (39), மோரிஸ் (12) ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஆட்ட நாயகன் விருதை லயன்ஸ் அணியின் பங்கிசோ பெற்றார்.

ஏற்கனவே மும்பை அணியை வீழ்த்திய லயன்ஸ் அணி, தொடர்ந்து இரண்டாவது வெற்றியைப் பதிவு செய்து, அரையிறுதி வாய்ப்பை பிரகாசப்படுத்திக் கொண்டது. சென்னை அணி அரையிறுதிக்கு முன்னேற, அடுத்த இரண்டு ஆட்டத்திலும் நல்ல 'ரன்-ரேட்' வித்தியாசத்தில் வெற்றி பெற வேண்டும். பின், மற்ற போட்டிகளின் முடிவைப் பொறுத்து அரையிறுதி வாய்ப்பு உறுதி செய்யப்படும்.

உடைந்தது துடுப்பு

சென்னை கிங்ஸ் வீரர் டு பிளசியின் துடுப்பு உடைந்தது. சொகைல் தன்விர் வீசிய ஆட்டத்தின் முதல் பந்துப் பரிமாற்றத்தின் 4 ஆவது பந்து டுபிளசி துடுப்பின் கைபிடியை பலமாகத் தாக்கியதால் உடைந்தது.

19 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் 19 ஓட்டங்கள்

லயன்ஸ் அணியின் டிர்க் நானஸ் வீசிய 19 ஆவது பந்துப் பரிமாற்றத்தில், சென்னை சூப்ப கிங்ஸ் அணிக்கு 2 சிக்சர்கள், ஒரு பவுண்டரி உட்பட மொத்தம் 19 ஓட்டங்கள் கிடைத்தது. இதனால் சென்னை அணி 150 ஓட்டங்களை எட்ட உதவியது. (5)

ரூனி இங்கிலாந்தின் எதிர்காலத் தலைவர்

இங்கிலாந்து கால்பந்து அணியின் எதிர்காலத் தலைவராக மன்செஸ்டர் யுனைட்டட் அணியின் வெய்ன் ரூனியைத் தான் கருதுவதாக இங்கிலாந்து தேசிய அணியின் முகாமையாளர் ரோய் ஹொட்ஜ்சன் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தின் வழமையான தலைவர் ஸ்டீவன் கெரார்ட் போட்டித்தடை காரணமாகவும், உப தலைவர் பிராங் லம்ப்பார்ட் காயம் காரணமாகவும் போட்டிகளில் பங்கு பெற முடியாது போக வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சன் மரினோவிற்கு எதிரான உலகக் கிண்ணத் தகுதிப் போட்டிகளில் இங்கிலாந்து அணியின் தலைவராக வெய்ன் ரூனி செயற்பட்டிருந்தார்.

அந்தப் போட்டியில் இங்கிலாந்து அணி 5-0 என்ற கணக்கில் வெற்றியடைந்திருந்ததோடு, வெய்ன் ரூனி 2 கோல்களையும் அடித்திருந்தார். இந்த நிலையில் இங்கிலாந்தின் எதிர்காலத் தலைவராக வெய்ன் ரூனியைக் கருதுகிறீர்களா? எனக் கேட்கப்பட்டமைக்குப் பதிலளித்த ரோய் ஹொட்ஜ்சன், வெய்ன் ரூனியை எதிர்காலத் தலைவராகக் கருதுவதாகவும், அவர் மிகவும் முதிர்ச்சியடைந்த பண்புகளை வெளிப்படுத்துவதாகவும் பாராட்டுத் தெரிவித்தார்.

இங்கிலாந்துக்காகப் போட்டிகளில் பங்குபற்றுவதை வெய்ன் ரூனி நம்பமுடியாதளவு முக்கியமானதாகக் கருதுவதாகத் தெரிவித்த ரோய் ஹொட்ஜ்சன், அணித்தலைவராகச் செயற்படுவதை அவர் பெருமையானதாகக் கருதுவதாகவும், அணித்தலைவராகச் செயற்பட அவர் விரும்புவதாகவும் தெரிவித்தார்.

(5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிட்னி சிக்ஸர் இலகு வெற்றி

சம்பியன்ஸ் லீக் 'ரி- 20' தொடரில் சிட்னி சிக்ஸர்ஸ் அணி இலகுவான வெற்றியைப் பெற்றுள்ளது. யோர்க்ஷயர் அணிக்கெதிரான ஆட்டத்தில் சிட்னி சிக்ஸர்ஸ் அணி 8 இலக்குகளால் இலகுவான வெற்றியைப் பெற்றது.

நியூலன்ட்ஸ் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற யோர்க்ஷயர் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய யோர்க்ஷயர் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 96 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. முதலாவது இலக்குக்காக 30 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, அதன் பின்னர் ஒரு கட்டத்தில் 12.3 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து 62 ஓட்டங்களுடன் காணப்பட்டது. ஆனால் அதன் பின்னர் இலக்குகளைத் தொடர்ச்சியாக இழந்த அந்த அணி, ஓட்டங்களைப் பெறவும் தவறியது.

துடுப்பாட்டத்தில் யோர்க்ஷயர் அணி சார்பாக ஜோ றூட் 24 பந்துகளில் 25 ஓட்டங்களையும், பில் ஜக்ஸ் 19 பந்துகளில் 21 ஓட்டங்களையும், அடம் லித் 25 பந்துகளில் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சிட்னி சிக்ஸர்ஸ் அணி சார்பாக மிற்சல் ஸ்ரார்க் 4 பந்துப் பரிமாற்றங்களில் 22 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், பற் குமின்ஸ், ஷேன் வொற்சன் 2 இலக்குகளையும், ஜான் ஹேஷல்வூட் 4 பந்துப்பரிமாற்றங்களில் 9 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும், மொய்ஸஸ் ஹென்றிக்கஸ் 2 பந்துப் பரிமாற்றங்களில் 10 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

97 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சிட்னி சிக்ஸர்ஸ் அணி 8.5 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. முதலாவது இலக்காக ஷேன் வொற்சன் இலகுவாக ஆட்டமிழந்த போதிலும், மைக்கல் லம்ப், பிரட் ஹடின் இருவரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி மிக இலகுவான வெற்றி இலக்கை அடைந்தனர்.

துடுப்பாட்டத்தில் சிட்னி சிக்ஸர்ஸ் அணி சார்பாக மைக்கல் லம்ப் 24 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 43 ஓட்டங்களையும், பிரட் ஹடின் 21 பந்துகளில் 41 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் யோர்க்ஷயர் அணி சார்பாக றயன் சைட்பொட்டம், அஷீம் ரபிக் ஆகியோர் தலா ஒரு இலக்கினைக் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக சிட்னி சிக்ஸர்ஸ் அணியின் தலைவர் பிரட் ஹடின் தெரிவானார்.

மன்னிப்புக் கேட்டார் ரஸாக்

இலங்கையில் நடைபெற்று முடிந்த டி20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணியின் சகலதுறை வீரர் அப்துல் ரஸாக் ஒரே ஒரு ஆட்டத்தில் மட்டுமே இடம் பெற்றார்.

அரையிறுதி ஆட்டத்தில் அவர் சேர்க்கப்படவில்லை. இதனால் அதிருப்தி அடைந்த ரஸாக், தனது நீக்கத்துக்கு அணித்தலைவர் முகமது ஹபீஸ்தான் காரணம் என்று கூறி அவரை விமர்சித்து இருந்தார்.

இதற்கு கிரிக்கெட் வாரியம் அப்துல் ரஸாக்குக்கு நோட்டீஸ் அனுப்பியது. இந்த நோட்டீசுக்கு அப்துல் ரஸாக் பதில் அனுப்பி உள்ளார்.

அதில் தனது செயலுக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்திடம் அவர் மன்னிப்பு கேட்டுள்ளார். எதிர்காலத்தில் இதுமாதிரி நடைபெறாமல் இருக்க கவனமுடன் செயல்படுவேன்.

ஹபீஸுடன் தனக்கு தனிப்பட்ட முறையில் எந்த பிரச்சினையும் இல்லை எனவும் தனது பதிலில் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே ஹாங்காங்கில் நடைபெறும் சூப்பர் சிக்சர்ஸ் போட்டியில் அப்துல் ரஸாக் சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வெளிவந்துள்ளது

வங்கியியல் சட்டமும் நடைமுறைகளும் பகுதி - I
(திருத்திய 3 ஆம் பதிப்பு)
LAW AND PRACTICE OF BANKING
PART - I
நூல் ஆசிரியர்:
துரைசிங்கம் ரகு B.A., FIB
பிரதிகளைப் பெற்றுக்கொள்ள
தொடர்பு கொள்ளவும்.
தொலைபேசி இலக்கம்: 0773502814
(24471)(3.14)

கிராமசேவகர் போட்டிப் பரீட்சை விசேட வகுப்புகள்

பிரிவு - I
ஒவ்வொரு சனிக்கிழமையும் பி.ப 1.00 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை.
பிரிவு - II
செவ்வாய், வியாழன் 3.00 மணி தொடக்கம் 5.00 மணிவரை.
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)
(6/41/8/13.14)

மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1984 இல் பிறந்த, 8 இல் செவ்வாய் 50 பாவமுடைய, லண்டனில் வசிக்கும் பட்டப் படிப்பு முடித்து தொழில் புரியும் மணமகளுக்குத் தகுந்த மணமகன் தேவை.
தொடர்பு:-
004747944944
mathusena@yahoo.com
(23606)(15-6)

விளைத்திறன், பதவியுயர்வு பரீட்சைகளுக்கான வகுப்புகள்

ஆரம்பம்: 21.10 ஞாயிறு பி.ப 2.00 மணி
* அரச முகாமைத்துவ உதவியாளர் தரம் II க்கான விளைத்திறன்.
* அரச முகாமைத்துவ உதவியாளர் தரம் II இலிருந்து தரம் I பதவியுயர்வு.
* தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் II விளைத்திறன்.
* நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் I* II* விளைத்திறன்.
போன்ற பரீட்சைகளுக்கு
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரிவீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)
(6/41/8/13.14)

No .1 Bairaha கோழிக்குஞ்சு விற்பனை

ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் Bairaha முதற்தர கோழிக்குஞ்சு விநியோகம் செய்யப்படும். யாழ். மாவட்டம் பூராகவும் கிளிநொச்சி மற்றும் A - 9 வீதியிலுள்ள அனைத்து இடங்களுக்கும், உங்கள் இடங்களுக்கும் கொண்டுவந்து தரப்படும்.
தொடர்புகளுக்கு : 077 9959382 (ரவி)
(24433)(6-8.14)

பொருளியற் கல்லூரியும் E-TRANSITIONம் இணைந்து நடாத்தும்
மாபெரும் இலவச GIT கருத்தரங்கு
வருகின்ற 21.10.2012 அன்று நடைபெறும் இறுதிப்பரீட்சைக்கான முன்னோடிக்கருத்தரங்கு
முற்றிலும் எதிர்பார்க்கப்பட்ட கொழும்பு மாவட்ட மாதிரி வினாத்தாள் செய்முறை விளக்கத்துடன் கலந்துரையாடப்படும்.
இலவச கையேடுகள் வழங்கப்படும்
இடம்: பொருளியற் கல்லூரி
காலம்: 19.10.2012 வெள்ளிக்கிழமை
நேரம்: காலை 9.00 மணி
(24474)
E-TRANSITION
SOFTWARE DEVELOPMENT COMPANY
TRANSITION 166/3,NAVALAR ROAD, JAFFNA. TP:021-2219230 WWW.ETRANSITION.NET

மாபெரும் இலவச GIT கருத்தரங்கு
SCIENCE HALL & E-TRANSITION
இணைந்து நடாத்தும்
முற்றிலும் எதிர்பார்க்கப்பட்ட கொழும்பு மாவட்ட மாதிரி வினாத்தாள் செய்முறை விளக்கத்துடன் கலந்துரையாடப்படும்.
இலவச கையேடுகளும் வழங்கப்படும்
இடம்: சயன்ஸ் ஹோல்
காலம்: 19.10.2012 வெள்ளிக்கிழமை
நேரம்: காலை 9.00 மணி
E-TRANSITION
SOFTWARE DEVELOPMENT COMPANY
TRANSITION 166/3,NAVALAR ROAD, JAFFNA. TP:021-2219230 WWW.ETRANSITION.NET

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.